பக்கங்கள்: 24

Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 சுக்கில ஞூ சித்திரை மீ 01 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 17 (14—04—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 10

## நல் வாழ்த்துகள்!

பிறந்திருக்கும் பிரமோதூத புத்தாண்டில் வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் எல்லா நலன்களும், வளங்களும் கிடைக்க

**உதயன்-சஞ்சீவியின்**

நல்வாழ்த்துகள் உரியனவாகுக!

## பிறந்தது பிரமோதூத

பிரமோதூத புதுவருடம் நேற்றுப் பின்னிரவு 47 நாடி 42 வினாடியில் (ஆங்கிலக் கணக்குப்படி இன்று அதிகாலை 1 மணி 11 நிமிடத்துக்குப்) பிறந்துள்ளது.

புதுவருடம் இன்று அதிகாலை 3.56 மணிக்கு பிறப்பதாகத் திருக்கணித பஞ்சாங்கம் தெரிவித்தது.

விஷு புண்ணிய காலம் வெள்ளி இரவு 9.10 மணி முதல் இன்று காலை 5.10 மணிவரை என்று வாக்கிய பஞ்சாங்கம் தெரிவிக்கிறது. வெள்ளி இரவு 11.56 மணி முதல் இன்று காலை 7.56 மணிவரை என்று திருக்கணித பஞ்சாங்கத்தில் உள்ளது.

புத்தாண்டுச் சுப காரியங்களைச் செய்யத் தகுந்த நேரங்கள்;

(1) இன்று காலை 8.04 மணிமுதல் 8.50 மணிவரை
(2) இன்று காலை 9.21 மணிமுதல் 10.28 மணிவரை.

கைவிசேஷம் வழங்குவதற்கு உகந்த காலம்:-

வாக்கிய பஞ்சாங்கப்படி:

இன்று (சனிக்கிழமை) — காலை 6.11மணிமுதல் 7.49 மணிவரை.

திங்கட்கிழமை (16-4-90) காலை 9.56 மணிமுதல் 11.54 மணிவரை. பி. ப.2.14

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றி ஆராய்ந்து மேலும் உதவிகளை வழங்க பல வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் புனரமைப்பு, நிவாரண வேலைகளுக்கு உதவி வழங்கி வருகின்றன.

அந்த வேலைகளின் முன்னேற்றங்களை கண்டறியவும் மேலும் எந்த வித உதவிகளை வழங்க வேண்டும் என்பது பற்றி ஆராயவுமே இவர்கள் வருகிறார்கள்.

யுனிசெப், யு.எஸ்.எயிட்ஸ், யு.என்.எச்.சி.ஆர், யு. என். டி. பீ. போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். (இ-3)

## பிரபா - ஹமீத் சந்திப்பில் இணக்கம்:

# வடமராட்சியில் மூடப்பட்ட பொலீஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப்படும்!

## புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல். 14

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் கடந்த புதன்கிழமையன்று மூடப்பட்ட இரு பொலீஸ் நிலையங்களும் மீண்டும் திறக்கப்படும்.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், இலங்கை நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி, எஸ். ஹமீத்துக்கும் இடையில் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெற்ற பேச்சுக்களின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டது.

*வடக்கு, கிழக்கில் சட்டம், ஒழுங்கு நிலைமைபற்றியும் — தமிழீழத்தில் நடைபெறும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றியும் — அவை சரியான முறையில் துரிதமாக செயற்படுத்தப்படவேண்டிய அவசியம் பற்றியும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டது.*

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறையில் நடைபெற்ற அசம்பாவிதங்களையடுத்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் அமைந்திருந்த இரு பொலீஸ் நிலையங்களும் மூடப்பட்டன என்பது தெரிந்ததே.

நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது இந்தபொலீஸ் நிலையங்களை மீளத் திறப்பது தொடர்பாக அமைச்சர் ஹமீத் வெளியிட்டகோரிக்கை விடுதலைப் புலிகள் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. பிரபாகரனைச் சந்திப்பதற்காக நேற்றுக் காலையில் பலாலி வந்திறங்கிய அமைச்சர் ஹமீத்தை விடுதலைப் புலிகள் அங்கிருந்து வரவேற்று பாதுகாப்புடன் நல்லூருக்கு அழைத்து வந்தனர்.

நல்லூரில் இதற்கென விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் இடத்தில் ஜனாப். ஹமீத், திரு. பிரபாகரனைச் சந்தித்தார்.

காலை 10 மணிக்கு ஆரம்ப

(3ஆம் பக்கம் பார்க்க)



சந்திப்பின்போது அமைச்சர் ஹமீத், தலைவர் பிரபாகரன் ஆகியோர் படத்துக்குப் போஸ் கொடுத்த காட்சி.

## ஈழத் தமிழர் குழுக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சி தொடரும் என்கிறார் இந்திய மந்திரி

புதுடில்லி, ஏப். 14

இலங்கைத் தமிழ்க் குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த தமிழக முதலமைச்சர் கருணாநிதி மேற்கொண்ட பேச்சுக்களில் இதுவரை தீர்க்கமான முடிவுகள் கிடைக்கவில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் புதுடில்லி லோகசபைக் கூட்டத்தில் நான் கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழர் அமைப்புக்களிடையே சமரசத்தை ஏற்படுத்தும் இந்தியாவின் முயற்சி தொடருவதாக உள்துறை அமைச்சர் முப்தி செய்யத் மகமத் லோகசபையில் தெரிவித்தார். (ஒ-எ)

## புத்தாண்டு சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறை யாழ் நகர்ப்பகுதி புத்தாண்டுக் களைகட்டியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ் நகரப் பகுதியிலுள்ள புடைவைக்கடை, பலசரக்குக்கடை ஆகியவற்றில் ஏராளமானவர்கள் கூடி தம் பொருள்களைக் கொள்வனவு செய்ததை நேற்றுக் காணக்கூடியதாக இருந்தது. (இ-3)

## 'எய்ட்ஸ்' சோதனையின் பின்பே சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு!

கொழும்பு, ஏப் 14

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்களுக்கான தொழில் பெர்மிட் பெறவிரும்பும் இலங்கைப் பெண்கள் இனிமேல் எய்ட்ஸ்நோய் பரிசோதனைக்கு முதலில உட்படுத்தப்படுவர்.

சிங்கப்பூர் தொழில்அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்போது சுமார் ஐம்பதா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குடியேற்றத் தகவல்களைத் திரட்ட மட்டுமே ஜனாதிபதி ஆணைக் குழு!

### முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அதற்கு இருக்காது

யாழ்ப்பாணம், ஏப் 14

வடக்கு-கிழக்கில்குடியேற்ற விவரங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டி அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காகவே விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும்,

குடியேற்றப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் உத்தேச ஜனாதிபதி ஆணைக்குழு ஈடுபடாது.

விடுதலைப் புலிகளின் உயர் வட்டாரங்களைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின்பிரதிநிதிகளுக்கும். ஜனாதிபதி

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை விசேட ரயில்

யாழ்ப்பாணம், ஏப். 14

காங்கேசன்துறையில் இருந்து விஷேச ரயில் சேவை ஒன்று நாளை 15ஆம் திகதி கொழும்புக்கு நடத்தப்பட இருக்கிறது.

வழமையான ரயில் சேவைகளைவிட மேலதிகமாக இந்த ரயில் சேவை நாளை மாலை 5.45க்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும். யாழ். ரயில் நிலையத்தை அடைந்து அங்கிருந்து 6.15க்கு கொழும்பு நோக்கிப் புறப்படும்.

கொழும்புக் கோட்டையை திங்கள் அதிகாலை 3மணிக்கு சென்றடையும். (இ-3)

## நோன்பு திறக்கும் நேரம்

14-04-1990
ஸஹர் முடிவு 4-28
நோன்பு திறக்கும் நேரம் 6-19

## இன்று பக்கங்கள் இருபத்தி நான்கு

இன்றைய சஞ்சிவி மூன்று பகுதிகளாக மொத்தம் 24 பக்கங்களில் வெளியாகிறது.

1. புத்தாண்டுச் சிறப்பு மலர்: 10 பக்கங்கள்
2. சஞ்சிகைப் பகுதி: 8 பக்கங்கள்
3. செய்திப்பகுதி: 6 பக்கங்கள்.

மூன்றையும் தவறாது கேட்டு வாங்குங்கள்.

## சுப நேரம்

14-04-1990
சனிக்கிழமை சித்திரை 1

சுபநேரம்:
03-05 முதல் 04-35 வரை

இராகுகாலம்
09-05 முதல் 10-35 வரை

தமிழ்-சிங்கள புது வருடம்

## 19 அடிப்படை கோரிக்கைகள் பேச்சுக்கு முன் நிபந்தனை அல்ல!

### ஈ. பி. ஆர். எல். எவ். பிரேமச்சந்திரன் கூறுகிறார்

கொழும்பு, ஏப் 14

"நாம் முன்வைத்துள்ள 19 அம்சக் கோரிக்கைகளும் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விதிக்கப்பட்ட முன் நிபந்தனைகள் அல்ல; தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை எடுத்துக் காட்டும் கோரிக்கைகளேயாகும்"

இப்படிக் கூறினார் ஈ. பி. ஆர். எல். எப். மத்திய குழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. பிரேமச்சந்திரன்.

இது சம்பந்தமாக திரு. பிரேமச்சந்திரன் சஞ்சீவிக்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை கலைப்பது பற்றி எமக்கு கவலை இல்லை. அதிகாரம் இல்லாத சபையாகவே இது அமைந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் மூலம்

(3ஆம் பக்கம் பார்க்க)

★ நண்பர்கள்
★ வாடிக்கையாளர்கள் மற்றும்
எல்லோருக்கும் எமது மனங்கனிந்த இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்
புதிய ஈழம் மலரட்டும்!
தமிழ் மணம் பரப்பட்டும்!!
தங்க நகைகளை விற்க நினைத்திடும் போது தவறாமல்
நீங்கள் நாட வேண்டிய
★ தனியார் வர்த்தக நிறுவனம் ★
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
உரிமையாளர்: இராஜகோபால் — சந்திரன்
423, (247), கே. கே. எஸ். றோட்,
(சிவன் கோவிலடி)
யாழ்ப்பாணம்.
[சி-4257]

## இலங்கை வங்கி கிளைகள் திருப்திகரமான சேவை

### பொது முகாமையாளர் செய்தி

யாழ்ப்பாணம் ஏப் 14

"மலரும் புத்தாண்டில் வடபிராந்தியத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் நிறைவான திருப்திகரமான சேவையை மக்களுக்கு வழங்க முடியும்."

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் திருமதி ரோகினி நாணயக்காரா இலங்கை வங்கியின் முகாமைத்துவத்தினால் விடுக்கப்பட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

மலரும் புத்தாண்டில் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைபெற்று சுபீட்சம் பெருகவேண்டுமென இலங்கை வங்கி முகாமைத்துவம் நம்பிக்கையோடு வாழ்த்துகின்றது.

இலங்கை வங்கிக் கிளைகள் பணக் கொடுக்கல் வாங்கல் உட்பட பல பணிகளையும்

( 3ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட டாக்டர் அன்ரன் பாலசிங்கம, அமைச்சர் ஹமீத், திரு. யோகரட்ணம் யோகி. தலைவர் திரு. வே. பிரபாகரன். திரு. ஸ்டான்லி டொமினிக். திரு. சோ. மகேந்திரராஜா (மாத்தயா) ஆகியோர்.

புதுமையும் எழிலும் வாய்மையும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 மாத Dober Mann pin-cher இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு A. யோகானந்தா ஆசிரியர், தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. (3263)

வவுனியாவில் பத்தினியார் மகிளங்குளத்தில் [ யாழ்ப்பாணம் கண்டி வீதியின் அருகாமையில் ] 6½ ஏக்கர் நெற் காணி விற்பனைக்குண்டு. ( இது வவுனியா ரவுணிலிருந்து 1Km தூரத்திலுள்ளது) விபரங்களிற்கு கிருஷ்ணசாமி ஓவசியர், கிருஷ்ண இல்லம், பத்தினியார் மகிளங்குளம், வவுனியா. அல்லது 36, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (3247)

நல்ல நிலையில் உள்ள TA-ILORS SEWING MODEL தையல் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல 15, சென்பீற்றேஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (12903)

புத்தம் புதிய Unit-a ரஷ்ய Record Player (5500/-) Amplifier (6500/-), Speaker box (8000/-) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல: 07, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3238)

கடைக்குரிய தளபாடச் சாமான்கள் விற்பனைக்குண்டு. நேரில்வரவும். பிரபா சிற்றி சொப் 18, விதானையார். வீதி, கண்டிக்குளியாழ்ப்பாணம். (12901)

### விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

சோதிட மலர் புத்தாண்டுச் சிறப்பிதழ், புத்தாண்டுப் பலன்கள் இன்னும் பல சோதிட விஷயங்கள் அடங்கியுள்ளது. விலை ரூ 10/- கிடைக்குமிடம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். வெளியீடு திருக்கணித நிலயம், சாவகச்சேரி. (3256)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். BIN-DER தேவை. SECOND HAND BOOK HOUSE, 13/6, ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கி முரசொலிக்கு முன் பட்டப் படிப்புகல்லூரி, கண் சிகிச்சை நிலைய லேன்) யாழ்ப்பாணம். (3255)

### காணி விற்பனைக்கு

மாவிட்டபுரத்தில் யாழ். K.K.S பிரதான வீதியருகே கிணற்றுடன் வீட்டுக்காணி 4 பரப்பு. தொடர்பு: DINESH-ER. 27-C, DE SAR M ROAD, MOUNT LAVIN-IA. [3229]

### உடன் விற்பனைக்கு

சகல வசதிகள் உள்ள வீட்டுடன் 4 பரப்புக்காணிஉடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.P செல்வத்துரை [ இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்] நாச்சிமார் கோவிலடி, கூளாவடி, ஆனைக்கோட்டை. (3261)

### காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கு மானிப்பாயில் எச்சாட்டி வைரவர் கோவிலடியில் கிணற்றுடன் கூடிய வீடும், 8 பரப்பு காணி சகல பிரயோசனத்துடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு பீற்றர், 29/53, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம். (3241)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மணவர்களுக்கான பொருளியலாளன் செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர் ( புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [பிலிமத்) சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன் வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3202)

Hyline வெள்ளை, சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு(புலிமத்) சேவற் குஞ்சுகள் 17-4-90 (செவ்வாய்க்கிழமை) யும் Golden Com-et பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 18-4-90 புதன்கிழமையும்விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (3267)

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 18-04-90 (புதன்கிழமை) விநியோகிக்கப்படும். சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (3266)

Hyline சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். லக்கி பாம் கவுஸ், மதவடிலேன், திருநெல்வேலி. (12288)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

கறுப்பு (பிலிமத்) சேவல் குஞ்சுகள் (17-4-1990) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [3264]

இன்று (14-04-1990) சனிக்கிழமை வான் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். இல 9 கந்தையா லேன், சுன்னாகம்(புகையிரத நிலையத்துக்கு அருகில்) (3265)

### தேவை

பாலர்வகுப்பிலிருந்து [A/L] வரை தங்களால் இயன்ற பாடங்களை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. சகல பெறுபேறுகளுடனும் அனுபவங்களுடனும், விண்ணப்பிக்கவும். காலை 6 8, மாலை 2-3 இற்குள் நேரடியாகச் சந்திக்கவும் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். க. ஆறுமுகநாதன், கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (3253)

Audio Recording செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. கடையில் Sales Girls தேவை. Sky Rose No.1 Hospital Road, Jaffna. (3246)

ஆங்கிலத் தட்டெழுத்தில் அனுபவம் English Typing உள்ள பெண் காசாளர் தேவை. உடன் தமது சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். Globe Industries 173, 4th Cross Street Jaffna. (12314)

### மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள குல 36 வயதுடைய B.A. Dip. in. Ed ஆசிரியைக்கு மணமகன் தேவை. பெறுமதியான வீடு வளவுடன் போதியளவு சீதனம் வழங்கப்படும். சாதகம், பதவி, குடும்ப விபரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். இல671C/o உதயன். (3258)

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள 28 வயதுள்ள பிரான்ஸில் நிரந்தர விசாவிலிருக்கும் மணமகனுக்கு அந்நாட்டில் இருக்கும் 22-25 வயதுள்ள பெண்ணை எதிர்பார்கிறார்கள். அண்மையில் எடுத்த புகைப்படம், குறிப்பு, மறுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். இல: 674, C/o உதயன். (3240)

யாழ், இந்து வேளாள குல 30வயது உடைய அரசபதவி வகிக்கும் குடிபழக்கமற்ற மகனுக்கு நற்பண்புள்ள மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். இல.673, C/o உதயன்.. (32 39)

### வாடகைக்கு வீடு தேவை

கொக்குவில், கொண்டாவில், இணுவில், ஆகிய இடங்களில் சிறிய வீடு தேவை. வாடகை ரூபா 300 க்கு உட்பட்டது. நேரில் வரவும் 31, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் (லைடன் காமன்ஸ் அருகில்) (3260)

### சேவை

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக் கொள்ளவும் பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும். நாடுங்கள்:, பாரத் வீடியோ சென்ரர் 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4256)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

### Spoken English

Practice Makes Perfect Series 1-7 ஆங்கிலம் வாசித்து விளங்கப் பேசஎழுதஉதவும் கைநூல்கள் தயாரிப்பு S. B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (12319)

### கல்வி

O/L தொடக்கம் பல்கலைக் கழகம் வரையுள்ளவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினால் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். S. ஜெயராஜா கல்யாணி ஆங்கிலகல்வி நிலையம்.204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2873)

### Marriage Centre

Master Numerology Marriage Centre திருமணம் ஆகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். நியூமரோலஜி சோதிட முறையில் பொருத்தம் பார்த்து அதிஷ்டகரமான திருமணம் செய்து வைக்கப்படும். Numerology Master, C. K Srirajarajeas-waran Vaitheeswara, Veethi. Valvettiturai (2888)

### இனாம்

மருதடி வினாயகர் முன் வீதியில் அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் வருடப் பிறப்பன்று 14-4-1990 ¼ Kg கோப்பியை வாங்கி 1 எவர் சில்வர் ரம்ளரை இனாமாக பெற்றுக் கொள்ளுங்கள். இது வருடப்பிறப்பன்று மட்டுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அண்ணா தொழிலகம் இணுவில். (சி/1345)

### Numerology Centre

நியுமரோலொஜி கலையின் அதிஷ்ட இரகசியங்களை அறிந்து கொண்டு நீங்களும் அதிஷ்டசாலிகள் ஆகலாம். உங்கள் சகல பிரச்சினைகளும் நீக்கி வைக்கப்படும். உங்கள் பிரச்சினைகள் என்ன? விபரத்திற்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Numerology Master, C. K. Srirajarajeaswaran, Vaithees wara Veethi, Valvettiturai. (2887)

### கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் விசேட திறமைச் சித்தியை விரும்புபவர்களுக்கும் தொடர் வகுப்புகள் மூலம் 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஒரு மாதத்திற்குள் சகல போசன்களும் நிறைவேற்றப்படும். A/L வரையும் சகல பாடங்களும் இலக்கணத்துடன் பேச்சு ஆங்கிலமும் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [3252]

### BRIDE WANTED

Jaffna Hindu Vellala Parents seek for partner with Permanant Residence in States or England for their Doctor son working in UK. No. 664 C/o Uthayan. (3259)

### நாடக நூல்கள்

150 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு நாடக நூல்கள் ''கெட்டிக்காரர்கள்'' 25/ ; முதலாம்பிள்ளை'' 30/- கதையாக வாசிப்பதற்கும் மேடையில் நடிப்பதற்கும் 19 நாடகங்கள் (3251)

### வாடகைக்கு

சுண்டுக்குழி பரியோவான் கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் மாணவமர் ணவியர்களுக்கு அறை வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு No,675 C/o உதயன். (சி/4281)


## வீதிகள் சீரழிவு

தாளையடி, ஏப். 14

வடமராட்சி கிழக்கில் வீதிகள் பழுதடைந்துள்ளன. இதனால் இப்பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாகபருத்தித்துறை-மருதங்கேணி வீதி சீரழிந்த நிலையில் குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. இவ்வீதியில் அம்பன் என்ற இடத்தில் அண்மையில் இடம்பெற்ற பஸ்விபத்து ஒன்றில் பாதசாரியான பாடசாலை மாணவி ஒருவர் காயமடைந்தார். (இ-144)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### அமரர் S. T. சந்திரகுமார்

(கிராம சேவையாளர் சரம்பன் மேற்கு)

பிறப்பு: 04 - 01 - 1954

அந்நியர் அழிப்பு: 14 - 04 - 1989

உமது பண்பு, பாசம், இரக்கம், சாந்தகுணத்தையும் மறவாத அரசாங்க உத்தியோகஸ்தர்கள், கரம்பன் கிராம மக்கள் நண்பர்கள், அயலவர்கள், இனத்தவர்கள்.

அன்புத் தம்பி இவ்வளவு காலமும் நம்பியிருந்த எனக்கு கண்ணீரை பரிசாகத் தந்துவிட்டுச் சென்றீர் ஆறுதல் சொல்வார் யாருமில்லை தனி மரம் போல் நின்று தாங்கமுடியாத கவலையினால் நானும் அம்மாவும் மண்ணில் மடிந்து வாழ்கின்றோம்.

நீர் அன்பாக வளர்த்த டாளோ உமது வரவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்.

அன்பு அம்மா – செ. பாக்கியம்,
அருமை அக்கா – செ. சகுந்தலாதேவி

8, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். [12312]

## ஓராண்டு நினைவலைகள்



### திரு. கனகரட்னம் முருகரட்னம்

தோற்றம்: 22-11-1923

மறைவு: 14-4-1989


தெய்வத்தின் நோக்கறிதல்
மானிடர்க்கு கடமை
தெளிந்தபடி நடந்திடல்தான்
செகத்திலறிவுடமை
உள்ளத்திலே சொல்லினிலே
செயலிலே சமுதாயப் பணியை
தலையாய தென்று புரிந்தீரே
உமது ஆத்மா சாந்தியடையவே
ஓராண்டு உருண்டு ஓடி விட்டாலும்
மீண்டும் மீண்டும் புத்தாண்டு
மலரும் போது உமது நினைவுகள்
நீங்காது ஐயா!


உமது நினைவில் வாழும்;
அன்பு மனைவி ராஜேஸ்வரி, மகள் சுதர்ஷனி, மகள் வாசுகி, மகன் வசந்தமோகன், மருமகன் பாலசுப்பிரமணியம், மருமகள் பிரேமலதா, பேரப்பிள்ளைகள் கேசவன், துளசி, லக்ஷ்மன்.

10, டச்சு றோட்,
தெல்லிப்பளை. (3156)

## முதலாம் வருட நினைவஞ்சலி







**செல்வன் S. யேசுராஜா**

தோற்றம்: 14-03-1962 மறைவு: 15-04-1989

**செல்வன் S தயாபரன்**

(நொர்தேன் பார்மஸி)

தோற்றம்: 21-10-1961 மறைவு: 14-04-1989

திதி: 03 — 05 — 1990

**செல்வன் R சண்முகராஜா**

(ரதி வோச்)

தோற்றம்: 02-10-1961 மறைவு: 23-04-1989

திதி: 12 — 05 — 1990

14-04-1989 இல் புதுவருடத்தன்று ஆலடியில் விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
நண்பர்கள், பெற்றோர், உறவினர், நண்பர்களும். [3195]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எய்ட்ஸ்" நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க ஆயுர்வேத நிபுணர் குழு!

எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க பிரபல ஆயுர்வேத வைத்திய நிபுணர்கள் கொண்ட சபை ஒன்றை சுதேசிய வைத்தியத் துறை அமைச்சு நியமிக்க உள்ளது.

பாரம்பரிய ஆயுர்வேத சிகிச்சை முறையைப் பயன்படுத்தி எய்ட்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் எச். பி. வன்னிநாயக்கா சொன்னார்.

இந்த முயற்சிக்கு நாவின்ன பண்டாரநாயக்க ஆராய்ச்சி நிறுவனம் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

தேவையேற்படின் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியும் இந்த ஆராய்ச்சிக்கு பெறப்படும் என்று அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார். [உ-எ]

## திருமலை ஆஸ்பத்திரியில்

# மின்சாரம் மற்றும் கட்டட திருத்த வேலைகள் தாமதம்

திருகோணமலை, ஏப்ரல் 14

திருகோணமலை ஆஸ்பத்திரியில் மின்சாரம் மற்றும் கட்டடத் திருத்த வேலைகள் கவனிக்கப்படுவதில் தாமதம் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இத்திருத்த வேலைகளை ஆஸ்பத்திரி நிர்வாகம் நேரடியாகக் கவனிக்க முடியாத நிலையினால் இந்தத் தாமதம் ஏற்படுகிறது.

ஆஸ்பத்திரியில் ஏற்படும் மின்சாரம் சம்பந்தப்பட்ட திருத்த வேலைகளை இலங்கை மின்சார சபையும், கட்டடங்கள் சம்பந்தமான வேலைகளை கட்டடத் திணைக்களமும் கவனித்து வருகின்றன.

## ஹபரணைப்பகுதியில்

# உல்லாசப் பயணிகளிடம் பணம்-பொருள்கள் கொள்ளை

கொழும்பு ஏப் 14

ஹபரண பகுதியில் மொரசஸ் வேவா என்னுமிடத்தில் வைத்து இரண்டு வாகனங்களில் பயணம் செய்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆயுதம் தரித்த கோஷ்டியினரால் கொள்ளையிடப்பட்டனர்.

கடந்த செவ்வாய் இச்சம்பவம் இடம் பெற்றது.

உல்லாசப் பயணிகளிடம் இருந்து 14 லட்சம் ரூபா பெறுமதியான பணம், மற்றும் பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

ஹபரண காடுகளில் பொலிஸார் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஆறு பொலீஸ் குழுக்களை பொலீஸ்மா அதிபர் நியமித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்டவர்கள் மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம் நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். (இ-எ)

## தொண்டைமானாறு

# வெளிக்கள நிலையம்

## ரூ $7\frac{1}{2}$ லட்சத்தில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஏழரை லட்சம் ரூபா செலவில் உடனடியாகப் புனரமைப்புச் செய்யப்படும்.

மே மாதத்தில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்படும்.

மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் திரு இ. ஜே. சற்குணராஜா தொண்டைமானாறுக்கு விஜயம் செய்து வெளிக்கள நிலையத்தை பார்வையிட்டார்.

அப்போதே புனரமைப்புச் செய்வதற்கான உத்தரவை அவர் விடுத்தார். [ஒ-உ]

# கூட்டுறவுச் சட்டங்கள் தீவிரமாக அமுல் செய்யப்படும்

யாழ்ப்பாணம் ஏப் 14

நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதால் கூட்டுறவுச் சட்டங்கள் தீவிரமாக அமுல் செய்யப்பட உள்ளன.

யாழ் - மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்து இருந்ததால் கூட்டுறவுச் சட்டங்களும் அமுல் செய்யப்படாது இருந்தன. தற்சமயம் நிலைமை சீரடைந்துள்ளதால் கூட்டுறவுச் சட்டங்கள் கடுமையாக அமுல் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ 3)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப் 15

ஆத்மஜோதித் தத்துவஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாஸன் எழுதிய பிரமோதூத வருஷ பலன்களும் ஸ்ரீ ரமண பகவான் அருளிய தத்துவஞானமும் அடங்கிய நூல் வெளியீட்டு வைபவம் இன்று சனிக்கிழமை காலை 11-30 மணியளவில் கீரிமலை யோகசுவாமி மகளிர் தவ நிலையத்தில், திரு. வ. செல்லையா தலைமையில் நடைபெறும். அன்றைய தினம் பூசைகளும், ஆராதனைகளும் இடம்பெறும். (இ)


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு

இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஸ்ரீ கிருஷ்ணா இன்டஸ்ரீஸ்**

எம்மிடம் தரமான, சுத்தமான

★ தேங்காய் எண்ணை ★ பிண்ணாக்கு

நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: 226

718, கைத்தொழிற்பேட்டை,
அச்சுவேலி. (3192)


# எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் கடிதம்

கொழும்பு, ஏப்ரல் 14

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லா அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் கேட்டுள்ளது.

ஜனாதிபதி திரு.ஆர் பிரேமதாசாவுக்கு, வியாழக்கிழமை இரவு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் உள்ள ஏனைய முக்கிய பகுதிகள் வருமாறு:-

நாம் வெளியிட்ட 19 அம்ச கோரிக்கை மாகாண சபையால் ஏற்கப்பட்ட ஒன்றாகும்— நிறைவேற்றப்பட்டதாகும். தமிழ் மக்கள் சுய கௌரவத்துடன் வாழ அவற்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்து.

ஐக்கிய இலங்கையில், தமிழ் மக்கள் தமது சுய கௌரவத்துடன் வாழக்கூடியதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அரசியல் நேர்மையுடனும், நீடித்த தீர்வு தரக்கூடியதாகவும் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

அதற்கு அரசியல் கூட்டு முயற்சி தேவை. ஆகையால் எம்மையும், ஏனைய அரசியல் கட்சிகள், குழுக்களுடனும் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

கடந்த 10 மாதங்களாக நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி வருகிறீர்கள். அந்தப் பேச்சுக்களின் சாராம்சம் கூட வடக்குக்கிழக்கு மக்களுக்கோ, எமக்கோ, நாட்டுக்கோ தெரியாது.

நீங்கள் நடத்தும் பேச்சுக்களின் முக்கியத்துவத்தையும். தங்கள் அந்தரங்கத்தையும் நிராகரிக்கமாட்டோம். (அ-2)

# மாணவர் கிளர்ச்சிக்கு மீண்டும் முஸ்தீபுகள்!

## படையினருக்கு உஷார் உத்தரவு

கொழும்பு, ஏப் 14

நாட்டின் தென்பகுதியில் மீண்டும் மாணவர் கிளர்ச்சியைத் தூண்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சில் உள்ள இராணுவ செயற்பாட்டுத் தலைமையகம் பாதுகாப்புப் படையினரை உஷார் படுத்தி உள்ளது.

இது சம்பந்தமான அவசரக் குறிப்பு ஒன்றை இத்தலைமையகம் சகல பாதுகாப்புப்படை பிரிவுகள் மற்றும் பொலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

"பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் புதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு முடிந்ததும் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நாடு தழுவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர் கிளர்ச்சியை ஒழுங்கு செய்வதில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஈடுபட்டு வருகிறார்."

இப்படி பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் காங்கிரஸுடன் நிபந்தனை அற்ற பேச்சு

## விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 13

வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதில் முஸ்லிம் காங்கிரசின் முக்கியத்துவத்தை விடுதலைப் புலிகள் மறந்துவிடக்கூடாது. எனவே யதார்த்தத்தினைப் புரிந்துகொண்டு வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் முஸ்லிம் காங்கிரஸுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான ஜனாப் சேகு இஸ்ஸதீன் சஞ்சீவிக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆட்சியில் இல்லாவிட்டாலும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் அதிகாரத்தை வைத்துக் கொண்டுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியின் நல்லெண்ணத்தையும் நீடித்த சமாதானத்துக்கான அபிலாசைகளையும் புலிகள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது.

வடக்கு கிழக்கின் நிரந்தர அமைதியும் பாதுகாப்பும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளைக் கருத்திற் கொண்டதாக அமையவேண்டும்.

விடுதலைப் புலிகள் இன்று செய்யும் மிகப் பெருந்தவறு முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், சுயநிர்ணயத்தையும் அங்கீகரிக்காமல் விடுவதாகும்.

முஸ்லிம் காங்கிரசின் அனுசரணையுடனேயே வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்கவோ அல்லது 6ஆவது திருத்தத்தை நீக்கவோ அல்லது தமிழ் மாகாணங்களின் எதிர்கால அதிகாரப் பரவலாக்கத்தையும் சுயநிர்ணயத்தையும் தன்னாதிக்கத்தையும் தீர்மானிக்கவோ முடியும் என்பதனை விடுதலைப் புலிகள் உணர மறுக்கக்கூடாது.

இப்படி அவர் கூறினார்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி விஸ்வலிங்கம்

திருமதி நாகேஸ்வரி விஸ்வலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், மனோகரன், திருமதி லீலாவதி சரவணபவான், இரத்னாகரன் (யாழ். மாநகர சபை), திருமதி பிரேமவதி ஜபசீலன் (இலங்கை வங்கி), ஸ்ரீஹரன் (நில அளவையாளர் - விரிவுரையாளர், தொழில்நுட்ப கல்லூரி), திருமதி இலகவதி துரைரத்தினம், திருமதி ரூபவதி நகுலநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தேவமலர் மனோகரன், சரவணபவான், திருமதி ராஜேஸ்வரி இரத்னாகரன், ஜெயசீலன், திருமதி நாகேஸ்வரி ஸ்ரீகரன், துரைரத்தினம், நகுலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகேந்திரன், இராசேந்திரன், நகுலேந்திரன், தெய்வேந்திரன், பாலேந்திரன் மற்றும் காலஞ்சென்ற மகேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சுகந்தி பீட்டர் சனகசிங்கம், சுரேந்திரன், திருமதி வத்ஸலா பாலகுமரேசன், பாலகுமார், மஞ்சுளா, சுகன்யா, தர்மினி, சதீஸ்குமார், பிரதீஸ்குமார், கேதீஸ்குமார், யசோதா, தயாளன், பிரியந்தி, தர்ஷிகா, சூரியா ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிரோஷாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 - 04 - 90 ஞாயிறன்று காலை 9 மணியளவில் கோணாவளை வீதி இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை வீதி, கொக்குவில். | தகவல்: வி. மனோகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்பும் இனி ஒரு பாடமாகும்

கொழும்பு ஏப் 14

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பாடதானங்களில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பும் ஒன்றாக சேர்க்கப்படவுள்ளது.

சுற்றுப்புறச் சூழல் அமைச்சின் யோசனையை அடுத்து இது அமுல் நடத்தப்படுகிறது.

பட்டதாரிப் படிப்புக்கும் சூழல் பாதுகாப்பு ஒரு பாடமாக்கப்படவுள்ளது.

ஜீ. சீ. ஈ சாதாரண தரப் பத்திரபரீட்சைக்கும் இதை ஒரு பாடமாக்கும் சாத்தியக்கூறு பற்றிஆராயப்பட்டு வருகிறது. (உ-எ)

## 19 அடிப்படை --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போதிய அதிகாரங்களைப் பெறவே நாம் மாகாண சபையை ஏற்றோம். அதில் அங்கம் வகித்தோம்.

விடுதலைப் புலிகள் இந்த அதிகாரம் அற்ற மாகாண சபையை ஏற்க ஏன் அவசரம் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. அவசரமாக இந்த சபையை ஏற்பது புத்திசாலித்தனமானது அல்ல, என்பதே எமது கருத்து.

எமது இயக்கத்துக்கு இலங்கை அரசு பயிற்சி அளிப்பதாகத் தமிழகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பொய்ப் பிரசாரமாகும் அது- என்றார் அவர்.

திரு வரதராஜப்பெருமாள் எங்கிருக்கிறார் என்று சஞ்சீவி செய்தியாளர் கேட்டதற்கு- "அவர் எங்கிருக்கிறார் என்பதுகுறித்து பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் சொல்ல முடியாது- தகுந்த நேரத்தில் அவர் வெளியே வருவார்-" என்றார் திரு பிரேமச்சந்திரன். (அ-2)

## குடியேற்ற . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போது—

குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தனியான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிப்பது என முடிவு செய்யப்பட்டதாக வெளியான தகவல்கள் குறித்துக் கருத்துக் கேட்டபோதே அந்தப் பிரமுகர் இவ்வாறு சொன்னார்.

'உத்தேச ஆணைக்குழு ஐந்து ஆணையாளர்களைக் கொண்டிருக்கும். அவர்களில் மூவரின் பெயர்களை நாம் (விடுதலைப் புலிகள்) சிபார்சு செய்வோம். மற்றைய இருவரின் பெயர்களையும் அரசாங்கம் அறிவிக்கும்.

இந்த ஆணைக்குழு குடியேற்றம் தொடர்பாக தகவல்களைத் திரட்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் இருந்த மக்கள் தொகை, விகிதாசாரம், பரம்பல் ஆகியவை பற்றிய தகவல்களைத் திரட்டி முழு விவரம் கொண்ட ஓர் அறிக்கையை அந்த ஆணைக்குழு தயார் செய்யும்.

குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படமாட்டாது" —இவ்வாறு அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார். (உ—9)

## பிறந்தது . . .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மணிமுதல் 3. 03 மணிவரை.

திருக்கணித பஞ்சாங்கப்படி —

இன்று (சனிக்கிழமை) காலை 8. 04 மணி முதல் 8. 52 மணிவரை.

இரவு 6. 28 மணி முதல் 7. 40 மணிவரை.

திங்கள் (16 4 90) காலை 6. 35 மணிமுதல் 7. 47 மணி வரை. (அ- 126)

# திருநெல்வேலி கலாமன்ற விழா

யாழ்ப்பாணம் ஏப் 13

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு திருநெல்வேலி கலாமன்றத்தினர் சிறப்பு நிகழ்ச்சியாக விற்பனையையும் உள்ளக விளையாட்டுக்களையும் இன்று சனிக்கிழமை நடத்துகின்றனர்.

இது ஓர் முழுநாள் நிகழ்ச்சியாகும் இந்த ஏற்பாடுகளை விளையாட்டுக்கழக இணைச் செயலாளர்கள் செல்வன் ஏ. ஜெயகாந்தனும், செல்வி. சி. பமிலாவும் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# களப்பலியானோர் தியாகம் வரலாற்றிலே இடம் பெறும்

## தீவுப்பகுதி பொறுப்பாளர் உரை

எமது மக்கள் சொந்த மண்ணில் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள். தமிழ் மக்களின் விடுதலைக்காகக் களப்பலியான போராளிகளின் தியாகம் வரலாற்றுடன் இணைந்தது. நாம் எமது மக்களுக்காக போராடுகின்றோம் எமது லட்சியம் வெற்றிபெற பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் எமக்குக் கிடைக்க வேண்டும். குட்டி போன்ற வீரர்களின் மறைவு பேரிழப்பு.

விடுதலைப் போரில் பலியாகிய வீர வேங்கை குட்டி மற்றும் போராளிகளின் நினைவாகத் தூபியும் சிறுவர் பூங்காவும் அமைப்பதற்கான அடிக்கல்லை நட்டு உரை நிகழ்த்திய தீவுப்பகுதி விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

நெடுந்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் கே. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருவாளர்கள் இரா. சின்னத்தம்பி சு. நடராசலிங்கம் செல்வி ப. மன்றோசா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

மறைந்த வீர வேங்கை குட்டியின் தந்தையார் திரு எஸ். மருதப்பு விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

## எய்ட்ஸ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிரம் வெளிநாட்டுப் பெண்கள் சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்களாகத் தொழில் புரிகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் பிலிப்பீன்ஸ் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்களாவர்.

மேகநோய் மற்றும் கர்ப்பம் தரித்துள்ளமை போன்ற பரிசோதனைகளுக்கு ஆறு மாதகாலம் உட்படுத்தப்பட்ட பின்னரே தொழில்பெர்மிட் இவர்களுக்கு வழங்கப்பட்டது. [உ-எ]

## வடமராட்சியில் --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மான சந்திப்பு சுமார் மூன்றரை மணி நேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் தரப்பில் தலைவர் திரு வே. பிரபாகரன், பிரதித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் யோகி திருமதி பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு பானு. யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் ஆகியோர் பங்குபற்றினர்.

கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் பேச்சின்போது ஆராயப்பட்டதாகத் தெரிய வந்தது.

பேச்சுக்கள் மிகவும் சுமுகமான நிலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## சங்காபிஷேகம்

அச்சுவேலி, ஏப்ரல் 14

அச்சுவேலி நாவலம்பதி சாட்டுமலைக் கந்தசாமி கோயில் மகா சங்காபிஷேகம் இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் (இ-11)

## இலங்கை --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இன்னல் நிறைந்த காலகட்டத்தில் மேற்கொண்டது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அதற்கு பொதுசனத் தொடர்பு சாதனங்களும், மக்களும் பேராதரவு அளித்துள்ளனர் வங்கி ஊழியர்கள் முகாமைத்துவதிற்கு வழங்கிய தன்னலப் கருதாத சேவைக்கு நன்றியறிதலை தெரிவிக்க விரும்புகின்றோம்.

இப்படி அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

## தசாக அழைப்பு

சுக்கில வருஷம் பங்குனி மாதம் 25 ஆம் நாள் [07 - 04 - 90] சனிக்கிழமையன்று பறோளாய் முருகன் திருவடியை அடைந்த பிரம்ம ஸ்ரீ சுப்பையாக் குருக்கள் சிவானந்தன் அவர்களின் அபரக்கிரியை நிகழ்ச்சிகள் நிகழும் பிரமோதூத வருஷத்தில் பின்வருமாறு நடைபெறும்.

16 - 04 - 90 திங்கட்கிழமை - தசாகம் (11 மணியளவில்)
17 - 04 - 90 செவ்வாய்க்கிழமை - மாசியம்
18 - 04 - 90 புதன்கிழமை - சபிண்டீகரணம்
19 - 04 - 90 வியாழக்கிழமை - கிருகயக்ஞம்

மேற்படி கிரியைகளில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.

சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

"பிரசாந்தி நிலையம்",
69- சுவாமி ஞானப்பிரகாசர் வீதி,
உடுவில்,
சுன்னாகம். (12912)

# 1ஆம் ஆண்டு வீர அஞ்சலி



## அரியரட்ணம் சிறிதரன்

(கரும்புலி கப்டன் தாடி சிறி அண்ணா)

ஜனனம் 3 - 1 - 1959

வீரமரணம் 14 - 4 - 1989


சந்தர் மடத்தில்
களப்பலியான
கரும்புலியே!
இளமை வாழ்வின்
இனிமைகள் துறந்து
தாயக மண்ணின்
தளைகளை அறுத்து
விடுதலை பெற்றிட
விரைந்த வீரனே!
இலட்சிய வீரர்க்கு
இறப்பில் இல்லை
மக்கள் மனங்களில்
மரணிப்பதில்லை.

நினைவினில் வாடும்
பெரியதந்தை, அம்மா, சகோதரர்கள் சிறி, சிந்தா, சிதா, பாப்பா, மைத்துனன், குகன், ஹரிகரன் குடும்பத்தினர், நண்பர்கள், மருமகள் தரனியா, கொக்குவில் அக்காமார், அண்ணன் பிள்ளைகள், சண்டிலிப்பாய் வாழ் மக்கள்.

குகன்
சண்டிலிப்பாய்

(3165)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## சின்னத்தம்பி இன்பநாதன்

(வதிரி திருநெல்வேலி தேவரையாளி கல்லூரி முன்னாள் சிரேஷ்ட மாணவ தலைவன்)

அன்னையின் மடியில்: 04 - 09 - 1966

துரோகிகளால் அழிப்பு: 14 - 04 - 1989

சாவதற்கென்றே பிறக்கின்றார் பலர்
வாழ்வதற்கென்றே இறக்கின்றார் சிலர்
இறந்தும் இறவாப் புகழ் கொண்ட
நீயோ இறக்கவில்லை
எல்லோர் உளத்திலும் வாழ்கின்றாய்
உனைக் காணத் துடிக்கின்ற
உறவினர் தம் மத்தியில்
மீண்டும் வாராயோ

இ. சின்னத்தம்பி J. P.
குடும்பத்தினர்

''இன்பவாசம்''
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

[3199]

★ முதலாம் வருட மாணவர் அனுமதி:

# சட்ட விதிகளை மீறும் அதிபர்கள் மீது பெற்றோர் வழக்குத் தொடரலாம்

கொழும்பு, ஏப் 14

முதலாம் வருடத்தில் மாணவர்களை அனுமதிப்பதில் சட்ட விதிகளை மீறும் பாடசாலை அதிபர்கள்மீது வழக்கு தொடர பெற்றோருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

இத்தீர்மானத்தை அமைச்சர் லலித் அத்துலத்முதலி எடுத்து இருக்கிறார்.

முதலாம் வருட அனுமதிக்கு இந்த ஆண்டு முதல் பின்வரும் நடைமுறை அமுல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது:-

விண்ணப்பங்கள் முடிவுத் திகதி மே 15.

முதலாவது நேர்முகப் பரீட்சை ஜூலை 31க்கு முன் நடத்தப்பட வேண்டும்.

அனுமதி பெறாத மாணவர் சார்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் ஆகஸ்ட் 31க்கு முன்னர் அதற்கென நியமிக்கப்படும் மேன்முறையீட்டு சபையால் விசாரித்து முடிக்கப்பட வேண்டும்.

சகல அனுமதிகளும் செப்டம்பர் 30 ஆம் திகதி அளவில் இறுதியாக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் நிவாரணம் பெற அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சட்ட உதவி வழங்கப்படும்.

முதலாவது நேர்முகப் பரீட்சைபொதுமக்கள் அனைவரும் பார்க்கக் கூடியதாக நடக்கும்.

முதலாம் வருட மாணவர் அனுமதி தொடர்பான சகல நடவடிக்கைகளும் 'முதல் வரும் மாணவருக்கு...' என்ற அடிப்படையில் அமைந்திருக்கும்.

முதலாம் வருட அனுமதியில் ஒழுங்கீனங்கள் இடம் பெறாமல் தவிர்க்கவே இந்தப் புதிய நடைமுறை கொண்டு வரப்படுவதாக அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார். [உ-எ]

## முல்லைத்தீவில்

அன்னை பூபதியின் நினைவாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு முற்றவெளி மைதானத்தில் நடைபெறும்.

விசேஷ நிகழ்ச்சியாக மாட்டு வண்டிச்சவாரியும் இடம் பெறும். (இ-92)

## உடுவில் உ. அ. அதிபர் பிரிவில்

மானிப்பாய் - ஏப். 14

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்விளையாட்டு போட்டிகளும் கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்

பிற்பகல் 3.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம், சுன்னாகம் சிவன் சிறுவர் பாடசாலை ஆகியவற்றைசேர்ந்த மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், இணுவில் என். ஆர். சந்தானம் குழுவினரின் நாதஸ்வர இசையும் நடைபெறும். (இ-90)

## சுதேசிய திருநாள்

யாழ்ப்பாணம், ஏப். 14

அரியாலையில் நடைபெறும் 71 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 2 ஆம் நாளான இன்று சனிக்கிழமை காலை 6 30 மணிக்கு 5 மைல்பரதன் ஓட்டப்போட்டி நடைபெறும்.

பிற்பகல் 2.00 மணிக்கு சுதேசிய தீப மேற்றலும். சுதேசிய கொடி ஏற்றலும், பிற்பகல் 2.30 மணிக்கு மெய்வல்லுனர் போட்டிகளும் இடம் பெறும்.

கலை நிகழ்ச்சிகள் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் பரிசு வழங்குதலும் இடம் பெறும் இந்த நிகழ்ச்சி திரு. என். கிருஷ்ண சிங்கம் தலைமையில் நடைபெறும். (ர-7)

## சொற்சிலம்பம் இல. 111

### சரியான விடைகள்

#### இடமிருந்து வலம்

| | | |
|---|---|---|
| 1. மனக்கோட்டை | 5. துடை | 6. அளி |
| 7. அரங்கம் | 8. லஞ்சம் | 9. புவி |
| 10. அவதி | 11 பவனம் | 13. அகழி |
| 14. புத்தன் | 16. கல் | 17 கலி |

#### மேலிருந்து கீழ்

| | | |
|---|---|---|
| 1. மதுமலர் | 2. தேனடை | 3. கோபுரம் |
| 4. சனி | 6. அம்புதி | 7. அசடுவழி |
| 10. அம்புலி | 11. பகல் | |
| 12. மன் (கோன்) | 13. அசவு | 15. தனு |

## சொற்சிலம்பம் இல. 111

### பரிசு பெற்றவர்கள் விபரம்

**முதலாவது பரிசு:**
செல்வி நி. விவேகானந்தராசா
C/பா திரு செ. விவேகானந்தராசா,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

**இரண்டாவது பரிசு:**
அ. யாழினிக்கிரேஸ்,
32/1, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**மூன்றாவது பரிசு:**
திரு. வே. குமாரசுவாமி,
அதிபர் யா/வல்வை அ.மி.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை


## அன்னை பூபதியின் நினைவாக

★ இலவச ★ சலுகை அடிப்படையில்

★ கொம்பியூட்டர் கல்வி ★

**Osco Computer Centre**

Diploma in Data Processing And Computer Programming in Basic Language

| இடம் | ஆரம்ப திகதியும் | நேரமும் |
|---|---|---|
| 1. பருத்தித்துறை (வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக) | 15/4/90 | ஞாயிறு மாலை 2 மணி (சனி,ஞாயிறு) |
| 2. வல்வைக் கல்வி மன்றம் (வல்வெட்டித்துறை) | 15/4/90 | ஞாயிறு காலை 8 மணி (சனி,ஞாயிறு) |

இலவச சலுகை அடிப்படைக்கு விண்ணப்பிப்போர் 7/4/90 ஆம் திகதி சஞ்சீவி அல்லது 4/4/90 ஆம் திகதி ஈழநாதம் பத்திரிகைகளைப் பார்க்கவும். இச் சலுகை 22/4/90 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிப்போருக்கு மட்டுமே. ஆகவே முன்னுரிமைக்கு முந்துங்கள்.

S. MAHA,
Osco Computer Centre,
VALVETTITURAI.
(Or Point Pedro, Or Kankesanthurai)

இலவச, சலுகைக்குட்படாதோர் முழுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

WORD PROCESSING, LOTUS 1-2-3

பயில விரும்புவோர் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிந்து கொள்ளவும். [3193]



## மலரும் புத்தாண்டில்

தமிழீழ உள்ளங்களின் இதயக் கனவுகள் நனவாக
எம் உளமார்ந்த வாழ்த்துக்கள்

பண்டிகையின் பின் தலைநகர் செல்லும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

★ எமது அடுத்த தொகுதி ★

**Dbase Lotus Word Star etc.,**

(காலை, மாலை, இரவு, வாரநாள், வார இறுதி)

### விரிவுரைகள்

02-05-90 18-04-90 18-04-90

முதல் ஆரம்பம்:

தொடர்பு: **Compudata [Pvt] Ltd.,**
11, St. Lucia's Street,
COLOMBO - 13.

[12907]


## புதுவருட விழாவும் பூசையும்

முல்லைத்தீவு, ஏப்ரல் 14

முல்லைத்தீவு குமுளமுனை பிரசித்தி பெற்ற கொட்டுக்கிணற்றடிவினாயகர் ஆலயத்தில் நீண்டகால இடைவெளிக்குப்பின் இன்று சனிக்கிழமை புதுவருட விழவும் விசேடபூசையும் நடைபெறும் அன்னதானம் வழங்கப்படும்

இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் (இ-92)


எமது புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

## இல்லத்தரசிகளுக்கு!

அன்புடையீர்!

புதுவருடத்தை குதூகலத்துடன் கொண்டாடி மகிழ தேவையான பலகார வகைகளைச் செய்திட எம்மிடம்

✶ அரிசி மா ✶ உழுந்து மா ✶ கடலை மா
✶ குரக்கன் மா ✶ ஆட்டா மா ✶ ஜீவாகாரம்
✶ மற்றும் மிளகாய்த் தூள் ✶ மஞ்சள் தூள்
✶ சிரகத்தூள் ✶ மிளகுத் தூள்

எல்லாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். எங்களது இப்பொருள்களின் தரம் பற்றி உங்கள் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கிறோம்.

அண்ணா கோப்பிக்கடை, யாழ்ப்பாணம்.

அண்ணா தொழிலகம் இணுவில்.

(சி-4286)


# 1ஆம் வருட நினைவு அஞ்சலி



## மரிசலின் சூசைநாயகம் [ராசு]

மண்ணில்: 30 - 10 - 55

விண்ணில் 14 - 4 89

ஈராறு மாதங்கள் இன்றோடு மறைந்தது
பார்மீது உன் எண்ணம் பற்றியே படர்ந்தது
சீரோடும் சிறப்போடும் நிறைந்திட்ட உன் வாழ்வு
வேரோடு தான் சாய்ந்த விந்தையை மறப்போமோ
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
மாறாத நினைவோடு மலர்தூவித் துதிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்,
மனைவி, பிள்ளைகள்.

மன்குளி வீதி,
ஊர்காவற்றுறை.

(சி/3189)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



## க. அ. சுதீஸ்குமார்

அன்னை மடியில்: 12 - 03 - 67

ஆண்டவன் அடியில்: 13 - 04 - 84

ஆறாண்டு அலர்ந்து மறைந்தது சுதீஸ்
ஒப்பிலா என் மணியே தேனே என் மகனே!
எப்போதும் என் நெஞ்சில் நின்று சிரிக்கின்றாயே
இப்போதும் எம்முடனே நீங்காது நிற்கின்றாயே
சித்திரை வருடப் புத்தாண்டு அன்று எம்மைவிட்டு மறைந்தாயே

உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மம்மா, டலா - மம்மி, சதீஸ் தம்பி, சபேஸ்தம்பி, அத்தான், அக்கா, மருமகன்மார், மருமகள், உற்றார், உறவினர்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(3174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் விற்பனை



## மோட்டார் சைக்கிள்கள்

1000க்கு மேல் கையிருப்பில் உண்டு
25% கழிவு

| | |
|---|---|
| ஹொண்டா | ரூபா |
| ★ C50, C70, C90 டவுண்சொக் சென்டர் சொக் சிடிஐ கஸ்டம் | 10,500க்கு மேல் |
| ★ CD50, CD90 பிறவுண் கோல்ட் பென்ட்லி | 12,500 '' '' |
| ★ CD 125 T பிறவுண் கோல்ட் லைன் பென்ட்லி | 22,500 '' '' |
| ★ CD 125 JC 06 எலோய்வீல் | 20,000 '' '' |
| ★ CM 124 ஸ்குயர் றவுண்ட் மீட்டர் கஸ்டம் | 22,500 '' '' |
| ★ XL 125 எஸ் | 22,500 '' '' |
| ★ MD 90 | 19,500 '' '' |
| ★ சாளி — ஸ்டீல் | 5,000 '' '' |
| — பிளாஸ்டிக் | 7,000 '' '' |
| — ஸ்குயர் லைட் | 8,750 '' '' |
| ★ MT 50 MB 50 | 10,000 '' '' |
| யமஹா | ரூபா |
| ★ V 50 T, V 90 T போஸ்ட் ஆபீஸ்மொடல் | 11,000க்கு மேல் |
| ★ YB 50, YB 90 பொயின்ட் CDI | 10,000 '' '' |
| ★ YB 125 CDI | 11,000 '' '' |
| ★ V 50, V 70 பொயின்ட் | 6950 '' '' |
| ★ V 50, V 80 CDI | 7250 '' '' |
| ★ DT 50 | 15,000 '' '' |
| ★ MR 50 | 10,000 '' '' |
| ★ RX 50 | 10,000 '' '' |
| ★ சப்பி | 6,000 '' '' |

சகல வகையான ஸ்கூட்டர்கள்
நல்ல நிலையில் ரூ. 5000க்கு மேல்

மொத்த விற்பனைக் கழிவு வழங்கப்படும். தேவையான அளவுகளுக்கு ஏற்ப கொள்கலன் போக்குவரத்து சேவையும் வழங்கப்படும். சிறு ஆரம்ப கொடுப்பனவை செய்து உங்கள் தேவைகளை பதிவு செய்யுங்கள்.

**பினான்ஸ் அன்ட் லாண்ட் சேல்ஸ் லிமிட்டெட்**
15, செல்லமுத்து அவெனியூ,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.
(காலி வீதி, கடற்கரைப் பக்கமாக ரேணுகா ஹோட்டலுக்கு பின்புறம்)
தொலைபேசி:- 573660, 574525
(F)பக்ஸ் - 574782



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்

**றஞ்ஜனாஸ் வீடியோ**
92, பழம் வீதி,
கந்தர்மடம்.
(3200)


### மாநாடு

யேகோவாவின் சாட்சிகளின் விசேஷ ஒருநாள் மாநாடு, இன்று 14 ஆம் திகதி, சனிக்கிழமை, சாவகச்சேரி இராஜ்யமன்றத்திலும் நாளை 15 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையிலும், 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கிளிநொச்சி, சென். திரேசா பாடசாலையிலும் நடைபெறும். (இ)


## பதினொராவது ★பிறந்த நாள் வாழ்த்து★



**தேவதாசன் தயாளினி**

இளவாலை வடக்கு ''விஜய்பதியை'' சேர்ந்த தேவதாசன் - இந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி தயாளினி தனது பதினொராவது பிறந்த நாளை 14 - 04 - 90 சனிக்கிழமை தனது இல்லத்திலே வெகு சிறப்பாக கொண்டாடுகிறார். இவர் எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விக்கின விநாயகரின் அருளைப் பெற்று பல கலையும் பயின்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அன்பு அப்பா, ஆருயிர் அம்மா, மற்றும் உற்றார், உறவினர்கள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள்.
(3183)



## ஞானவயிரவர் சனசமூக நிலையம்

முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு.

### புத்தாண்டு விழா

| | |
|---|---|
| திகதி: | 15—04—90 ஞாயிற்றுக்கிழமை |
| காலம்: | காலை 6 மணி முதல் |
| இடம்: | முடமாவடி மைதானம் |
| நிகழ்ச்சிகள்: | 20 மைல்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி<br>10 மைல்கள் மரதன் ஓட்டம்<br>5 மைல்கள் மரதன் ஓட்டம் (உள்ளூர்) |
| மாலைநிகழ்ச்சிகள்: | 3 மணிக்கு கரப்பந்தாட்டப் போட்டி |

போட்டியில் பங்குபெற்ற விரும்புபவர்கள் 15 - 04 - 90 காலை 6 மணிக்கு முன் முடமாவடி மைதானத்தில் சமுகம் தருமாறு கோரப்படுகின்றனர்.
விளம்பர அன்பளிப்பு:

எம். பீ. சோப் தாயாரிப்பாளர், அச்சுவேலி.
(12902)



அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
## ★ பிள்ளையார் ★




**முற்றிலும் குளிரூட்டப்பட்ட**
★ வர்ண தொலைக்காட்சிப் பெட்டி [T.V] ★
பொருத்தப்பட்ட பஸ்
**யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்**
கட்டணம் - ரூபா 150

புறப்படும் இடம்:
**பிள்ளையார் ஸ்ரோஸ்,**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**வெள்ளவத்தை**
தபாற்கந்தோர் அருகாமை
இல. 4 லில்லி அவெனியூ,
கொழும்பு.
T. Phone: 585 188
(C/4246)



யாழ் நகரில்
அன்றும் இன்றும் என்றும்
**சிறந்த முறையில்**
**படம் பிடிப்பவர்கள்**
## பாரத் ஸ்ருடியோ
82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஆதரவாளர்களுக்கு
புதுவருட வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்,
(12091)



## VACANCIES

**DRAUGHTSMAN (MECHANICAL)**

The successful candidate will join a team of Engineers involved in design fabrication and commissioning of process machinery for the local and foreign market.

The job will involve preparing component and assembly drawings of process Machinery and preparing bill of quantities.

Candidates to have undergone apprenticeship and possess minimum of 5 years experience in Mechanical Draughting. Ability to design simple machinery will be an advantage.

**TECHNICAL ASSISTANT (MECHANICAL)**

Candidates to have successfully completed special apprenticeship with National Apprenticeship Board or at any recognised institution and have at least 2 years experience in Mechanical fabrication.

The job will involve organising supervising and achieving production targets in a mechanical fabrication shop producing custom built process machinery.

Successful candidate will be offered an attractive package

Apply to Managing Director
**Promoters Engineering Company Limited,**
844, Point Pedro Road,
Nallur, Jaffna.
(சி/4451)



## வெளிவந்துவிட்டது!

- பொருளியலாளன்
  செப் / டிசம்பர் 1989, மார்ச் 1990
  (இளம் பொருளியலாளர் நிறுவனம்)
- இலங்கை
  அரசியற் பொருளாதார அபிவிருத்தி
  1948 — 1956
  வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்:
  ஆசிரியர்: வி. நித்தியானந்தன்
  தலைவர் பொருளியற்துறை,
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கிடைக்குமிடம்:
**மண்டேலா ரேடர்,**
(புத்தகசாலை)
இல. 2 பஸ் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(3161)



★ அன்பர்கள் ★ ஆதரவாளர்கள் அனைவருக்கும்
★ எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக ★
## குட்லக் எம்போரியம்
[பிரபல புடவை வியாபாரிகள்]
139A, பிரதான வீதி,
பருத்தித்துறை.
[12198]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விநாயகர் திருவருள் முன்னிற்க
எண்ணிய எண்ணி யாங்கெய்தி
எல்லோரும் இன்புற்றிருக்க
வேண்டுகிறோம்."

புத்தாண்டுத் தினத்தன்று
மருதடி விநாயகர் ஆலய மருங்கில்
மில்க்வைற் பாவனையாளர்களுக்குச்
சகாய விலையில் விற்பனை செய்யவும்
மேலுறைகளுக்குப் பரிசுகள் வழங்கவும்
மில்க்வைற் வாகனம் காத்திருக்கும்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

14—04—1990 சனிக்கிழமை

துரித சலவைக்கும்
தூய வெண்மைக்கும்
மில்க்வைற் சலவைப் பவுடர்

50 கிறாம் மில்க்வைற் சலவைப் பவுடர்
வெற்றுப் பைக்கெற் 25 அனுப்பி
ஒரு அப்பியாசக் கொப்பி அல்லது
ஒரு பொலீத்தீன் பாக் பெற்றுப்
பயனடையுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## ஈரோஸ் தூதுக்குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு ஏப் 14

ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் தலைமையிலான தூதுக்குழு ஒன்று நேற்று முன்தினம் (வியாழன்) காலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுக்கள் நடத்தியது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிலை பற்றி அப்போது பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.

இப்பகுதியின் தற்போதைய நிலையை வலுப்படுத்த சில யோசனைகளை தாம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாகவும் திரு. பாலகுமாரன் பின்னர் தெரிவித்தார்.

நிரந்தர தீர்வு ஒன்றை இனப் பிரச்சினைக்குக் காணும் ஜனாதிபதியின் விருப்பத்தை அவரது பேச்சில் இருந்து தெரிந்து கொண்டதாகவும் திரு. பாலகுமாரன் மேலும் சொன்னார் (உ-எ)

## விடுதலைப் புலிகளுடனும் ஈரோஸ் குழு பேச்சு!

கொழும்பு, ஏப் 14

விடுதலைப்புலிகள்-ஈரோஸ் சந்திப்பு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழுவினர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று, அவர்களை திரு. பாலகுமாரன் தலைமையிலான ஈரோஸ் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

ஈரோஸ் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. இ. பரராஜசிங்கம், ஜனாப் பஷீர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் திரு. மாத்தயா, திரு. யோகி, டாக்டர் அன்ரன் பாலசிங்கம், கஸ்ட்ரோ, கரிகாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்மிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியின் ஒரு கட்டமாக இப்பேச்சுக்கள் அமைந்தன என்று திரு. பாலகுமார் பின்னர் தெரிவித்தார்.

இச்சந்திப்பை இருதரப்பு வட்டாரங்களும் உறுதிப்படுத்தின. (உ-எ)

## திருகோணமலை விழாக்கோலம்!

திருகோணமலை ஏப் 14

திருகோணமலை நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

அன்னை பூபதியின் நினைவாக நடைபெறும் எழுச்சி நிகழ்ச்சிகள் -

இந்தியப் படையை வெளியேற்றுவதில் தமிழ் பேசும் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கிடைத்துள்ள வெற்றிக் கொண்டாட்டங்கள் - ஆகியவற்றால் திருமலை நகர் விழாக்கோலம் பூண்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்பொறுப்பாளர் திரு. ரூபன் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

வீதிகள் தோறும் அலங்கார ஏற்பாடுகள் பெருமளவில் செய்யப்பட்டிருக்கின்றன.

வீதியைச் சோடிப்பதில் மக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபடுவதைக்காண முடிந்தது.

அன்னை பூபதி நினைவாகவும் -

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்து விளக்குவதற்காகவும் ஆங்காங்கே தினசரி பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (உ-9)

## 650 தங்கச் சங்கிலிகளை கடத்த முயன்ற இளைஞர்!

கொழும்பு, ஏப் 14

சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான 650 தங்கச் சங்கிலிகளை கடத்த முயன்ற இலங்கை வாலிபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்த இளைஞர் டுபாயில் இருந்து கொழும்பு திரும்பிய போது கைது செய்யப்பட்டார். (உஎ)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

## இலங்கை வங்கி கருமபீடம் பூர்த்தி விழா நாளை

யாழ்ப்பாணம் ஏப் 14

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இயங்கி வந்த இலங்கை வங்கிக்கருமபீடத்தின் பூர்த்தி விழா நாளை மாலை 4 மணிக்கு நடைபெற இருக்கிறது.

நாளை மாலை 4 மணிக்கு திருமதி இரத்தினசோதியின் வீணைக்கச்சேரியும், ஐந்து மணிக்கு பூர்த்தி விழாவும் இடம்பெறும்.

மில்க்வைற் நிறுவன அதிபர் திரு. க. கனகராசா இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வைபவத்தில் மானிப்பாய் மகேசன் இல்லத்தைச் சேர்ந்த 39 அனாதைச் சிறார்களுக்கு சேமிப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் திரு. சி.என். நவரட்ணராஜா இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். (இ-3)

எமது புத்தாண்டு வாழ்த்துகள்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது புத்தாண்டு நல்வாழ்த்துகள்!
★ ஷெப்றா ★
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



நேற்றைய சந்திப்பின்போது அரச தரப்பில் கலந்து கொண்ட அமைச்சர் ஹமீத் மேசையின் ஒருபுறமும், விடுதலைப்புலிகளின் தரப்பில் கலந்துகொண்ட பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா, தலைவர் திரு. வே. பிரபாகரன். டாக்டர் அன்ரன் பாலசிங்கம், யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு. பானு, யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக், திருமதி. பாலசிங்கம் ஆகியோர் மறுபுறமும் அமர்ந்திருக்கும் போது எடுக்கப்பட்ட படம்.

## மாகாணசபைப் போராட்டம் தொடரும் என்கிறார் பத்மநாபா

புவனேஸ்வர், ஏப் 14

மாகாணசபையைக் கலைக்க வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி முன் நிபந்தனை விதித்தார்.

ஆனால் நாம் ஜனநாயக வழி மூலம் அதிகாரத்துக்கு வந்தோம் எந்தச் சூழ்நிலையிலும் இப்போராட்டத்தை விட்டுக் கொடுக்க மாட்டோம்.

ஓரிஸ்ஸா அகதி முகாமில் வைத்து ஈ. பி. ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் கே. பத்மநாபா செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது ஆயுதப் போராட்டத்தை நாம் தற்காலிமாக இடைநிறுத்தி வைத்துள்ளோம்.

நாம் இலங்கைஅரசின் முன் வைத்து உள்ள 19 யோசனைகளையும் அரசு ஏற்றுக்கொள்ளத் தவறினால் எமது ஆயுதப்போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும்.

இலங்கை அரசே எமது முதலாம் நம்பர் எதிரி. ஏனையோர் எண்ணுவது போல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அல்ல.

விடுதலைப் புலிகள் இயக்கம் விடும் பெரிய தவறு எதிரியுடன் சேர்ந்து இலங்கைத் தமிழரின் அபிலாசைகளை அழிக்க ஒத்துழைப்பதே ஆகும்.

இப்படி அவர் கூறினார்.

இலங்கை இராணுவத்தை எதிர்த்து இந்தியஉதவியின்றி ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தால் போராட முடியுமா? என்ற கேள்விக்கு திரு. பத்மநாபா பதில் அளிக்கையில்

"எமக்கு இந்திய உதவி தேவை. இலங்கை அரசு இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து உதவி பெறுகிறதே!" என்றார். [இ-எ]

## இரு சரக்குக் கப்பல்கள் இலங்கை கடலில் மோதல்!

கொழும்பு, ஏப் 14

இலங்கைக் கடற் பகுதியில் இரண்டு வெளிநாட்டுச் சரக்குக் கப்பல்கள் மோதிக்கொண்டன.

ஒன்று பிலிப்பீன்ஸ் நாட்டுக்குச் சொந்தமானது. மற்றக் கப்பல் மொன்றோலியா நாட்டைச் சேர்ந்தது.

தென்பகுதி நகரான தெய்வந்துறையில் இருந்து 30 மைல் தொலைவில் கடலில் கடந்த வியாழன் காலை இக் கப்பல்கள் மோதிக் கொண்டன. சேதமடைந்த பிலிப்பீன்ஸ் கப்பல் 'ஐரிஸ் - 1' தெய்வந்துறை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும், மற்றக் கப்பலுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

**பிந்திய செய்தி:**

பிலிப்பீன்ஸ் சரக்குக் கப்பல் 'ஐரிஸ் – 1' நேற்று கொழும்புத்துறைமுகம் போய்ச் சேர்ந்தது. (உ-எ)

## ஆசிரிய நியமனம் இவர்களுக்கும் கிடைக்கும்

கொழும்பு, ஏப் 14

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் போதிய பாடங்களில் சித்தியடையாவிட்டாலும் விசேட பாடங்களில் அதி திறமை சித்தி அடைந்துள்ளோருக்கு ஆசிரிய நியமனங்களை வழங்க கல்வி அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி தீர்மானித்துள்ளார்.

ஆங்கிலம், சங்கீதம், நடனம், கைத்தொழில் ஆகிய பாடங்களில் ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் அதிதிறமை சித்தி அடைந்துள்ளோருக்குஅடுத்த ஆண்டு முதல் ஆசிரிய நியமனங்களை வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்.

ஜீ. சி. ஈ, சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிதிறமைச் சித்தி அடைந்த பெரும்பாலானோர் கணித பாடத்தில் சித்தி அடையாதிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் எழுதவும் வாசிக்கவும் பேசவும் இவர்களால் முடிகிறது. (உ-எ)

## சாவகச்சேரியில் ஸைசக்கிள் ஓட்ட போட்டிகள்

சாவகச்சேரி, ஏப் 14

இன்று சனிக்கிழமை சாவகச்சேரியில் ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெறும். ஆண்களுக்கான 60 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி காலை ஆறு மணிக்கு சாவகச்சேரியில் இருந்து புறப்பட்டு கிளிநொச்சி வரை சென்று திரும்பி மிருசுவில் தூபியை வந்தடையும்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி 20 மைல்களைக் கொண்டது. சாவகச்சேரியில் இருந்து ஆரம்பமாகி நுணாவில் கனகன்புளியடி, வேம்பிராய், வரணி, கொடிகாமம் ஊடாக மிருசுவில் தூபியை அடையும்.

மாலை 2 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியாகஊர்திகள் பவனி இடம்பெறும்.

மிருசுவில் தூபியில் இருந்து புறப்படும் இப்பவனி கண்டி வீதி ஊடாக சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தை வந்தடையும்.

இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செய்துள்ளது. (இ-31)

## எவரெஸ்டில் மீண்டும் ஏறும் சேர். எட்மண்ட் ஹிலாறி!

நியூசிலாந்து இளைஞர்கள் கோஷ்டி ஒன்று எவரெஸ்ட் சிகரத்தில் ஏறவுள்ளது.

50 பேர் கொண்ட இக் கோஷ்டிக்கு சேர் எட்மண்ட் ஹிலாறி தலைமை வகிக்கிறார்.

ஷெர்பா டென்சிங்குடன் சேர்ந்து 1953 ஆம் ஆண்டில் முதன் முதலாக எவரெஸ்ட் சிகர உச்சியை அடைந்தவர் சேர் எட்மண்ட் ஹிலாரி ஆவார்.

இப்போது எவரெஸ்ட் அடிவாரத்தில்சேர் எட்மண்ட் ஹிலாரியுடன் காத்மண்டுவில் இருந்து மேலும் 19 பேர் [illegible] சேர்ந்து கொள்ள இருக்கின்றனர்.

முன்னர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர்களால் போடப்பட்ட குப்பைகளை அகற்றுவதற்காகவே சேர் எட்மண்ட் ஹிலாறி தலைமையிலான கோஷ்டி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறவிருக்கிறது.

ஏற்கனவே அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மலையேறும் நிபுணர்கள் குழு ஒன்று குப்பைகளை அள்ளி சிகரத்தைச் சுத்தப்படுத்துவதற்காக எவரெஸ்டில் ஏறுகிறது.

இச்சுத்திகரிப்புப்பணி [illegible] 22 ஆம் திகதி ஆரம்பமாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளை தோட்டச் சூடு; 6 சிப்பாய்கள் கைது!

கொழும்பு, ஏப்ரல் 14

பதுளை, கிளென் அல்பின் தோட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று தோட்டத் தொழிலாளர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஆறு சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பின்னர் நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த ஆறு பேரில் ஒருவர் இராணுவத்தில் கனிஷ்ட அதிகாரியாக பணி புரிந்து வந்தார்.

சிவில் உடையில் தோட்டத்துக்குச் சென்று இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட போதே தோட்டத் தொழிலாளர் உயிரிழந்தனர். [உ-எ]

வங்கிகளில்

## பொலீஸ் பாதுகாப்பு இன்றி பணக்கொடுக்கல் - வாங்கல்

யாழ்ப்பாணம், ஏப் 14

பொலிஸ்பாதுகாப்பு இன்றி யாழ் நகர வங்கிகளில் திங்கள் முதல் பணக் கொடுக்கல் வாங்கல் இடம் பெறும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முறைப்படியே தொடர்ந்தும் நடைபெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் பணம் வழமை போல் கோட்டையில் உள்ள வங்கி பெட்டகங்களில் இருந்தே எடுத்து வரப்படும் நடைமுறை தொடர்ந்து செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கி ஆஸ்பத்திரிக்கிளையில் நேற்று பொலீஸ் பாதுகாப்பின்றி நிவாரணம் வழங்கப்பட்டது. (இ-3)

## செய்திச் சாரம்

### எரிபொருள் தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ், மாவட்டத்தில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு பெரும்பாலும் நீங்கியுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் ரயில்மூலம் எரிபொருள்கள் கூடுதல் அளவு எடுத்துவரப்படுவதாகவும் தினமும் ரயில்மூலம் எரிபொருள் வந்தால்தான் தட்டுப்பாடு முற்றாக நீங்கும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### பொலீஸாருக்கு கைத்துப்பாக்கி!

கொழும்பு ஏப் 14

0.303 ரக ரைபிள்களுக்குப் பதில் பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும் சார்ஜண்டுகளுக்கும் கைத் துப்பாக்கிகள் வழங்கப்படும்.

முதல் நடவடிக்கையாக சுமார் 5 ஆயிரம் பொலீஸாருக்கு ரிவோல்வர்களும் தானியங்கி ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளன. (உ-எ)

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி ஏப் 2

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் புத்தாண்டை ஒட்டி பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். (இ - 31)

### குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஏப் 14

களனி பல்கலைக்கழகத்தில் இரண்டு குண்டுகள் கண்டு எடுக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் வீரசிங்க மண்டபத்தை பாதுகாப்புப் படையினர் சோதனை இட்டபோது இவை அகப்பட்டன. (உ-எ)

### தேர்தல் வருடமா?

கொழும்பு, ஏப் 14

இந்த ஆண்டில் இலங்கையில் ஒரு சர்வசன வாக்கெடுப்பு அல்லது திடீர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் தென்படுகிறது.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'வீக்கென்ட்' ஆங்கில வார இதழ் புதுவருடபலனில் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

### நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 14

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் இன்றும் நாளையும் நடைபெறும் தேர், தீர்த்த திருவிழாக்களின்போது யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழகத்தினர் வடபிராந்திய புற்றுநோயாளர் சங்கத்துக்கு நிதி சேகரிப்பர்.

### பிராமி எழுத்து கொண்ட களிமண் பொருள்

பிராமி எழுத்துக்களைக் கொண்ட களிமண் பொருள்கள் அனுராதபுரம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவை கிறிஸ்துவுக்கு முன் 750 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று புதைபொருளாராய்ச்சி நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி சின்னத்தம்பி

அச்சுவேலி தெற்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பகவதி சின்னத்தம்பி 13-04-1990 இல் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி (Retired District Train Controller, Malayan Railways) அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரன் (வழக்கறிஞர், கொழும்பு), மகேஸ்வரி ஆகியோரின் தாயாரும், பேராசிரியர் பாலகிருஷ்ணன் (யாழ். பல்கலைக்கழகம்), அமிர்தராணி (புள்ளிவிவரத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், இந்திரன், பிரதாபன், வசந்தன், பிரசன்னா, பிரமிளா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலி இல்லத்தில் 15-04-1990 காலை பத்து மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
சி. மகேந்திரன்
[3306]

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

## நன்மையான மாற்றங்களை கொண்டுவா புத்தாண்டே!

பிரமோதூதப் புத்தாண்டு இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் மங்களகரமாக அமைய வேண்டும். "பிரமோத" என்றும் அழைக்கப்படும் இவ்வாண்டில் நன்மையான மாற்றங்கள் ஏற்படும். சமய சம்பந்தமான விடயங்களில் முன்னேற்றங்கள் உண்டாகும் என்பன சோதிடர் முடிபு.

எவ்வுயிரும் நாடுவது இன்ப நுகர்வு. நடந்தவை நன்றில்லாவிடினும் இனிமேல் நடக்க இருப்பவை நல்லனவாக அமையவேண்டும்.

இதற்கெல்லாம் முதற்கண் வேண்டப்படுவது, இறை நம்பிக்கை, இறை உணர்வு, பரோபகார சிந்தனை, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகியனவேயாம்.

இப்பொழுது நாட்டு நிலைமையை ஆய்ந்துணரும் போது மேற்படி நன்மையான மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படுவது தேற்றம்.

இப்புத்தாண்டில் மட்டுமல்ல எஞ்ஞான்றும் இந்நாட்டு மக்கள் மன அமைதியோடும், இறை நம்பிக்கையோடும் இன்புற்றுச் சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களை உளமாரத் தியானித்து, புத்தாண்டு வாழ்த்துக்களையும் எமது நல்லாசிகளையும் வழங்குகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## பிரமோதூத புத்தாண்டு வாழ்த்து

உதயமாகும் பிரமோதூத புத்தாண்டு நமது தாய் நாட்டிற்கு அமைதியையும். முன்னேற்றத்தையும், சுபீட்சத்தையும் வழங்குவதாகவும், நமது சமூகத்தினரிடையே புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதாகவும் அமையட்டும்.

மன்னுயிர்த்தொண்டு எனும் மகத்தான பணியைத் துணிவுடன் தொடர்வதற்குக் கடந்த காலங்களில் துணை நின்ற மக்களது பேராதரவினை ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இல்லங்கள் நன்றியுடன் நினைவுகூறுகின்றன.

மலரும் புத்தாண்டும் அதைத்தொடர்ந்துவரும் காலங்களும் தங்களுக்கு நிறைவான மகிழ்ச்சியையும் குன்றாத ஆரோக்கியத்தையும் குறையாத செல்வத்தையும் அள்ளி வழங்கட்டும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் பாதாரவிந்தங்களில் தாங்களும் தங்களைச் சேர்ந்தவர்களும் என்றென்றும் நிலைத்திருக்க மனதாரப் பிரார்த்தித்து வாழ்த்துக்கூறி நிற்கின்றோம்.

மட்டக்களப்பு — சுவாமி ஜீவனானந்த

## சித்திரைப் பெண்ணே! திருமகளே!!

சித்திரைப் பெண்ணே திருமகளே — எம்
சித்தம் கவர்ந்த தமிழ்மகளே
புத்தெழில் கூட்டும் பொன்மகளே — நீ
பொலிவுற வருக புதுமகளே.

மாங்கு யிலினிய இசைபாட — நல்ல
மதுகரம் தேவர் துதிபாட
யாங்கனும் தோகை மயிலாட — இந்த
ஆண்டுமே வந்தாய் கலியோட.

வசந்த காலம் எமக்கொரு நாள் — இனி
வந்தே சேரும்; துயர் தீரும்
கடந்த கால அனுபவங்கள் — உடன்
கரைந்து போகும் கதிநேரும்.

தாய்மார் விட்ட கண்ணீரும் — எம்
தந்தையர் விட்ட பெருமூச்சும்
சேய்கள் உற்ற அருநரகும் — இனி
சித்திரை யாளே வரவேண்டாம்.

மூத்தோர் பெரியோர் என்றின்றி — நாம்
முகத்தி லடிக்கப் படுகையிலே
பார்த்தே யிருந்தோம் எம்தாயே — இருட்
படலம் கிழித்தாய் சித்திரையே.

அன்பு பண்பு அறிவாற்றல் — நல்
லடக்கம் பொறுமை கூட்டுறவு
இன்பம் மகிழ்ச்சி பலசெல்வம் — என
ஈவாய் பிரமோ தூதானே.

—காரை செ. சுந்தரம்பிள்ளை

## புத்துயிர்ப்பினை உணர்த்தும் சித்திரைப் புத்தாண்டு விழா!

பேராசிரியர்
**- கார்த்திகேசு சிவத்தம்பி -**

'நல்லநாள் பெருநாள்' என்ற தொடரின் கருத்தினைச் சிறிது ஊன்றி நோக்குதல் வேண்டும். நல்லநாளாகக் கொள்ளப்படுபவை கொண்டாடப்பெறுபவை உண்மையில் பெரு பெரிய பெருமைக்குரிய நாட்களாகும்.

மக்கள் ஏதோ ஒருவகையில் ஒருமித்துக் கொண்டாடும் பொழுது அந்தக்கொண்டாட்டம் 'விழா' ஆகின்றது. இதனை 'விழவு' எனப் பழைய தமிழ் இலக்கியங்களிற் குறிப்பர்.

ஒரு குறிப்பிட்ட மக்கட் குழுவினர் அவர்களின் நம்பிக்கைகளின் தொழிற்பாடு காரணமாக ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட கருமம் அன்றேல் பல சடங்காசார கருமங்களைச் செய்யும் பொழுது விழாவின் அடிப்படைப் பொருள் ஏற்பட்டுவிடுகின்றது. சடங்காசார கருமங்கள் மதநம்பிக்கைகளோடு தொடர்புற்று நிற்பவை. இவ்வாறான சமூக ஒருமை நிலைகளுக்கு சமூக நியாயப்பாடும், மத அங்கீகாரமும் இருக்கும்.

தமிழ்ப் புத்தாண்டு தினம் தமிழ் மக்களிடையே அத்தகைய ஒரு முக்கியமான இடத்தைப்'பிடித்துக்' கொண்டுள்ள ஒரு நாளாகும்.

கால ஓட்டத்தின் கட்டத்தினை ஒருநாள் சுட்டி நிற்கும் பொழுது அந்தநாள் வரவிருக்கும் முழுக்காலத்தினதும் 'குறியீடு' ஆகிவிடுகின்றது. இதனால் 'வருடப் பிறப்பு' என்பது எப்பொழுதும் ஒரு முக்கிய தினமாகிவிடுகின்றது. சகல பண்பாடுகளிலும் இவ்வுண்மையைக் கண்டுகொள்ளலாம்.

தென்னிந்தியா மற்றும் இலங்கைப் பிரதேசத்தில் சூரியன் மேடராசிக்கு வரும் நாள் ஒரு புதிய 'வருடச் சூழலை' உண்டாக்குகின்றது.

நமது பாரம்பரியக் கணிப்பில் இராசிகள் மேடம் முதலே கணக்கிடப்பெறும்.

இப்பிரதேசத்தின் கால குணப்போக்கில் இது ஒரு 'மைல்கல்'லாகும். இந்திய மரபில் இதனை 'இளவேனில்' என்பர். சித்திரை இளவேனிலின் தொடக்கமாகும்.

சித்திரை வருடப்பிறப்பு விழா தமிழ் நாட்டில் புராதன விழாக்களுள் ஒன்றா என்ற வினா இக்கட்டத்தில் எழுவது இயல்பே.

சிலர் இதனை 'இந்திர விழா'வெனக் கொள்வதுண்டு ஆனால் சிலப்பதிகாரக் குறிப்புகளைக்கொண்டு நோக்கும் பொழுது இந்திரவிழாவின் நிறைவுக்கூட்டம். 'சித்திரைச் சித்திரை'யாகும். சித்திரைப் பௌர்ணமியிற் கொண்டாடப்பெறுவன இந்திரவிழாவோடு சம்பந்தப்பட்டவையாகலாம். இன்றும் நாட்டார் நிலையில் நடைபெறும் 'சித்திரைக் கூடம்', 'சித்திரைகதைப் படிப்பு' என்பன அந்தவிழாவின் எச்சசொச்சங்களாகவிருக்கலாம்.

ஆனால் சித்திரை வருடப் பிறப்போ, சூரியன் மேடராசிக்கு வருவதைக்குறிக்கும் விழாவாகும். இந்த விழாவை 'வேனில் விழவு' எனப் பழந் தமிழிலக்கியங்கள் குறிக்கும். காமனோடு சம்பந்தப்பட்ட விழாவாகக்கொள்ளும் ஒரு பாரம்பரியமும் உண்டு.

தைப்பொங்கல் 'தமிழர் பெரு நாளாக' மேற்கிளம்பியது அண்மைக்காலத்திலேயே. தைப்பொங்கல், விவசாயத்தின் அறுவடை நிலையைக் குறிக்க, சித்திரையே, முழுவிவசாயவேலை ஓய்வினைக் குறித்துநிற்பதாகும். 'சித்திரைக்கார்'என்ற பயிர்ச்செய்கையை இட்டுநோக்கினால், சித்திரைக்குப் பின்னர் ஆடி ஆவணியிலேதான்.

இதனால் சித்திரை வருடப் பிறப்பு உண்மையில் 'உழைப்பின் பலனை அனுபவிக்கும் பருவ காலத்துக்கான' குறியீடாகின்றது.

பாரம்பரிய அடிநிலை மக்கள் நிலையில் இவ்விழாவோடு சம்பந்தப்பட்ட சடங்குகளை நோக்கும்பொழுது இந்த விழா 'புத்துயிர்ப்பினை' உள்ளடக்கி நிற்பதைக் காணலாம்.

கைவிசேஷம் பெறுவது முதல், 'முதல் வேலை'க்குச்
(10 ஆம் பக்கம் பார்க்க)



இன்று இராசிகளுள் முதலாவதான மேட இராசியினுள் சூரியபகவான் பிரவேசிக்கின்றார்.

## நேரிய புதுமை

ஆண்டென்பார்; திங்கள் என்பார்
அட்டமி - நவமி என்பார் ...
நீண்டதோர் தொடரகத்தில்
நிகழ்ச்சியின் நிரை தான் காலம்.
பூண்டதன் முயல்வினாலே
புதுமைகள் கண்டு,
வாழ்வை
ஆண்டவன் மனிதன்
இங்கே
ஆதிக்கம் சற்றே உள்ளான்.

ஆதிக்கம் பெற்ற மாந்தன்
அகந்தையால் மண்டை வீங்கிச்
சாதிக்கும் இனத்துக்கும்
தன் சமயத்தின் பொருட்டும் ஆக
வாதிக்கத் தொடங்கி விட்டான்
மற்றவர் மடையன் என்றான்
மோதிக்கொண்டு உலகை எல்லாம்
முறைகெட்டுக் குலுக்குகின்றான்.

முறைகெட்டுக் குலுக்குவோரை
முறைப்படி குலுக்கி,
பின்னர்
அறிவுக்கும் இட்டுச் செல்ல
ஆவன செய்கின்றோம் நாம்.

திறமைக்கு முதன்மை தந்து
திருட்டுக்குத் தடை விதித்து
நிறைவுக்கு வழி வகுத்தல்
நேரிய புதுமை என்போம்.

—முருகையன்

## வசந்தம் வந்தது

வீசுமிளந் தென்றலிலே விரிமலர்கள் கமழ
விசும்பினிடை இளந்துளிநீர் வீழ்ந்துநிலம்மணக்க
பேசுவிழி காதல்மன மேடையிலே ஆடப்
பெண்குலத்தின் நாணமதும் பொங்கிடுநேற் காலம்
பூசுமணச் சந்தனமும் குங்குமமும் குழைந்தே
புதுமணமும் ஆக்கிடுநல் புனிதஇள வேனில்
தேசுநிறை தெய்வமதன் லிலைமலி காலம்
தெய்வமும்நல் ஆசிதரு மேவசந்த காலம்.

வார்குழலின் மணமலரில் வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் சிறகடித்துப் பறக்குமிசைக் காலம்
சீர்மருவு மாமரங்கள் பூத்துமிளிர் காலம்
சிறகுவிரித் தொளிருமயில் நடனமிடுங் காலம்
தேர்எனவே தென்றலிலே திரியுமதன் காலம்
தீசுழ்ரதியும் மதனும்மலர்க் கணைசொரியும் காலம்
பார்புகழும் பசுமைவளச் சோலைசூழ் காலம்
பாவையரின் காதல்பொங்கு மேவசந்த காலம்

பூதலமும் பூமலர்ந்து பொங்கிமகிழ் காலம்
பூவையரும் காதலரும் புல்லரிக்கும் காலம்
சீதவளத் தேனருவி பாயுமெழிற் காலம்
சிறகடித்துக் குருவியெலாம் சிலிர்த்துமகிழ் காலம்
மாதருள்ளம் மனையறத்தில் மருவிமகிழ் காலம்
மங்கையரின் நெஞ்சமது பொங்கிடுமொற காலம்
காதலரின் காதல்தனைக் கவினூட்டும் காலம்
காமன்ரதி பவனிவரு மேவசந்த காலம்.

வேப்பமலர் மணம்பரப்பி வீசும்இள வேனில்
விளையாடித் தென்றலுடன் கலவிசெய்யுங் காலம்
பூப்பருவ மங்கையரும் புதுவுணர்ச்சி யோடு
புனிதவிளங் காதலரைக் குலவிமகிழ் காலம்
நாப்பழகிக் கிளியினங்கள் நளினமொழி பேசி
நவநவமாய்க் கொஞ்சிமகிழ் அழகுநிறை காலம்
கூப்பியிதழ் விரித்துநகை குமுதமலர் காட்டும்
கொள்ளைதர மெள்ளவரு மேவசந்த காலம்.

புயலிடிகள் பூகம்பம் போக்கிலபொற் காலம்
பதுங்குகுழி மூடிஅதில் மலர்மலர்ந்த காலம்
பயமெதுவு மின்றிவெள்ளைப் புறாப்பறக்கும் காலம்
பட்டாசு பழங்கதைகள் நினைவூட்டும் காலம்
நயமரக நங்கையரும் நடுநிசியி லேனும்
நகையணிந்து நகைபுரிந்து நடமாடும் காலம்
சுயமான சுதந்திரநற் சிந்தனைசேர் காலம்
சோபனமாம் ஈழவளம் செழித்திடுபொற் காலம்.

. கவிமணி ந. வீரமணி ஐயர் -



**இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு....
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
● பார்சல்கள், ● கடிதங்கள், ● தஸ்தாவேஜுக்கள் ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்புகொள்ளுங்கள்
DHL INTERNATIONAL
c/o COSMOS MARKETING SERVICES,
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

## புதுவருட நாயகர்கள் சுபக்கிரகங்கள்;

## மக்கள் மகிழ்ச்சியாக வாழ வழி பிறக்கும்

பிரமோதூத எனப்படும் இப்புத்தாண்டு எமக்குப் பல நன்மைகளைத் தரக் கூடியதாகவுள்ளது. 'பிரமோத' என்ற சொல் நன்மையையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே சுட்டிக் காட்டுகிறது.

மக்கள், ஆட்சியாளர்கள் சந்தோஷமாகவும், பயமின்றியும், நோயின்றியும், துன்பங்கள் இன்றியும் வாழ்வதை இது தெளிவாகக் காட்டுகிறது. மக்களுக்குப் பகைவர்களாக உள்ளவர்கள் அழியும் நிலையும் இந்த ஆண்டில் உண்டு.

ஒவ்வொரு ஆண்டிலும் நிர்வாகப் பொறுப்பைச் சூரியன் முதலாக, சனி ஈறாகவுள்ள ஏழு கிரகங்களே குறிப்பிட்ட நியதியின்படி ஏற்று நாயகர்களாக விளங்குகின்றனர்.

அரசன், மந்திரி, சேனாதிபதி, ஸஸ்யாதிபதி, தானியாதிபதி, அர்க்காதிபதி, மேகாதிபதி, இரஸாதிபதி, நிரஸாதிபதி என்று ஒன்பது நாயகர்களாக ஏழு கிரகங்களே செயல்படுகின்றன.

சில கிரகங்கள் இரண்டு அல்லது மூன்று நாயகர் பதவிகளையும் வகிப்பதுண்டு.

சில கிரகங்களுக்கு ஒரு நாயகப் பதவியும் இல்லாது போவதும் உண்டு.

இவ்வாண்டின் நாயகர்களாக உள்ளவர்கள் வருமாறு:-

அரசன் - செவ்வாய்,
மந்திரி - சுக்கிரன்,
சேனாதிபதி - வியாழன்,
ஸஸ்யாதிபதி - சந்திரன்,
தனியாதிபதி - சனி,
அர்க்காதிபதி - சுக்கிரன்,
மேகாதிபதி - சுக்கிரன்,
இரஸாதிபதி - புதன்,
நிரஸாதிபதி - சந்திரன்.

இவ்வாண்டில் சுபக்கிரகங்களே பெரும்பாலானவற்றிற்கு நாயகர்களாக உள்ளதால் நன்மை மிகும் என்பது வெளிப்படை.

கிரகங்களிடமிருந்து பெற வேண்டிய நன்மைகள் அனைத்தையும் எதிர்பார்ப்போர் அந்தக் கிரகங்களைக் குறித்து வழிபாடுகள் நடத்துதல் பயன்தரும்.

### வழிபாடுகள்

சிவவழிபாடு, அபிஷேகம், சூரிய நமஸ்காரம், மாணிக்கத்தை அணிதல், சிவப்பு வஸ்திரங்களை விரும்பி அணிதல் பொன், அன்னம் இவற்றைத் தானமாக அளித்தல், சூரியனால் நன்மை பெற உதவும்.

உமாதேவியைப் பூரணையன்றும், திங்களன்றும் வழிபடுதல், முத்து அணிதல், வெள்ளை உடை அணிதல், வெள்ளை ஆடை, வெண்ணிறப் பசுவைத்தானம் செய்தல் சந்திரனால் நன்மை பெற உதவும்.

முருகனைக் கடம்பமலரால் பூசித்தல், பைரவி, பத்திரகாளி ஆகியோரைச் சிவப்பு மலர்களால் அர்ச்சித்து வழிபடல், சிவப்பு ஆடை, பவளம் இவற்றை அணிதல், எருதைத் தானம் கொடுத்தல், செவ்வாயினால் நன்மை பெறச் செய்யும்.

திருமாலையும், சரஸ்வதியையும் பச்சைப் பட்டினை அணிவித்து வழிபட்டும், மரகத இரத்தினம், பச்சை நிறமுடைய ஆடை இவற்றை அணிதலும் பச்சைப்பயறு தானம் வழங்குதலும் புதனால் நன்மை பெறச் செய்யும்.

தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் சிவனை, அபிஷேகம் சகஸ்ர நாமம் இவற்றால் வழிபட்டும், புஷ்பராகம் என்ற ரத்தினம், மஞ்சள் நிற ஆடை இவற்றை அணிந்தும், பூமி, அன்னம், பொன், கபிலைப் பசு இவற்றைத் தானம் வழங்கியும் குருவினருளால் நன்மை பெறலாம்.

துர்க்கையையும் மகாலட்சுமியையும் வெள்ளை மலர்களால் பூசித்தல் வெள்ளை ஆடை, வைரம் இவற்றை அணிதல், வெள்ளை நிறப் பசுவைத் தானமாக வழங்குதல் சுக்கிரனது அருளைப் பெற்றுத் தரும்.

விஷ்ணுவையும், ஐயப்பனையும் வழிபடுதல், மிருத்யுஞ்ஜய ஜபம், சனி வழிபாடு கருப்புத் துணியில் எள்ளை முடித்துத் தீபமேற்றுதல், நீலக்கல்லையும் கறுப்பு உடையையும் அணிதல், எருமை, கருநிற ஆடு இவற்றைத் தானம் வழங்குதல் சனியின் மூலம் நன்மைபெற உதவும்.

இராகுவிற்கு துர்க்கையையும், கேதுவிற்கு துர்க்கை, விநாயகர் இருவரையும் வழிபடுதல் நலம் தரும். பொன்னாலான நாகப் பிரதிமையையும் முறையே கருப்பு, சிவப்பு ஆடைகளையும் தானமாக வழங்குதல் இவர்களால் நன்மை பெற உதவும்.

இப்புத்தாண்டில் ஒவ்வொருவரும் நவக்கிரகங்களை அவரவர் சக்திக்கேற்றபடி உள்ளன்புடன் போற்றி வழிபட்டு மேன்மையடைவார்களாக. ★

- செ. ந. நடராஜன் -

### வந்திடுவாய் ஒரு வழியுடனே

நித்திரையுமில்லாமல் நெடுந்தூரம் இரவினிலே
எத்தனைநாள் ஓடினோம் தெருவினிலே
பத்தியெரியும் அடுப்பின்மீது உணவிருக்க
எத்தனைநாள் ஓடினோம் பசியுடனே

கத்தியுடன் கருஞ்சட்டைக்காரனென்ற வதந்தியிலே
எத்தனைநாள் ஓடினோம் பயத்துடனே
சத்தங்கேட்குது ஷெல்விழப்போகுது என்றே
எத்தனைநாள் பதுங்கினோம் குழியினுள்ளே

பக்தியுடன் தொழுகின்ற கோயிலுள்ளே
எத்தனைநாள் இருந்தோம்நாம் பயத்துடனே
மத்தியானம் கொழுத்துகின்ற வெய்யிலிலே
எத்தனைநாள் நின்றோம் முழங்கால்தனிலே

இத்தனைநாள் நாமடைந்த துயரங்கள்யாவுமே
சித்திரவதைகள் சிறுகுலத்தோர் செய்வதையே
அத்தனையும் நிரந்தரமாய் அகன்றிடவே
சித்திரைப்புத்தாண்டே வந்திடுவாய் ஒரு வழியுடனே

— நவீனன்


புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
★ மணிக்கூடு கைக்கடிகாரங்கள், டி. வி. டெக் திருத்துவதில் பிரசித்திபெற்றவர்கள்.
★ வீடியோ கசட்டுக்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
துயா எலக்ரோனிக் கொம்பிளக்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி
கிளை:- ஜுபிலி பஸார், யாழ்ப்பாணம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★ பலசரக்கு
★ பாடசாலை உபகரணங்கள்
★ நியூஸ் ஏஜண்ட்
முருகன் ஸ்ரோர்ஸ்
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரியதாகட்டும்
பாடசாலைப் புத்தகங்களை சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்
விநாயகர் ஸ்ரோர்ஸ்
புத்தூர்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி.

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
அதிகாலையில் ''உதயன்'' பத்திரிகை டெலிவரிக் கட்டணமின்றி வீட்டுக்கு வீடு டெலிவரி செய்யப்படும்.
கஜன் குறூப்
48A, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
தரத்தின் சின்னம்
★ றொபின் சவர்க்காரம்
★ புளூடயமன்ட் கண்ணாடிப்பொருட்கள்
தயாரிப்பாளர்கள்:
த பெனின்சுலா குறூப்
நாவற்குழி.

புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!
● பாடசாலை உபகரணங்கள் ● பலசரக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ துர்க்காஸ்
(பத்திரிகை ஏஜண்ட்)
பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★ கீல்ஸ் தயாரிப்புக்கள் ★ கார்ணிவல் ஐஸ்கிரீம் வகைகள்
★ உள்ளூர், வெளிநாட்டு மதுபான வகைகள் கிடைக்கும்.
90 வருட வியாபார முன்னோடி
சுப்பையா அன் சன்ஸ்
106, பலாலிவீதி, திருநெல்வேலி.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
● பாடசாலை உபகரணங்கள் ● வெளிநாட்டுச் சஞ்சிகைகள் ● வாழ்த்து மடல்கள் கிடைக்கும் இடம்
R. இராஜதுரை (பத்திரிகை ஏஜண்ட்)
லக்கி பான்ஸி ஹவுஸ். இருபாலைச்சந்தி, கோப்பாய்.

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
ஸ்ரீ அபிராமி
பலாலிவீதி, திருநெல்வேலி.

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
அன் பான்ஸி கூட்ஸ்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

T. V. TRAVELS & TOURIST
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
★ சவூதி, குவைற் நாட்டிற்கு சாரதியாகவும் சுத்திகரிப்பாளர்களாகவும் உடன்பயணம் செல்ல விரும்புவோருக்கு நான்கு வாரத்தில் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்
(FRONT OF RAILWAY STATION)
BROWN ROAD, KOKUVIL.

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரியதாகுக!
★ விநாயகர் ஸ்ரோர்ஸ் ★
(பலசரக்கு விற்பனையாளர் - உதயன் நியூஸ் ஏஜண்ட்)
அச்செழு, நீர்வேலி.

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
எஸ். கோகிலன்
(பிரபல பத்திரிகை விற்பனையாளர்)
கனகா ட்ரேடர்ஸ், திருநெல்வேலி.

எமது உளங் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சுத்தமான 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் நகைகள் செய்து கொடுக்கப்படும்.
புனிதா ஜுவல்லறி மார்ட்
தொலைபேசி: 24279
32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்


அன்பு, ஆதரவு, சிறந்து விளங்க
அன்பர்கள், வாடிக்கையாளர்கள் நண்பர்களுக்கு
**புதுவருட நல்வாழ்த்துக்களை**
தெரிவித்துக்கொள்கிறார்
**S. S. சர்மா அவர்கள்.**
உங்கள் மறக்கமுடியாத மகிழ்ச்சிகரமான
வைபவங்களுக்கு ஏற்ற
சப்பறம், மணவறை, பூந்தண்டிகை, பந்தல் சேவை,
பந்தல் சோடனை, கதிரைகள்
என்பன வாடகைக்கு விடப்படும்.
என்றும் உங்களுக்குச் சேவை நல்கக் காத்திருக்கும்
S. S. சர்மா
முருகமூர்த்தி வீதி, சங்கானை

எமது உள்ளங் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**சிற்றி மெடிக்கல்ஸ்**
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்
**எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**நிரு டியூஷன் சென்ரர்**
புகையிரத வீதி, கோண்டாவில்.

எம்மினிய நாட்டினிலே இன்பம் தழைத்திருக்க
இப்புத்தாண்டில் வாழ்த்துகிறோம்
சகலவிதமான
* ஆங்கில மருந்துகள்
* ஆயுர்வேத சரக்கு வகை
* கோவில் அபிஷேகத் திரவியங்கள்
மற்றும் நற்கருமங்களுக்கு ஏற்ற பொருட்களையும் பெற
**சித்தி மெடிக்கல் சென்ரர்**
புகையிரத நிலைய றோட், மல்லாகம்.
தினசரி வைத்திய சேவை
டாக்டர் பேரம்பலம் பத்மநாதன் (மாலை)
டாக்டர் சி. சிறிஸ்கந்தராஜா (மாலை)
தற்பொழுது சிறுபிள்ளை வைத்திய நிபுணரின்
சேவைப்பகுதி ஞாயிறு காலையில் நடைபெறுகின்றது.
தினசரி கால்நடை வைத்தியரின்
ஆலோசனையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விரிவுரையாளர்களுக்கும்,
மாணவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
**இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**SCHOOL OF BISINESS ADMINISTRATION**
16, 3rd Cross Street,
JAFFNA.


## புதுவாழ்வுக்கு வழி வகுக்கும் புத்தாண்டுச் சம்பிரதாயங்கள்

எமது சமயமரபிலே பாரம்பரிய நம்பிக்கைகளைப் புதுப்பித்துக்கொள்ளும் மங்கள தினமாக விளங்குவது சித்திரைப் புத்தாண்டாகும்.

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளும் அனுட்டிக்கும் விரதங்களும் சிறப்பாக சூரிய சந்திரர்களின் நிலையினைப் பொறுத்தே அமைவது குறிப்பிடத்தக்கது. இதனைப் பஞ்சாங்கங்கள் உறுதிசெய்கின்றன.

சூரியன் இந்துக்களின் கண்கண்ட தெய்வமெனப் போற்றப்படுபவன். நவக்கிரக மண்டலத்தின் நடுநாயகமாக விளங்குபவன்; இவனை வேதங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இயற்கைச்சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி, மந்திரங்கள்மூலம் வழிபட நெறிப்படுத்தும் வேதங்கள், சூரியனை ஆதித்தியரில் ஒருவனாகப் போற்றுகின்றன. சூரியன் சவித்திரு என்றும் புகழப்படுகின்றான். இவன் தேவர்களின் கண் போன்றவன்.

சிவனது அட்ட மூர்த்தங்களுக்குரிய அம்சங்களாகச் சூரியனையும் சந்திரனையும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. சிவசூரியன், சூரிய நாராயணன் ஆகிய பெயர்கள் இவனது தெய்வீக நிலையைக் குறிப்பிடுகின்றன. வேதகாலத்தில் பரம்பொருளை ஒளியென வழிபாடு செய்த மரபுக்குச் சூரிய வழிபாடு பொருத்தமாக அமைந்தது. வேதங்களில் சிறந்த காயத்திரி மந்திரம் சூரியனுக்குரிய உயர் மந்திரமாக அமைந்தது. ''தமஸோமா ஜ்யோதிர்கமய'' என்ற மிருகதாரண்யக உபநிடத வாக்கு ''இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக'' என்ற வேண்டுதலை அடிப்படையாகக் கொண்ட ஒளிவழிபாட்டிற்கு வித்திட்டது. ஆன்மீக விழிப்புணர்வு பெற்று ஞானஒளி பெறவும் உள்ளொளி பெருக்கவும் சூரியவழிபாடு துணை செய்தது.

முத்தொழில் புரியும் சூரிய பகவான்ஆகமங்கள் வகுத்துக் கூறும் ஆலய வழிபாட்டில் சூரியனை எழுந்தருளுவித்து வழிபாடியற்றும் மரபு உள்ளது. சூரியபகவான் இவ்வுலகில் தனது ஒளியை வீசி அனைத்துப் பொருட்களையும் காணும்படி துணை செய்வதால் கடோபநிடதத்தில் 'எல்லோருக்கும் கண்ணாக இருக்கின்றான்' எனப்போற்றப்படுகின்றான் எனவே ''ஜகத்சக்ஷுஹு'' என்ற சிறப்புப்பெயர் வழங்கலாலாயிற்று. சாந்தோக்கிய உபநிடதத்தில் ஸ்ரீ நாராயணன் பத்மாசனத்தில் சூரிய மண்டலத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சூரிய வெப்பமின்றி உயிர்கள் உண்டாவதில்லை. இவ்வகையில் இவன் ஆக்கும் சக்தியாக உள்ளான். அளவான ஒளியால் உயிரினங்கள் உணர்வையும், ஊக்கத்தையும் பெற்றுவாழ துணைபுரிவதால் சூரியனது காத்தருளும் சக்தி வெளிப்படுகின்றது. அதிக வெப்பத்தினால் அழித்திடும்போது அவனது அழித்தல் சக்தி வெளிப்படுகின்றது. ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும்சூரிய பகவானுக்கும் உரியவை ஆகின்றன. அனைத்துத் தெய்வங்களோடு தொடர்புறும் சூரியன் பரம்பொருளாக வழிபடப்படுபவன்.

சோதிடக் கணிப்பின்படி இந்துந்களின் சமய அனுட்டானங்கள் சூரியனது சஞ்சாரத்தோடு பெரிதும் தொடர்புடையதாக அமைகின்றன. சூரியன் வடக்கு நோக்கி நகரத் தொடங்கி மகரராசியில் பிரவேசிக்கும் தைமாதத்தின் முதல்நாள் மகர சங்கிராந்தி என்று கூறப்படுகின்றது. அன்றையதினம் உத்தராயன புண்ணியகாலம் எனக் கருதப்படுகின்றது. தை தொடங்கி ஆனி வரை உள்ள காலப்பகுதி உத்தராயணம் ஆகும். தென்பகுதியில் சஞ்சரிக்கும்போது தக்ஷிணாயணம் எனக் கூறுவர். ஏனைய ஆறுமாதங்கள் இதற்குரியவை. உத்தராயணம் மங்களகரமான காலமாகும். இக்காலப்பகுதியிலேயே புத்தாண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

சோதிட வல்லுநர்கள் மாதங்களை இராசிகளின் அடிப்படையில் பன்னிரண்டாக வகுத்துள்ளனர். மேடம் முதல் மீனம் முடிய வரும் பன்னிரு இராசிகளிலும் தனித்தனி முறையே சூரியன் சஞ்சரிக்கின்ற சித்திரை முதல் பங்குனியீறாக அமையும் பன்னிரு காலப் பகுப்பு 'சௌர மாதங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றது. சூரியன் மேடராசியில் பிரவேசிப்பது முதல் மீனராசியை விட்டு நீங்கும் வரையுள்ள காலப்பகுதி 'சௌர வருஷம்' எனப் பஞ்சாங்கம் சுட்டும். சூரியன் சித்திரை முதல்நாள் மேடராசியில் பிரவேசிக்கின்றான். சூரியனது இப்பிரவேஷம் விஷு புண்ணியகாலம் என பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்படுகின்றது. பிரவேசிக்கும் போதும் பிரவேசித்த பின்னரும் நீடிக்கும் விஷு புண்ணிய காலத்துடன் வருடப் பிறப்புக் கொண்டாட்டங்களும் ஆரம்பமாகின்றன. எனவே இந்துக்களின் புது வருடப்பிறப்பு சூரிய வழிபாட்டோடு மிகவும் பின்னிப் பிணைந்ததொன்று என்பது தெளிவாகின்றது.

### முன்னோடிக் காரியமான தூய்மைப்படுத்தல்

இப்புது வருடப்பிறப்பு எமது வாழ்க்கையில் நடந்து முடிந்த துயரச் சம்பவங்களையும் இன்னல்களையும் மறந்து, புத்துணர்வுடனும், புதுத்தெம்புடனும் புதிய வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்வதற்குரிய நன் நாளாகவும் அமைகின்றது. பழையன கழிதல் என்ற நிலையில் எமது இல்லங்களையும் சூழலையும் புதுப்பொலிவு பெறச் செய்யும் வகையில் தூய்மைப்படுத்துதல் புதுவருடப் பிறப்பையொட்டிய முன்னோடிக் காரியங்களாகும்.

புத்தாண்டு விஷுபுண்ணிய காலத்தில் நாம் மருத்துநீர் தேய்த்து நீராடுவது மனிதனைப் புறநிலையில் தூய்மைப்படுத்தும் முயற்சியாக அமைகின்றது.

நீராடியபின் புத்தாடை புனைதல் முக்கியமானதொரு சம்பிரதாயமாகும்.

புது வருடத்திற்குரிய நிறங்களும் குறிப்பிடப்படுகின்றன. 'பிரமோதூத' என்ற பெயர் கொண்ட இவ்வருடப்பிறப்பன்று வெள்ளைநிறப்பட்டாயினும், வெள்ளைக்கரை கறுப்புக்கரை அமைந்த ஆடையாயினும் அணிய உகந்தது. எனப் பஞ்சாங்கம் அறிவுறுத்துகின்றது. இவை

(7 ஆம் பக்கம் பார்க்க)

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர். இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.


மாணவர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
ஆகியோருக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்!
JOIN WITH US TO STUDY THE LATEST COMPUTER TECHNOLOGY
**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, POWER HOUSE ROAD,
2nd L·NE,
JAFFNA.

எங்கள் அன்புமிகு பாவனையாளர்கள்
விநியோகஸ்தர்கள் நண்பர்களுக்கு
எமது அன்பான
**புதுவருட நல்வாழ்த்துக்கள்**
**★ லீலா பேக் ஹவுஸ் ★**
கிளை:- சிரணி, சண்டிலிப்பாய் — மாக்கற் சதுக்கம், சங்கானை.
தமிழ் ஈழத்தின் தரமான பிஸ்கட் உற்பத்தியாளர்.

எமது
ஆசிரியர்கள்-மாணவர்கள் அனைவருக்கும்
இனிய
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**
**NEW MASTER INSTITUTE**
B. M. C. Lane, 241, Navalar Road,
Jaffna.

**எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்**
தரமான மின் உபகரணங்கட்கு
நாடுங்கள்
**M. NAGARATNAM& COMPANY**
62, Stanley Road, Jaffna.

எமது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்
எமது மனங்கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**NEW SCIENCE ACADMEY**
In Front of B. M. C, Jaffna

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!
**குலசி ரேட்ஸ்**
(பலசரக்கு வியாபாரம், நியூஸ் ஏஜண்ட்)
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

50 வருடமாக றைக்கிளீன் சேவையின் முன்னோடிகளான சன்லைட் றைக்கிளீனேர்ஸ்
ஸ்தாபனத்தார் அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளருக்கு
**புதுவருட வாழ்த்தைத் தெரிவிக்கிறார்கள்**
★ தரமான ★ தெளிவான போட்டோ ஸ்ரட் பிரதிகள் சேவையும் வழங்குகின்றார்கள்.
**சன்லைட் றைக்கிளீனேர்ஸ்** இல. 23, பஸ்நிலைய முன்பாக, யாழ்ப்பாணம்.
கிளை: சன்லைட் றைக்கிளீனேர்ஸ், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(கச்சேரி முன்பாக)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளருக்கு
**எமது புதுவருட வாழ்த்துக்கள்!**
ரீ. வி. டெக், ரேடியோ, கசெட் ரெக்கோடர், மற்றும் விளையாட்டுப் பொருட்கள்,
மின்சார உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள
**எஸ். சிறீதரன்**
வாலாம்பிகா ரேடர்ஸ்
21/5,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 22708.

எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பாகள்
யாவருக்கும் இதயம் கனிந்த
**புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**
எமது நிறுவனத்தில்
பாடசாலை உபகரணப் பொருள்கள், காகிதாதிகள்,
மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள்,
இறக்குமதி செய்யப்பட்ட திருமண அட்டைகள்
யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், அபிமானிகள் வாடிக்கையாளருக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சிலோன் செரமிக் கோப்பரேஷன் வடபகுதி ஏக விநியோகஸ்தர்கள்;
★ உள்நாட்டு வெளிநாட்டு செரமிக் உற்பத்திப்பொருட்களும்
★ உஷா பிறிட்ஜ் வகைகள் ★ உஷா பான்கள்
★ எலக்றிக்கல்ஸ் ★ எஸ்லோன் பைப்புகளும்
★ கே. டி. கே. பான்கள், மின்சாரப்பொருட்களும்
உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்,
★ பிளைவுட் கதவுகள் ★ மோட்டார் வகைகள் ★ மாபிள் ரயில்ஸ் வகைகளுக்கு
மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாயவிலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்
**நியூ விமாகி**
27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**இரவு - பகல் சர்வதேச நேரடித் தொலைபேசிச் சேவை**
● எந்த நாட்டேனும் ● தெளிவான சம்பாஷணை ● நேரடியான துரிதசேவை ● நியாயமான கட்டணம்
தங்கள் சகல தொலைபேசி அழைப்புகளுக்கும் நாடுங்கள்:
**சர்வதேச நேரடித் தொலைபேசி நிலையம்**
எஸ். பீ. எஸ். போக்குவரத்து சேவைக் கட்டிடம்
இல. 27, விக்ரோறியா றோட்,
(யாழ். ஆஸ்பத்திரிப் பின் வீதி)
தொலைபேசி இலக்கம்- 025-2850

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
**வரதர் மாணவர் அகராதி Varathar Students Dictionary**
(ஆங்கிலம் - தமிழ்) (English - Tamil)
18400 சொற்கள் — 600 பக்கங்கள்
தொகுப்பாசிரியர்: கொக்குவில் கா. வை. இரத்தினசிங்கம்
ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு அத்தியாவசியமான நூல். (எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்)
விலை ரூபா: 95/-
தொகையாகப் பெறுவதற்கு:
ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்


ஒங்குக உண்மை! பெற்றிடுக நன்மை!
எமது வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
இதயம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
சீ பாங் விசா காட் எம்மால் ஏற்கப்படும்
நவீன நாகரிகத்திற்கேற்ற வெளிநாட்டுத் துணிவகைகள், திருமணத்திற்கான இந்திய பட்டுச் சேலைகள், றெடிமேட் சேட், ட்ரவுசர், ஜப்பான் சேலைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன்
தேர்ந்தெடுக்கச் சிறந்த ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரியகடை, 'ரகுராமன் பில்டிங்'
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22378. (C/1098)





ரதி வாச் வேக்ஸ், அன் ஸ்ரோர்ஸ்
T. V. ரதி
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★ சகலவிதமான ரேடியோக்கள், ★ டி.வி. டெக், ★ மின்சார உபகரணங்கள், ★ மற்றும் எல்லாவித மாத மணிக்கூடுகள் அனைத்தும் குறைந்த செலவில் திருத்துவதற்கும் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் ★ ரேடியோக்கள், ★ மணிக்கூடுகள் ★ சுவர்மணிக்கூடுகள் அனைத்தும் வாங்குவதற்கும் நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
ரதிவாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
42, 44, 46, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ரெலிபோன் இல. 23103



புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.
சகல தரத்திலான கதிரை, மேசை, கட்டில் வகைகளுக்கும், அலுமாரி போன்றவற்றிற்கும்
மற்றும்
றப்பர் மெத்தை, போம் செற்றிகளுக்கும்
நாடவேண்டிய இடம்:-
NIPPON FURNITURE
131, Kasthuriyar Road, Jaffna.



எமது வாடிக்கையாளர்களுக்கு
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!
உங்கள் சகல மருந்து தேவைகளுக்கும்
மற்றும்
✶ Carnival Ice Cream, ✶ Keells Foods,
✶ Bairaha Chicken போன்றவற்றிற்கும்
நாட வேண்டிய ஸ்தாபனம்
MEDICAL HALL
224, Hospital Road, JAFFNA.


## சூரியனுக்கு நன்றி பாராட்டும்

## சித்திரைப் புத்தாண்டுப் பெருவிழா

**- கலாநிதி இ. பாலசுந்தரம் -**

*(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ், பல்கலைக் கழகம்)*

சூரியனுக்குத் தமிழ்மக்கள் தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு ஆகிய இரு விழாக்களை நடாத்திவருகின்றனர். சூரியனுக்கு விழா எடுத்தல் அனைத்துப் பண்பாட்டாளரிடமும் காணப்படும் ஓர் அம்சமாகும்.

சூரியன் சுழன்ற வண்ணம் அசைந்து கொண்டிருக்கிறது. சூரியனின் அசைவு குறித்த நாள், திதி என்பவற்றைக் கணக்கிட்டு இந்துக்கள் விழாக்களை அமைத்துள்ளனர். சூரியன் உத்தராயணத்தைத் தொடங்கும்போது முதன்முதலாகத் தனுராசியிலிருந்து மகரராசியிற் பிரவேசிக்கும் தினத்தில் தைப்பொங்கல் விழா நடாத்தப்படுகின்றது. அதுபோன்றே சூரியன் இராசிகளுள் முதலாவதாகிய மேடராசியில் உதயமாகும்போது விஷுபுண்ணிய காலம் ஏற்படுகின்றது. அப்புண்ணிய காலத்தையே தமிழ் ஆன்றோர் புதுவருடப் பிறப்பென்று கணித்து விழாக்கொண்டாடி வந்திருக்கிறார்கள். இத்தினத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடையணிந்து, ஆலய வழிபாடுசெய்து, தான தருமங்கள் மேற்கொண்டு, வீட்டில் பொங்கலும் பூசையும் செய்து, உற்றார் உறவினருடன் கலந்து இன்பமாகக் களிக்கவேண்டும் என்பது தமிழ்ச்சான்றோர் காட்டிய புதுவருடவிழா நடைமுறையாகும்.

புதுவருடப்பிறப்பு விழாவிலே முனைப்பாக நிற்கும் விடயம் 'முதல் நிகழ்வு' என்பதாம். அந்த முதல் நிகழ்வைப் புனிதமாகக் கருதிக் கொண்டாடுவதே அனைத்துப் பண்பாட்டாளரதும் புதுவருடப்பிறப்பு விழாக்களில் முக்கியமாகக் காணப்படும் அம்சமாகும். பூர்வீகப் பண்பாட்டுக்காலம் முதலாக அதாவது, வேட்டை ஆடுதல், உணவு சேகரித்தல், விவசாயம் என்ற படிமுறைக் காலக் கட்டங்களிலும் இயற்கையின் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு சடங்குகளும் விழாக்களும் நடைபெற்று வந்திருக்கின்றன.

கடவுள் - கோள்மண்டலம் - மக்கட்சமூகம் என்ற மூன்று விடயங்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. இத்தொடர்புகளை வலியுறுத்தவும் - அவற்றின் முக்கியத்துவத்தை விளக்கிக் கொள்ளவும், அவற்றை மீண்டும் நினைவிற்கொண்டு செயற்படவும் இத்தகு விழாக்கள் அவசியமாகின்றன. புதுவருட விழாக்கள் உலகப் பண்பாட்டாளர் அனைவரிடமும் ஒரே தன்மைத்தனவாகவே காணப்படுகின்றன. இவ்விழாக்களின் அடிப்படைத் தத்துவங்களைப் பின்வருமாறு வகுத்துக்காட்டலாம்.

(அ) அண்டங்களின் அமைப்புக்களையும் அவற்றின் இயக்கங்களையும் விளக்கிக் கொள்வதற்காகச் சமய ரீதியான களியாட்ட நிகழ்ச்சிகளை நடாத்துதல்; தீ விளையாட்டு, நீர் விளையாட்டு, பொங்கல் பூசை என்பன நடாத்துதல்.

(ஆ) தீய தேவதைகள், தீய சக்திகள் என்பவற்றிடமிருந்து பாதுகாப்புப்பெறும் நோக்கோடு நடாத்தப்படும் குடிமனை சுற்றாடல் என்பவைற்றத் துப்புரவாக்குதல், நீராடுதல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் புதியதொரு சமூகத்தை உருவாக்குதல்.

(இ) அண்டங்களின் ஆக்கரீதியான செயற்பாடுகள் புதிய ஆண்டிலும் நன்மை தரத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பதற்காக, அதற்கு இசைவான புராணக் கதைகள் சார்ந்த கலைநிகழ்ச்சிகளை நடாத்திக் குறிக்கோளை அடைதல்.

(ஈ) சென்ற ஆண்டில் முரண்பாடு கொண்டிருந்த சமூக உறவுகளை விருந்தாட்டு, உறவுகலத்தல் என்பன மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்தி இவ்வாண்டில் நல்லுறவுகொண்ட சமுதாயம் தோன்ற வழிவகுத்தல்.

எனவே அனைவரது புதுவருட விழா நிகழ்ச்சிகளும் அதன் அடிப்படைக் கருத்துக்களும் புதுவருடத்தில் புதுப் பொலிவுடனும், நிறைமனத்துடனும் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடையனவாக இருத்தல் நோக்கத்தக்கது.

இந்துக்களைப் பொறுத்தவரையில் சித்திரைப் புதுவருட விழா சூரியனுக்கு நன்றி பாராட்டும் விழாவாகவே கருதப்படுகிறது. மாரிகாலத்தில் நெல்விதைத்து பங்குனியில் அறுவடைசெய்து பின்னர் நடாத்தும் அறுவடை விழாவாகவும் இதனைக் கருதலாம். வசந்த காலத்தைச் சந்தோஷமாகக் களிப்பதற்காகவே புதுவருடப்பிறப்பு விழா நடைபெறுகிறது எனினும் தவறாகாது. இப்புனித விழாக் காலங்களில் மக்கள் உள்ளம் பூரித்து ஆடல் - பாடல்களில் ஈடுபடுவர். வடக்குக் கிழக்கு இலங்கையில் போர்த் தேங்காய் அடித்தல், மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுதல், தொட்டில் ஊஞ்சல் அமைத்து அனேகம்பேர் ஒன்றாக உல்லாசமாக மகிழ்தல், கிளித்தட்டு, கிட்டியடித்தல் முதலான தமிழ்த் தேசிய விளையாட்டுக்களில் ஈடுபடுவர். ஆனால் நாம் நமது தமிழ்த் தேசியக் கலைகளையும் விளையாட்டுக்களையும் மறந்து வருகின்றோம். இவற்றை மீளவும் நினைவிற் கொண்டு பேணி நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கட்டி எழுப்ப வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். ✶

### சூரிய தரிசனம்

சுருதி யின்கண்
முனிவரும் பின்னே
தூமொ ழிப்புல
வோர்பலர் தாமும்
பெரிது நின்றன்
பெருமையென் றேத்தும்
பெற்றி கண்டுனை
வாழ்த்திட வந்தேன்:
பரிதி யே! பொருள்
யாவிற்கும் முதலே!
பானுவே! பொன்செய்
பேரொளித் திரளே!
கருதி நின்னை
வணங்கிட வந்தேன்;
கதிர்கொள் வாண்முகம்
காட்டுதி சற்றே.

- மகாகவி பாரதியார் -


வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இனிய
புதுவருட நல்வாழ்த்துக்கள்!
கே.கே.வி.
யாழ்ப்பாணம்
நகை மாளிகை
தங்க வைர நகை வியாபாரம்
82/4, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.
தங்கப் பவுண் வைர நகைகள்
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்
ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும்.
K. K. V. Jaffna Jewel House
82/4, Kasthuriar Road, Jaffna.
தொலைபேசி 021 — 22362





எமது வாடிக்கையாளர்களுக்கு புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!
உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய சகல தளபாடங்களுக்கும் போம் செற்றிகள், மெத்தைகள், கட்டில்கள், அலுமாரிகள் ஆகியவற்றிற்கும் நாடுங்கள்
HOME NEEDS
DEALERS IN FURNITURE
278, 280, (402), K. K. S. Road,
JAFFNA.



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
குணம்
வீடியோ... ஆம் அது ஒரு வீடியோ சமுத்திரம்
வீடியோ ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வண்ணம் எம்மிடம் பழைய, புதிய படங்களின் வீடியோ படப் பிரதிகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து கொள்ளலாம்.
★ உங்கள் தேவை! அதுவே எமது சேவை!! ★



வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.
செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் - நகை வியாபாரம்
189A & 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
போன்:- 23794



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இன்று உதயமாகும் பிரமோதூத புத்தாண்டு இன்று போல் என்றும் இனிதாய் இருக்க எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
NEW PHAARMED DISTRIBUTOR
128, Manipay Road,
Jaffna.
அத்துடன் கீழ்வரும் கம்பனிகளின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் நாமே என்பதையும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
✶ HEMS (Drugs) LTD.
✶ FARNELL CEYLON LTD.





வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
★ எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் ★
W. M. மென்டிஸ் அன் கோ லிமிட்டெட் இன்
யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்களாக அன்றும், இன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஒரே ஸ்தாபனம்
"வாமாஸ்" மதுபான விற்பனை நிலையம்
121/2, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
● வெளிநாட்டு, உள்நாட்டு மதுவகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.



எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!
எம்மிடம் சகலவிதமான பால்மா வகைகளும்,
மற்றும்
சாய்ப்புச்சாமான்களும், நவதானிய வகைகளும்
L. P. காஸ் (Gas) சிலிண்டர்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு
இன்றே நாடுங்கள்
CITY AGENCY
158, Stanley Road, JAFFNA. தொலைபேசி: 24812 154, Hospital Road, JAFFNA.




எமது வாடிக்கையாளர்களுக்கு அன்பு கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.
முகூர்த்தபட்டு பிடவைகளுக்கு பிரபலமானவர்கள்
காவேரி சில்க்ஸ்
இல: 48, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.




எமது வாடிக்கையாளர்களுக்கு புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்!
APPOINTED DISTRIBUTORS FOR:
JANSSEN PHARMACEUTICALS
CADILA LABORATORIES LTD
IPCA LABORATORIES LTD
VANIKAA MEDICALS
(DISTRIBUTORS OF PHARMACEUTICALS & SURGICALS)
274/2, Hospital Road, JAFFNA.



வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
★ எமது புதுவருட வாழ்த்துக்கள் ★
எமது நீண்டகால அனுபவத்தின் பின் தரமான "நியூரோன்" நீர் இறைக்கும் பம்புகளை உற்பத்தி செய்கிறோம். வெவ்வேறு இனங்களில் தயாரிக்கப்படும் பம்புகளை ஒருவருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கிறோம். உங்கள் தேவைக்கு எமது விற்பனை முகவர்களுடன் தொடர்பு கொள்ளவும். விற்பனைமுகவர்கள் இல்லாத இடங்களில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்:-
நியூரோன் எலக்ரிக்கல் இன்டஸ்ரீஸ்
141, 143 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது அன்பு கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
அழகிற்கு
அழகு செய்யும்
அழகிய
★ தங்கப் பவுண் நகைகளுக்கு ★
விஜயம் செய்யுங்கள் ➤
சோபனா ஜுவல்லறி
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

ரட்ணம்ஸ்,
பலாலிவீதி, கோண்டாவில்.

துன்பம் நீங்கி இன்பம் பெருகிட
நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அல்டி
சகலவிதமான
● கைக்கடிகாரங்கள் ● சுவர்மணிக்கூடுகள்
பெற்றுக்கொள்ளவும், சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் யாழ்நகரில் பிரசித்திபெற்ற ஸ்தாபனம்
★ ALDI ★
269/1, Power House Road, Jaffna.

அன்பும் ஆதரவும் சிறந்து விளங்க
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
முருகன் ஆபரண மஹால்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

அன்பும் ஆதரவும் சிறந்து விளங்க
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது அன்பு கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
தரமான கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும் கலர் படங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
கவி போட்டோ
கே. கே. எஸ். றோட், இணுவில்.

## இனிமையில் பொதுமையான இளந்தென்றலும் செந்தமிழும்

பௌராணிக வித்தகர்
- வ. குகசர்மா -

வருடத்தின் முதலில் வருவது இளவேனிற் பருவம். இதனை ''வசந்தருது'' என்பர் வடநூலார். இக்காலத்தில் வீசும் காற்று தென்றற் காற்று எனக் கூறப்படும். தென்றற் காற்றிற்கும் தமிழிற்கும் தொடர்பு உண்டு. தென்றற்காற்று பிறந்த இடம் பொதிகைமலை. தென் பொதிகை மாமுனியான அகத்தியர் தமிழை வளர்த்த தன்மையால் தமிழ் பிறந்த இடம் பொதிகையில் என்பர். தென்றலுக்கும் தமிழிற்கும் இனிமை பொதுத் தன்மையானது.

இனிமையான தென்றற் காற்றை அருள் தருகேள்வி அமையத்தேக்க பற்பல ஆசான் பாங்கு செல்லும் அறிவுடைய நல்ல மாணாக்கனுக்கு உவமிக்கிறது திருவிளையாடற் புராணம்.

நன் மாணாக்கன் ஒருவன் பல நல்லாசிரியரிடமும் சார்ந்து பல நூற் பொருள்களையுமுணர்ந்து நன்னடை வாய்ந்து சாந்த குணமுடையவனாய் ஒழுகுதல் போல் தென்றல் பலவிடங்களிலும் சென்று அங்குள்ள குணங்களைக் கவர்ந்து தண்ணளியுடையதாய் மெதுவாக வீசுகிறது என் அப்புராணம் கூறுகிறது.

இளவேனிற் பருவத்தைக் கோடை, எனவும் கூறுவர். கோடை மரங்களை மெலிவுறுத்தும் தன்மையானது. அருங்கோடையால் மரங்கள் வாடும்போது அந்த மரங்களைத் தழுவி நிற்கும் கொடிகளும் வாடிவிடுகின்றன. பின் மரம் தளிர்க்கும் போது கொடிகளும் தளிர்க்கின்றன. இக்காட்சி கற்புடை மகளிரும், காதலரும் ஈருடல் ஓருயிர் போல் அன்பாலியைந்து ஒருவர் உறும் இன்ப துன்பங்களை மற்றவரும் உறுகின்ற அன்பு நிலையைக் காட்டுவது.

இளவேனிற் பருவத்து மிக்க வெப்பம் நிழல் விரும்பத் தூண்டுதல் போல பிறவித்துன்பமாகிய வெப்பமும் இறைவன் பாதநிழலை விரும்பச் செய்கிறது.

இறைவனைக் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளுந் தருவாகவும் அத்தரு தருந் நிழலாகவும், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராகவும், மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாகவும் அக்காற்றில் விளைசுகமாகவும் கண்டார் இராமலிங்க சுவாமிகள்.

திருநாவுக்கரசுநாயனாரை சமணர்கள் வெப்பம் மிகுந்த நீற்றறையில் வைத்துப்பூட்டினார்கள். எதை அன்பு செய்ய வேணுமோ அதை அன்பு செய்து அதையே தொடர்வர் உண்மை ஞானிகள் என்பது 'பண்டிதமணி'யின் எடுத்துக்காட்டு.

அதே போல் நாவுக்கரசர் ஒரே மனத்துடன் இறைவனை தொடர்ந்தமையால் நீற்றறையில் இளவேனிற் காட்சியை அனுபவித்தார். அங்கே தென்றல் வீசியது. குற்றம் சொல்லமுடியாத இசையுடன் வீணை இனிய நாதம் எழுப்பியது. வண்டுகள் மொய்க்குந் தடாகமும் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நினைவூட்டும் மாலை மதியமும் அங்கே தோன்றியது. அவரே அதனைக் கூறுகிறார்.

''மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி
நிழலே''

## சித்திரையைத் தெரிந்ததில் அர்த்தங்கள் பல உண்டு

- திருமதி பவளம் கணபதிப்பிள்ளை -

தமிழ் வருடப்பிறப்பு ஒவ்வொரு வருடமும் ஆங்கில மாதம் ஏப்ரல் 13 ஆம் திகதி அல்லது 14 ஆம் திகதி வரும் பண்டிகை. புதுவருடத்தின் முதல் மாதமான சித்திரை அன்றுதான் பிறக்கின்றது.

''சுக்கில'' வருடம் போய் நேற்று வெள்ளி இரவு பிரமோதூத வருஷம் பிறந்துள்ளது.

இதை நாம் தமிழ்-சிங்களப் புத்தாண்டு என்றும், தமிழ் வருடப் பிறப்பு, தமிழ்ப் புத்தாண்டு என்றும் அழைக்கின்றோம்.

சித்திரையைப் புத்தாண்டின் முதற் திங்களாய்த் தேர்ந்தெடுத்ததில் அர்த்தங்கள் நிறைய இருக்கின்றன. வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டும் காலத்தை இயற்கையாகவே சித்திரைப் பெண்தான் தருகின்றாள். பருவ காலங்களில் இனிமையானது வசந்தம் எனும் இளவேனில் இன்பசுகம் சித்திரைப் பெண்ணுக்கே உரியது.

மாரி மழைத்தாக்கம் கோடை, வெயில், நலிவு, முன்பனிக்குளிர், பின்பனிப் பாதிப்பு இவற்றுக்கும் மத்தியில் மனித வாழ்வுக்குக் கிடைத்த சிறப்பான காலம் இது. இலையுதிர்கால இழப்புகள் இளவேனில் காலத்தில்தான் மறைகின்றன. இயற்கை அன்னையே புதுப் பொலிவும் புதுவாழ்வும் பெறும் காலம் இது.

புது வாழ்விற்குத் தயாராகும் காலம் இது. உழுது உண்டு வாழ்ந்த மக்கள் தங்கள் உழைப்பின் பலனைக் களஞ்சியத்தில் சேர்க்கும் காலமும் இதுதான். இயற்கைக்கே புத்துணர்வை புத்துயர்வை வழங்கும் வசந்த காலம் தனது வாழ்விற்கு வசந்தம் தரும் என்ற நம்பிக்கையில் அந்தக் காலத்தையே வருடப் பிறப்பாகக் கொண்டான் தமிழன். ★

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
கே. கே. எஸ் றோட், சுன்னாகம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
லக்ஷ்மி நாதன்ஸ்
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சகல ஆங்கில மருந்து வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
இந்திரபாலாஸ் பார்மஸி
108, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
(மையப் பொலீஸ் நிலையம் முன்பாக)

புதுவருட வாழ்த்துக்கள்!
அன்பர்கள், ஆதரவாளர்கள் மனம் குளிர்ந்திட
நாவுக்கு சுவையூட்டும்
★ தேனீர் ★ பால் தேனீர்
★ கோப்பி ★ பீடா
மற்றும்
★ சிற்றுண்டிவகைகள் ★ குளிர்பானவகைகளை
அருந்தி மகிழ ஓர் சிறந்த இடம்
செல்வ விலாஸ்
புகையிரத நிலைய வீதி. சுன்னாகம்.

வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
யாழ்நகரில் 14 வருட அனுபவம்கொண்ட மிகவும் பிரசித்திபெற்ற பல்கட்டி வரும், கண்ணாடி பரிசோதித்து கண்ணாடி வழங்கிவரும் நம்பிக்கையான ஸ்தாபனம்
வி. ரி. அன். சன்ஸ்
முகாமையாளர்:-
டாக்டர். றெஜி சொலமன்.
[கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் முன்பாக]
இல. 317, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்
சுவையான ஐஸ்கிறீம், குளிர்பானவகைகள்
மற்றும்
★ கட்லட்ஸ் ★ பற்றிஸ் ★ கேக்
★ மட்டன்றோல் ★ சுவீற்ஸ் வகைகளுக்கு
நீங்கள் என்றென்றும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
★ கல்யாணி கிறீம் ஹவுஸ் ★
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
சகலவிதமான டிசைன்களும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும். வட இலங்கையில் மூன்று தலைமுறையாகச் சேவையாற்றி வரும் ஒரே ஒரு ஸ்தாபனம்
ஜப்பான் ஜுவலர்ஸ்
(க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்)
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22518

வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது அன்பு கனிந்த
★ புத்தாண்டு வாழ்த்துக்கள்! ★
V. வடிவேல்
லங்கெம் பிராந்திய விற்பனவு நிலையம்
219, 221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★★★
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பளை.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
தங்களின் எல்லாவகையான பொருட்களையும்
பாதுகாப்பாகவும் விரைவாகவும், நியாயமான கட்டணத்தில்
யாழ் - கொழும்பு - யாழ்
ஏத்துச் செல்வதில் பல்லாண்டு கால அனுபவம் மிக்க
அரச அங்கீகாரம் பெற்ற லொறிப் போக்குவரத்து சேவையில்
முன்னோடியான ஒரே ஒரு ஸ்தாபனம்
தங்களின் லொறிப் போக்குவரத்து சேவைக்கு விரையுங்கள்
தரமான குதிரை மார்க் ஓடேனின்
யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள் மற்றும்
சகல மார்க் ஓடேன், செங்கற்கள், பூச்சாடிகளைத்
தங்கள் எண்ணம் போல் நியாயமான விலைகளில்
தெரிவு செய்திட இன்றே நாடுங்கள்
புஷ்பா அன் கோ
293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
162, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு. தொலைபேசி: 433524
514, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பும் ஆதரவும் சிறந்து விளங்க அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!
உறுதியும் உத்தரவாதமும் உள்ள தங்க நகைகளை குறித்த தவணையில் சிறந்தமுறையில் செய்துகொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்!
★ நதியா ஜுவல்லறி ★
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கியின் புதுவருட வாழ்த்துக்கள்!

புத்தாண்டைக் கொண்டாடும் தமது வாடிக்கையாளர்களுக்கும்,

மற்றும் ஆதரவாளர்களுக்கும்

## மக்கள் வங்கி

தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



## மக்கள் வங்கியே நம் தோழன்

பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.
14-04-1990

மக்கள் வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

அன்பு நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஸ்ரீ நளாயினி ஸ்ரோஸ்
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.
பலசரக்கு வியாபாரம் நியூஸ் ஏஜன்ட்

இன்பம் பொலியும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

செல்லையா பிரதர்ஸ்
காங்கேசன்துறை.

வளம் கொழிக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

விவசாய இரசாயனப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

முருகன் கமக் களஞ்சியம்
அம்பனை, தெல்லிப்பளை.

வாடிக்கையாளர், ஆதரவாளர், நண்பர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

ராசமணி ஸ்ரோர்ஸ்
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு.

## ஒவ்வொரு கணமும் ஒரு புத்தாண்டு!

## கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்!!

புத்தாண்டு தினத்தைத் தெய்வார்ப்பணமான ஒரு திருநாளாகக் கருத வேண்டும்.

பொதுவாகக் கொண்டாடப்படும் திருவிழாக்கள் எல்லாவற்றுச்குமே அற்புதமான உட்கருத்துக்கள் உண்டு.

ஆனால் மனிதர்கள் வெளிப்படையான வெறும் கொண்டாட்டங்களுக்கே முக்கியத்துவம் அளித்து அதில் அடங்கியுள்ள உட்கருத்தை உணரத் தவறி விடுகின்றனர்.

இப்படியான புனிதத் தினங்களில் தெய்வ வழிபாட்டுக்கே முக்கியத்துவம் கொடுத்து தெய்வத்தின் அருளை நாடி அதனால் வாழ்வின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கி ஆனந்தத்தைப் பெறும் வழி காண்பதே இப்பண்டிகை தினங்களின் நோக்கமாகும்.

அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானத்தைப் பெறவே இந்தப் புனித திருநாட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புனித தினங்களின் உட்கருத்தைத் தெரிந்து கொண்டு தக்கமுறையில் தெய்வ வழிபாட்டுடன் கழித்தால் எல்லையற்ற பேரின்பத்தைப் பெற வழிவகுக்கும்.

மனிதனுக்கு சிறந்த சரீரம் மட்டுமின்றி விவேகம் என்ற மதிநுட்பமும் பகுத்தறிவுடன் செயலாற்றும் ஆற்றலும் அளிக்கப்பட்டுள்ளன.

ஆயினும், அவனுடைய ஆயுள் ஒரு வரையறைக்குள் தான் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் அவன் நிலையாக உலகில் வாழ்ந்திருக்க முடியாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, குறுகிய இந்த ஆயுட்காலத்திற்குள் தன்னுடைய பகுத்தறிவை நல்ல முறையில் பயன்படுத்தி அர்த்தமுள்ள வாழ்வை வாழ முயல்வது ஒவ்வொருவரின் முக்கிய கடமையாகும்.

ஆனால் நடைமுறையில் நான் காண்பதென்ன...?



துர்ப்பாக்கிய வசமாக, பெரும்பாலோர் தம்முடைய அறிவாற்றலை தீய வழிகளில் பயன்படுத்தி இந்த விலை மதிக்க முடியாத அரிய மனித வாழ்க்கையை பாழாக்கி விடுகின்றனர்.

### மனிதனும் சமுதாயமும்

ஒவ்வொரு மனிதனும் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அறிவாற்றலையும் தான் பெற்ற செயலாற்றும் திறனையும் தனது சொந்த நலனுக்கு மட்டுமன்றி சமுதாயத்தின் பொது நலனுக்காகவும் பயன்படுத்த வேண்டும்.

மனிதன் சமுதாயத்தில் இருந்தே பலவித பயன்களைப் பெறுகிறான்? அதற்காக அவன் சமுதாயத்திற்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறான். சமுதாயத்திற்கு நன்றி செலுத்துதலே மனிதனின் தலையாய கடமையாகும். இதையே பக்தி எனலாம்.

தெய்வத்திருநாமங்களை நமஸ்கரித்துக் கொண்டு இருப்பது ஒரு வகையில் இந்த நன்றி செலுத்தும் செயலாகும்.

### ஒவ்வொரு நிமிடத்தையும் புனிதமாக்குங்கள்

புத்தாண்டைக் கொண்டாடுவது ஆண்டுதோறும் கடவுளின் அருளால் நாம் பெற்றுவரும் பயன்களுக்காக கடவுளை நினைத்து, அவருக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள திருநாளேயாகும்.

நிமிடங்கள், மணி, நாள், மாதம் என்று காலத்தின் அளவு மட்டுமல்ல, ஒவ்வொரு நொடியுமே இறைவனால் நிறைந்துள்ளதே.

எனவே ஆண்டைப் புனிதப்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு நொடியையும் புனிதப்படுத்துதல் அவசியமாகிறது.

ஒவ்வொரு கணமும் ஒரு புத்தாண்டு போன்றதே......!

புத்தாண்டுதினம் மட்டுமே முக்கியமெனக் கருதலாகாது; ஒவ்வொரு கணமும் முக்கியமே.

ஆகவே, ஒவ்வொரு கணமும், நல்லெண்ணத்துடனே, நல்லுணர்வுடனே, நற்செய்கைகளாலே நிரப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு நிமிடமும் தீய எண்ணங்களைத் தவிர்த்து நல்ல எண்ணங்களாலேயே மனதை நிரப்புங்கள். ★

**- பகவான் சத்ய சாயி பாபா -**

### பிரேம உதயம்!

புதிய
சங்கற்பங்களுக்கு
இன்னுமோர்
சந்தர்ப்பம்!
பிரமோத வருடம்
நாளாந்த
பெறுதிகளில் — ஓர்
நடை மாற்றம்.
சத்தியங்கள்
சருகாகிப் போக
மேலுமொரு
ஒத்திவைப்பு...
இந்தப் பல்லவி
இனிவேண்டாம்...!
இன்று முதல்
பிரேம உதயம்!

ஜெ. கௌரிதாஸன்

### புதுவாழ்வுக்கு...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

யாவும் எமது புறநிலைத் தூய்மைக்குரியவை.

**கைவிஷேசத்தின் முக்கியத்துவம்**

வாழ்க்கையில் பொருள் பண்டங்களைச் சிறப்பாகப் பெற்று நிறைவாழ்வு வாழ வழிவகுப்பது புதுவருடத்தில் சுபவேளையில் எமது பெரியோர்களிடம் நாம் பெறும் 'கை விஷேசம்' ஆகும் புதுவருடத்தையொட்டி நாம் அனுசரிக்கும் நடைமுறைகளில் இது மிகவும் முக்கியத்துவமுடையது எனலாம். பெரியோர்களை வணங்கி கைவிஷேசம் பெற்றபின்பே புதுவருடக் கொடுக்கல் வாங்கல் தொடங்குகின்றன. புதுக்கணக்குத் தொடங்குதல் போன்றவையும் இடம் பெறும். புதுவருடத்தையொட்டி எமது இனசனங்களின் உறவைப் புதுப்பிக்கும் வகையில் அவரவரது இல்லங்களுக்குச் சென்று மகிழ்வதும் குறிப்பிடத்தக்கதொரு சம்பிரதாயமாகும்.

சூரியனது மேடராசிப் பிரவேசத்துடன் பிறக்கும் பிரமோதூத என்ற இப்புதுவருடம், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி, பங்குனி 31உ வெள்ளிக்கிழமை பின்னிரவு 1 மணி 11 நிமிடத்திலும் இருக்கணிதத்தின்படி பின்னிரவு 3 மணி 56 நிமிடத்திலும் பிறப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible] களைப் பேணி புதிய சிந்த[illegible] பெறுவோமாக!

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மலரும் புத்தாண்டில் மனைதோறும் இன்பம்
பொங்கவும் நாட்டில் அமைதியும் சமாதானமும்
நிலைபெற்றுச் சுபீட்சம் ஏற்படவும்

சிங்கர் விவசாயப் பிரிவின்
மனங்கனிந்த வாழ்த்துக்கள்!

விவசாயிகளுக்குக் கைகொடுத்துதவ
எப்பொழுதும் காத்திருக்கிறோம்.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வீடியோ புளொசம்ஸ்
30, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவன் ஸ்ரோர்ஸ்
340, பல்கலைக்கழகச் சந்தி,
திருநெல்வேலி.

யாழ் நகரில்...
வெலிங்டன் சந்திக்கு அண்மையில்
மணிக்கூட்டு வீதியில் அமைந்திருக்கும்
யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்

தம் வாடிக்கையாளர்களுக்கு தித்திக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்!

தம் வாடிக்கையாளர்களுக்கு தரமான உணவுவகைகளை வழங்குவதில் முன்னணி வகிக்கின்றார்கள் என்று வாடிக்கையாளர்களே பாராட்டும் நிறுவனமாகி விட்டது.

காலை உணவாக:
இடியப்பம், இறைச்சிக்கறி, பாண், பருப்புக்கறி, சீனிச்சம்பல், கிழங்குக்கறி என்பவற்றையும் தரமான ஐஸ்கிறீம் வகைகளையும் சர்பத் குளிர்பானங்களையும் வழங்குகிறார்கள். தரமான பாண் விற்பனை செய்வதில் முதலிடம் பெற்றுவிட்டார்கள். தம் வாடிக்கையாளரை இன்முகத்துடன் வரவேற்கிறோம்.
★ விஷேச மதிய உணவு புரியாணி

யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
இல, 352, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வெளிவந்துவிட்டது! எங்கும் கிடைக்கும்!
அஷ்ட லக்ஷமி பாலர் தமிழ் - விலை: ரூபா 12/-
[புதிய எழுத்துச் சீர்திருத்தத்துடன்]

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம்
கைதடி.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அருள்நாயகி புத்தகசாலை
கொடிகாமம்.
★ அழகுசாதனப் பொருட்கள் விற்பனையாளர். ★ நியூஸ் ஏஜன்ட்.

இன்பம் பொங்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

தேவன் என்ரபிரைசஸ்
அளவெட்டி வடக்கு.

அன்பு கனிந்த புத்தாண்டு வாழ்த்துகள்!

V. T. கந்தையா ஸ்ரோர்ஸ்
தாவடிச் சந்தி, கொக்குவில்.
★ பலசரக்கு வியாபாரம். ★ நியூஸ் ஏஜென்ட்.

எமது இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!

சுஜீத் ஸ்ரோர்ஸ்
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.
★ கேக் வகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும்.
★ கேக் ஐசிங் செய்துகொடுக்கப்படும். ★ பத்திரிகை முகவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

## அறிவியல் இலக்கியம் படைத்து தமிழுக்கு அணி செய்வோம்!

தொல் சீர் மொழி என்ற வகையில் தமிழ் மொழியின் இலக்கியப் பரப்பு இன்னமும் பசுமையாகவே இருக்கின்றது. எமது பண்பாட்டுப் பெட்டகத்துள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் மகிழ்ச்சியும் பெருமையும் தருவது உண்மைதான்.

ஆனால் தமிழ்மொழியின் ஆளுமை துலங்க, நாம்

### புத்தாண்டில் ஓர் இலக்கியச் சிந்தனை

அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்ல வேண்டியுள்ளது. தமிழ் மொழியை அறிவியல் மொழியாக்க வேண்டிய தேவை மிக மிக அழுத்தம் பெறத் தொடங்கியுள்ளது.

இலக்கிய ஆசிரியர்கள் புகழ் பெற்ற அளவுக்கு அறிவியல் எழுத்தாளர்கள் புகழ் பெறவில்லை. சுவாமி விபுலானந்தர் ஓர் இலக்கிய ஆசிரியராகப் புகழ் பெற்ற அளவுக்கு அவரது அறிவியல் எழுத்தாக்கப் பணி சீர்தூக்கி விதந்து பாராட்டப்படவில்லை. கல்கியும், அகிலனும், சாண்டில்யனும் தமிழ் இலக்கியம் வளர்த்த சான்றோராகக் கருதப்படும் அளவுக்கு பெ. நா. அப்புசாமி என்ற அறிவியல் எழுத்தாளர் தமிழகத்தில் அறியப்படவில்லை. அவருக்கு அத்துணை கௌரவங்களும் வழங்கப்படவில்லை.

அறிவியல் எழுத்தாக்கங்களைத் தமிழில் வளர்க்க முயன்ற மஞ்சரியும், கலைக்கதிரும், ஆராய்ச்சியும், மலைப் பாறையிலே தூவப் பெற்ற விதைகளாகி விட்டனவோ என்ற உள நெருடல்களை ஏற்படுத்துகின்றன.

மேலை நாட்டில் ஒரு புதிய விமர்சனப் பாரம்பரியம் வளர்ந்து வருகின்றது. அதனை 'நிருமாணக் குலைப்பு' (டிகொன்ஸ்றக்ரிவ்) விமர்சனம் என்பர்.

**- கலாநிதி சபா. ஜெயராசா -**
*(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)*

பாரம்பரியமான மொழி பண்பாட்டு இறுக்கங்களுக்குள் அகப்பட்டுக்கொண்டு, தவறான வாசிப்பு, தவறான பிரதிநிதித்துவப்படுத்தல் என்பவற்றை ஆதாரமாக்கிக் கொள்ளும் நிலையை 'நிருமாணக் குலைப்பு' விமர்சனம் சுட்டிக் காட்டுகின்றது.

எமது பள்ளிக்கூடத் தமிழ் விழாக்களில் இலக்கிய விஷயங்கள் பேசிச்சுவைக்கப்படும் அளவுக்கு அறிவியல் இலக்கியங்களின் நயப்பை வளர்ப்பதில் பின்தங்கிய நிலையே காணப்படுகின்றது.

உலகின் அறிவு முன்னேற்றத்தோடு எமது மொழியும் விசைகொண்டு முன்னேற வேண்டும். ஆக்க இலக்கியம் படைப்பவர்கள் போன்று அறிவியல் இலக்கியம் படைப்பவர்கள் ஆயிரம் ஆயிரமாகத் தமிழை அழகு செய்ய வேண்டும்; அதற்கு அணி சேர்ப்போம். எமது பத்திரிகைகளும் அறிவியல் எழுத்தாக்கச் சுவையை வாசகரிடத்து ஏற்படுத்துமாயின் புத்தாண்டு அறிவுப் பொலிவுள்ள ஆண்டாக மலரும். ★


செல்வம் செறியும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
★ நியூஸ் ஏஜண்ட்
நாதன் ஸ்ரோர்ஸ்
கே. எஸ். வீதி,
மல்லாகம் சந்தி.


### புது வாழ்வு!

சித்திரைப் புத்தாண்டே!
உன்
பிரசவத்துடன்
நாங்களும்
புதிய பிறவி
எடுத்துவிட்டோம்.
இத்தனை நாட்களும்
வீட்டுக்
கல்லறைகளில்
மரணித்திருந்தோம்
இல்லை!
மௌனித்திருந்தோம்.
உருவமற்ற உயிருக்கு
உத்தரவாதம்
இனியும்
மரணத்திற்கு
மண்டியிடப்போவதில்லை.
ஏனென்றால் – சாவினை
சவாலாக அல்ல
வாழ்வாக ஏற்றுவிட்டோம்

களுதாவளை
-கமலநாதன்.

## தமிழர் வாழ்க்கை நெறியில் தெய்வப் பண்பே தலையாயது

உலகில் உள்ள இயற்கைப் பொருள்களைக் கொண்டே மனிதன் முன்னேற முடியும். இம்முன்னேற்றத்திற்குக் கருப்பொருளாக இவ்வியற்கைப் பொருள்கள் அமைதலின் அவைகளைத் தொல்காப்பியர் கருப்பொருள் என்பர். இக்கருப்பொருளில் ''தெய்வம்'' என்ற பொருளையே முதற்கண் கூறியுள்ளார் தொல்காப்பியர். அத்துடன் நிலப்பாகுபாட்டை அவர் சொல்லும் போதும் அவ்வவ் நிலங்களுக்குரிய தெய்வங்களையே முன்வைத்துக் கூறியுள்ளார். இவ்வாறு அவர் குறிப்பிடுவதற்கு ஓர் அரிய கருத்து இருக்கவேண்டும். அக்கருத்து யாது? அதுதான் அக்காலத் தமிழ்ச் சனசமூகத்தின் பண்பைத் தெளிவுபடுத்தும் கருத்தென்க. அச்சமூகப் பண்புகள் எவ்வளவோ இருந்தாலும் ''தெய்வப் பண்பே'' தலையானதும் சிறந்ததும் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே தொல்காப்பியரின் ஆணையாகும் என்று தெளிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

**- புலவர் நா. சிவபாதசுந்தரனார் -**

கற்கால மனிதனோ – நாடோடி மனிதனோ அக்கால விலங்குகளுக்கும், இயற்கையில் உண்டாகும் கல்மழை, பனி, பூகம்பம், முதலான வற்றிற்கும் அஞ்சி அவைகளைத் தமக்குத் தீமை செய்பவைகளாகக் கருதி வாழ்ந்தான். ''அச்சமே'' அக்காலச் சன சமுகத்தின் தொன்மைப் பண்பாகும். ''தெய்வம்'' என்ற சொல் தமிழில் ''அச்சம்'' பெருகத் தீமை செய்வது'' எனப் பொருள்படுகின்றது.

''கறுப்பும் சிவப்பும் வெருளிப் பொருள்''
(தொல் – உரி 74)

என்ற இந்நூற்பாவில் இந்த இரண்டு நாற்களுக்கும் சினம் என்ற கருத்து அமைந்தது எவ்வாறு என்று நாம் ஆராய வேண்டும். ஆதிமனிதன் இயற்கை தம்மீது கோபம் கொண்டபடியால் அன்றொரு பெருமழையும், பேரிடியும், பெருவெள்ளமும், பெருநோயும் உண்டாகின்றன என்று எண்ணினான்; என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

தொல்காப்பியர் நிலத்தொடு தெய்வம் கூறும் போது முல்லைக்கு மாயோன் என்றும், குறிஞ்சிக்குச் சேயோன் என்றும், மருதத்திற்கு வேந்தன் என்றும், நெய்தலுக்கு வருணன் என்றும் கூறியுள்ளார். இத்தெய்வங்களின் பெயரை ஆராயும் பொழுது விஞ்ஞானிகள் கூறிய கூற்றுக்கும் மேற்கூறிய நூற்பாவின் நிறப்பொருளுக்கும் ஓர் இயைபு அமைந்திருப்பதைக் காணலாம். மாயோனும் சேயோனும் முறையே கறுப்பையுடையவன், சிவப்பையுடையவன் என்று தமிழில் பொருள்படுகின்றது. எனவே இவ்விரு இயற்கை நிறப்பண்புடைய இத்தெய்வங்கள் தம்மை வெகுளுதலே தொழிலாகக் கொண்டன என்ற உணர்ச்சியின் மனப்பதிவால் அன்றே இவ்விரு பண்புக்கும் தமிழர் வெகுளல் என்ற பொருள் கொண்டார் என்க

(தமிழ் சமூகத்தின் தொன்மை நெறி என்ற கட்டுரையிலிருந்து)

## அரசியல், பொருளாதார விடிவுக்கு புத்தாண்டு வழிகாட்டுவதாக!

புத்தாண்டு புதிய நம்பிக்கைகளைக் குறிப்பது; புதிய மகிழ்ச்சியைக் குறிப்பது.

கடந்த ஆண்டின் துன்பங்கள் நீங்கி இந்த ஆண்டில் இன்பம் பெருக வேண்டும் என்பதே பொதுவாக மக்களின் புத்தாண்டுப் பிரார்த்தனை ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு சிங்கள – இந்து புத்தாண்டு என எமது நாட்டில் அழைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

எமது நாட்டில் வாழ்கின்ற இரண்டு பிரதான இன மக்களின் பொதுவிழாவாக அது அமைகின்றது. புத்தாண்டில் இந்தப் பொதுமை மூலம் இரண்டு இனங்களினதும் புதிய புரிந்துணர்வுக்கு வழி பிறக்க வேண்டும் எனப் பலரும் விரும்புகிறார்கள்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை இந்த

**- பாரதிநேசன் -**

ஆண்டுப் புதுவருட தினத்துக்கு புதுமெருகூட்டுகின்றது.

மனிதர் இன்பமாக வாழ வீட்டிலும் நாட்டிலும் நட்புணர்வும் அன்புணர்வும் ஏற்படவேண்டும். சாதி, இன, மத பேதங்களைக் கடந்து மக்கள் மத்தியில் ஒரு ஐக்கிய உணர்வு ஏற்படுவது இன்றைய அவசர தேவையாகும்.

எண்பதாம் ஆண்டுகள் எமது நாடாம் இலங்கையின் வரலாற்றில் இருள்படிந்த ஆண்டுகளாகும்; இரத்தக் களறிகள் ஏற்பட்ட காலமாகும்.

எமது நாடு எங்கே செல்கின்றது? இந்தக் கேள்வி அக்காலத்தில் பூதாகாரமாக எழுந்தது. நாட்டின் வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட நிலைமை நாடு முழுவதையும் சுற்றிப் பிடித்தது அப்போது.

அமைதியான காலத்தில் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினைகளை தீர்க்காமல் விட்டதனால் நாட்டின் ஒரு பகுதி மாத்திரம் அல்ல, முழு நாடுமே நோய்வாய்ப்பட்டது.

சந்தோஷ காலத்தில் உணராத பல விஷயங்களைத் துன்ப காலத்தில் மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்று இப்பொழுது கூறத் தோன்றுகின்றது. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் புதிய 'ஞானோதயம்' பிறந்திருக்கின்றது போன்ற காட்சி தோன்றுகின்றது.


ஒரு இனத்தவருடையது என்று கருதப்பட்டு உதாசீனம் செய்யப்பட்ட பிரச்சினை இனிமேலும் அப்படி அல்ல, நாட்டின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. தலைவர்கள் கசப்பான அனுபவத்தின் மூலம் பெற்றுள்ள இந்த ஞானத்தை பொது மக்களும் பெற்றுக் கொண்டால் பிரச்சினை தீர்வதற்கு வழி பிறக்கும்.

புத்தாண்டில் இதுவே இலங்கை மக்களின் பிரதான சிந்தனையாக அமையவேண்டும்.

மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழ நாட்டில் இன்று நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். எல்லாப் பிரச்சினைகளினதும் அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளே.

பணக்காரரை மேலும் பணக்காரராக்கி ஏழைகளை மேலும் ஏழைகளாக்கும் பொருளாதாரக் கொள்கைகள் நீக்கப்படவேண்டும். தேர்தலில் வாக்குச் சேகரிப்பதற்காகச் செய்யப்படும் 'விளம்பரப் பொருளாதாரத் திட்டங்கள்' மக்களுக்குப் பயன் அளிக்கப் போவதில்லை. இவை ஆகக் கூடினால் பிரச்சினைகளை நகர்த்திவிட, அதாவது இந்தப்பகுதி மக்களிடமிருந்து இன்னொரு பகுதி மக்களுக்குப் பிரச்சினைகளை நகர்த்திவிடத் தான் அவை துணை புரியும்.

புதிய அரசியல் புரிந்துணர்வும் புதிய பொருளாதாரக் கொள்கைகளும், பிறக்கும் புத்தாண்டில் அவசரமாகத் தேவைப்படும் விடயங்களாகும். ★




புத்தாண்டு வாழ்த்துக்கள்!
பயிர்களெல்லாம் செழிப்புற்று விளைந்திட
மானிட உள்ளங்களில் உவகை பொங்கிட
நாட்டில் சமாதானம் நின்று நிலைத்திட
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்!
ANGLO-ASIAN FERTILISERS
அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்.
95, ஹைட் பார்க் கோணர் கொழும்பு 2.
TRADLANKA



அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
(புகழ் பெற்ற வியாபாரிகளும் புதினத்தாள் முகவர்களும்)
பஸ் நிலையம், சுன்னாகம்.



புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
★ ஆங்கில மருந்து வகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ புகைப்பட உபகரணங்கள்
★ கேக்வகைச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்
அம்பாள் பார்மசி
இல. 1, நவீனசந்தை,
சாவகச்சேரி.



வாடிக்கையாளர், நண்பர்கட்கு
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
★ பாடசாலை உபகரணங்கள் ★ பலசரக்கு வியாபாரம் ★ நியூஸ் ஏஜன்ட்
★ விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனையாளர்,
★ நாதன் ஸ்ரோர்ஸ் ★
(உபதபாற் கந்தோர் அருகில்)
கட்டுவன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி புத்தாண்டுச் சிறப்பிதழ்

# மாணவர் கல்வியின் சிறப்புக்கு ஔவையார் காட்டும் திட்டம்

'ஔவை' என்றால் அறியாதார் யார்? ஐந்து வயதுப் பிள்ளைக்குக் கூட 'ஔவைப் பாட்டி' என்றால் தெரியும் - இவர் குழந்தைகளுக்கென்றே ஆத்திசூடி, நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற நூல்களைப் பாடியதும் மட்டுமல்ல, மாணவர்கட்கு உயரிய ஒழுக்கங்களையும், சிறந்த நீதிகளையும், எளிதாகவும், இனிதாகவும், படிப்படியாகவும் புகட்டும் ஒரு உயரிய கல்வித் திட்டத்தை முதன் முதலில் உருவாக்கியவரும் ஆவார். நம் ஔவையார் ஒரு மாணாக்கன் எப்படி இருக்கவேண்டும் எனக் கூறுவதைக் கேட்போமே!

'கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக' என்பது வள்ளுவர் வாக்கு - கசடறக் கற்காத கல்வியும் பயனற்றது, கசடறக் கற்றும், கற்றதன் பின்... அதற்கேற்ப ஒழுகாதவனின் கல்வியும் பயனற்றது என்பது நாம் அறிந்ததே. இதனை மேலும் நன்கு விளக்குகின்றான் ஔவைக் கண்ணில் பட்ட அரும்மாணாக்கன்.

'எழுதரிது முன்னம் எழுதிய
பின்னர்
பழுதற வாசிப்பரிது
பண்பாய் - முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக்
காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந்நிலை.

நாம் ஒரு நூலினை ஏட்டிலே பெயர்த்து எழுதுவது என்பது மிக இலகுவான செயலல்ல - அதனை எழுதிய தன் பின்னர் எழுதியதைப் பிழையின்றி வாசிப்பது மிக மிகக் கடினமான செயல். அதனைப் பிழையின்றி வாசிக்கும் திறமையைப் பெற்றுவிட்டாலும், பண்புடன் அதனைக் கற்பது, அதைவிடக் கடினமான செயல் அதாவது அதற்கேற்ற நேரமோ, ஏனைய வசதிகளோ எல்லோருக்கும் எளிதில் வாய்ப்

- ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி -

பதில்லை. அப்படிக் கற்றாலும் அதனால் கிடைக்கும் நல்ல பயன்களைக் காண்பது அரிது. அதனையும் கண்டுவிட்டாலும், அந்தக் கற்றவர்க்குரிய நிலையில் தளராது நிற்கும் ஒரு தன்மையினைப் பெறவேண்டும். அதுவே கல்வியின் பயனை நாம் அடைந்ததற்கு நிகரானது.

கல்வியின் சிறப்பு அடக்கத்திலேதான் உள்ளது. சிலர் மனம் விரும்பியபடி எல்லாம் அடக்கமின்றி நடக்கின்றனர். கற்றோர்கள் முன் பணிவுடமை வேண்டும். பணிவின்றி நாம் வாய் திறந்தால் எமக்கு அவமதிப்புத்தான் ஏற்படும்.

காணாமல் வேணதெல்லாம்
கத்தலாம் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக்
கூடாதே - நாணாமல்
பேச்சுப் பேச்சென்னும்
பெரும்பூனை வந்தாக்கால்
கீச்சுக் கீச் சென்னும் கிளி.

அதாவது கற்றவர்கள் இல்லாத ஒரு இடத்தில் அரைகுறையாகக் கற்றவர்கள் கூச்சல் போடலாம் ஆனால் கற்றவர்கள், அறிஞர்கள், மேதைகள் முன் கீழ்ப்படிவு இல்லாமல் எவருமே வாயைத திறத்தல் பார்ப்பதற்கு நன்றாக அமையாது. இப்படிப்பட்ட மாணாக்கர்களை இரண்டு மூன்று சொற்களைப் பேசக் கற்றுக்கொண்ட கிளி அதையே சொல்லிக்கொண்டிருக்க, அந்தப்பக்கமாக ஒரு பூனை வந்தால் கிளி தன் கர்வத்தை அடக்கிப் பயத்தில் கூச்சலிடும். அந்தக் கூச்சலே சிலவேளைகளில் பூனையிடம் அதனை மாட்டிக்கொள்ள வைத்துவிடும். எனவே ஆன்றோர் அவையை அறியாமல் பேசும் கர்வம் பிடித்தவர்களைக் கிளிக்கு உவமையாக்குகின்றார் ஔவையார் - பணிவுள்ள மாணவனைத்தான் ஒரு அரும்மாணாக்கனாக ஔவை கணிக்கின்றார்.

### கல்விக்கு எல்லை இல்லை

கல்விக்கு எல்லை இல்லை. இறைக்க இறைக்க கேணி ஊறுவதுபோல, நாம் கற்கக், கற்க, கல்வி என்னும் ஊற்று ஊறிக்கொண்டே இருக்கும். சாகும் வரையும் நாம் கற்க வேண்டும். இக் கல்வி தான் உண்மையான கல்வி. நாம் எல்லாம் கற்று முடித்துவிட்டோம் என்று நினைத்தோமேயானால் அது மடமையாகும். இந்த உண்மையினை ஔவையார்,

ஒன்றாகக் காண்பதே
காட்சி புலனைந்தும்
வென்றான்தன் வீரமே
வீரம் - என்றாழும்
சாவாமற் கற்பதே
கல்வி தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்
—என்கிறார்

அதாவது சாவாமற் கற்பதே கல்வி தன்னைப் பிறர் ஏவாமல் உண்பதே ஊண்' எனத் தான் கண்ட அரும் மாணாக்கன்மூலம் உணர்த்துகின்றார்.

ஒருமுறை ஒருபுலவர் ஔவையாரின் புலமையைச் சோதிக்க, தன்னுடைய கையில் உள்ள மண்ணைக்குறிப்பால்காட்டி, அதனுள் இருப்பதைக் குறிக்கும் வகையில் செய்யுள் இயற்றுமாறு ஔவையிடம் கேட்டார் - ஔவையார்.

அந்தப் புலவரின் செருக்கினை உணர்ந்தார் - அவரின் செருக்கினை அடக்க வேண்டும்என்று நினைத்தார். பிறருடைய திறமையைச் சரிவர உணராமல், அவசரப்பட்டுத் தன்னுடன் வாதம் செய்த புலவரின் அறியாமையை எண்ணினார். உடனே ஔவையார்.

'கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவென
உற்ற கலைமடந்தை
ஓதுகிறாள் - மெத்த
வெறும் பந்தயங்
கூறவேண்டாம் புலவீர்
எறும்பும் தன்கையாலெண்
சாண் —எனப்பாடினார்.

பிரமாவின் நாவில் வீற்றிருக்கும் சரஸ்வதியே, தான் கற்றது ஒரு கைம்மண்ணின் அளவு என்றும், கல்லாதது இந்த உலகளவு என்றும் கருதி இன்னமும் படித்துக் கொண்டிருக்கின்றாள்-வீணாகப் பந்தயம்கூறி வாதாட வேண்டாம், எறும்பும் தன் கையால் எண்சாண் அளவு தான் என்பதை உணர்ந்து அடக்கத்துடன் வாழவேண்டும் என்கிறார் —தான்கண்ட அரும்மாணாக்கன் மூலம் புலவரைச் சாடுகின்றார் ஔவையார்.

### பாராட்டின் முக்கியத்துவம்

மாணாக்கரைப் பாராட்டவும் தகுந்த நேரத்தை மனதிற்கொள்ளவேண்டும் -என்கிறார் ஔவையார்.

நேசனைக் காணாவிடத்தில்
நெஞ்சாரவே துதித்தல்
ஆசானை எவ்விடத்தும்
அப்படியே - வாச
மனையாளை பஞ்சணையில்
மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை
வேலை முடிவில்.

உங்கள் நண்பர்களை, நண்பியரை நேரில் பாராட்டுவது சிறப்பன்று. உங்கள் பாராட்டை முகஸ்துதி என்று அவர்கள் எண்ண நீங்கள் இடமளிக்கக் கூடாதல்லவா? எனவே அவர்கள் இல்லாத இடத்து நெஞ்சாரப் போற்றிப் பேசுதல்வேண்டும். எமக்குக் கல்விச் செல்வத்தினை ஊட்டும் ஆசிரியரை நேரில் போற்றுதல்வேண்டும். அதாவது எம்மனதார அவர்களை போற்றவேண்டும். பெற்றோர் தம்பிள்ளைகளை உள்ளத்துடன் பாராட்டவேண்டும். நேரில் பாராட்டுவதால் அவர்களின் ஆக்கம், ஊக்கம் அனைத்துமே கெட்டுவிடும்.

மனிதனை மனிதனாக உயர்த்துவதும், நன்மை தீமைகளை உணர்ந்து உயர்வான வழிவகைகளை வகுக்கச்செய்யவும்ஞானமும் கல்வியும் அவசியம் என்பது ஔவையாரின் துணிபாகும். ★

Tai-Pan for CASIO
CALCULATORS
OVER 100 MODELS AVAILABLE


ஏஜென்ட்
தாய்-பான் டிரேடிங் கம்பனி
2/1 இரண்டாம் மாடி, 96 குமார வீதி, கொழும்பு 11
தொலைபேசி: 546072 - 545616

★ புதுவருடத்தில் கைவிசேஷம் ★

# செல்வம் அருளும் இலக்குமி எவரிடத்தில் வந்து சேர்வாள்?

பிரமோதூத நேற்று வெள்ளி பின்னிரவு பிறந்துள்ளது. சுக்கில ஆண்டு கழிந்துவிட்டது.

புதுவருடம் பிறந்தது என்றால் மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை புனைந்து, இறைவனைத் தரிசிப்பதே முதற்காரியம். பெரியோரிடம் ஆசி பெறுதலும் அதனுடன் சேரும்.

விஷு புண்ணிய காலத்தில் இந்தப் புது வருடக் கருமங்

- அழகு அருணாசலம் -

களைச் செய்தபின், புதுப் பானையில் பொங்கலிட்டும் சுற்றம் சூழ உண்டு மகிழ்வது அடுத்த கருமம்.

அதற்கு அடுத்தது கைவிசேஷம். வாழ்க்கைக்கு உயிர்நாடியான தொழிலைச் செய்வதற்கு முன் கைவிசேஷம் பெறவேண்டும் என்பது புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு விதி முறை.

கைவிசேஷம் என்பது என்ன?

வருடம் முழுவதிலும் குறைவிலாது பொருள் கிடைக்க வேண்டும் என்று தனிமனித மனம் தன்னுணர்வோடு பிரார்த்திக்கும் நிகழ்ச்சி.

பொருள் — செல்வம் தரும் சக்தி எது? யார்?

பொருளுக்கு நாயகியாக விளங்குபவள் மஹாலஷ்மி. ஸ்ரீதேவி என்பது அவளின் மற்றொரு பெயர்.

இந்த இலட்சுமி எங்கே, எவரிடத்தில் விரும்பி உறைவாள்?

அவளே அதைச் சொன்னது பற்றிய ஒரு சம்பவத்தைப் புதுவருடத்தில் படியுங்கள்:-

கண்ணபிரானுக்கு உருக்குமணி, சத்தியபாமை என இரு மனைவியர், ஸ்ரீதேவியின் (மஹாலக்ஷ்மி) அம்சம் பெற்று அவதரித்தவர் உருக்குமணி. பூமிதேவியின் அம்சம் பெற்று அவதரித்தவர் சத்தியபாமை. செல்வச் செருக்குடன் கர்வமும் நிறைந்தவர் சத்தியபாமை. கண்ணபிரானிடத்தில் பேரன்பும், பக்தியும் கொண்டவர் உருக்குமணிதேவி.

உருக்குமணிதேவியின் அளவிறந்த பக்தியின் காரணமாக, ஸ்ரீ நாராயணமூர்த்தியின் திருமார்பில் திகழ்பவளாகிய ஸ்ரீதேவி, ஒருதினம் கண்ணபிரான் உருக்குமணி தேவியுடன் தனித்திருக்கும் தருணம் அவர்களின் முன்பு தோன்றினாள்.

செந்தாமரை மலர் அன்ன திருமுகமுள்ள ஸ்ரீதேவியைக் கண்ட உருக்குமணிதேவி, ஆச்சரியமும் பரவசமும் அடைந்து 'பத்மாசனீ, மஹாலக்ஷ்மி, பத்மினீ, மஹாதேவி உனக்குக் கோடி வணக்கங்கள். கருணைக் கடலே, நான் கேட்பவைகளுக்கு, இரங்கி உண்மையான விடைகளைக் கூறியருளவேண்டும் எனப் பிரார்த்தித்து.

நீ எவர்களை அடைகிறாய்,

யாரை அடைவதில்லை,

யாரிடத்தில் நீ நிலைபெற்றிருக்கிறாய், என வினாவினாள். கண்ணபிரான் முன்னிலையில் உருக்குமணி தேவியினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, ஸ்ரீதேவி கருணைகூர்ந்து மகிழ்ச்சியுடன் சொல்வாளாயினாள்.

'பேரன்புபூண்டவளே, அழகும் தைரியமும் வேலைத் திறமையுள்ளவனும், கோபம் இல்லாதவனும், தெய்வபக்தி உள்ளவனும், நன்றி உள்ளவனும், ஐம்புலன்களை அடக்கி ஆளும் சக்தியுள்ளவனும், சாத்வீக குணத்தை உடையவனுமாகிய மனிதனிடம் நான் நித்தியமாக உறைகிறேன்.'

'தருமத்தை அனுட்டிப்பவரும், தர்மம் தெரிந்தவரும், பெரியோரை அடுப்பவரும், அடக்கமுடையவரும், பிறர் மனதை அறிகிறவரும், காலத்தைச் சிறிதும் வீணாக்காதவரும், தானத்திலும் சுத்தத்திலும் ஊக்கமுள்ளவரும், புலனடக்கத்தையும் தியானத்தையும் தத்துவ ஞானத்தையும் விரும்புகிறவரும், வேதம் தெரிந்தவரும், கருணை உடையவருமான மகாத்மாக்களிடமும் நான் எப்பொழுதும் வசிக்கிறேன்.'

'அழகும் அடக்கமும் உடையவரும், தேவதைகளிடத்திலும் பிரம ஞானிகளிடத்திலும் பக்தியுள்ளவரும், வீடுகளையும் பாத்திரங்களையும் சுத்தமாக வைத்துக்கொண்டு பசுக்களையும் தானியங்களையும் ஊக்கத்துடன் பார்ப்பவரும் எப்போதும் உண்மை உள்ளவரும் காட்சிக்கு இனியவரும், சிறந்த குணங்கள் உள்ளவரும், ஆசாரம் உள்ளவரும், அலங்காரம் உள்ளவருமான மங்கையர்களிடத்திலும் நான் வசிக்கிறேன்'

'தரும சிந்தையுடையவரும் தருமத்தை அனுட்டிப்தவரும், அடக்கத்துடன் பெரியோர்களுக்குப் பணிவிடை செய்வதில் ஊக்கம் உள்ளவரும், தூய உள்ளமும், பொறுமையும் சாமர்த்தியமும் சத்தியமும் அடக்கமும் மனம்வாக்கு காயங்களில் ஒற்றுமை உள்ளவரும், தேவாரநம்பிக்கையுள்ளவர்களுமான பெண்களிடத்திலும் நான் வசிக்கிறேன்' என்றாள். ★

மலராக்கம்

எஸ். கே. சிவலிங்கம்,
எம். பாலகுமார்,
ஜே. எல். மரியநாயகம்,
எஸ். ஸ்ரீகாந்தா.

## புத்துயிர்ப்பினை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதுவரை, விருந்து கொடுப்பது முதல், பொருளாதார முயற்சிகளுக்கு நாள் பார்ப்பது வரை நாம் வருடப் பிறப்பைத் தொடர்ந்து செய்யும் கருமங்களை நோக்கினால் மேலே கூறிய 'புத்துயிர்ப்பி'ன் உண்மை தெரியும்.

புதுவருடக் கொண்டாட்டங்களின் பொழுது நமது பாரம்பரியத்தின் பொலிவினைப் பல விடயங்களில் காணலாம். பெரியவர்களைக் கும்பிட்டு எழும்புவது முதல், 'யாடு' விளையாடுவது வரை பலவற்றில் தமது பண்பாட்டுப்பாரம்பரியம் தெளிவுற நிற்கின்றது.

இன்றைய சூழ்நிலையில், இந்தப் புத்தாண்டுவிழா நம்மிடையே இரண்டு முக்கிய செயல்கள் பற்றிய வரன்முறையான சிரத்தைக்கு வழி வகுக்க வேண்டுமெனக் கருதுகிறேன்.

முதலாவது, ஈழத்துத் தமிழ்மக்களின் 'புத்துயிர்ப்புக்'கான செம்மையான நடைமுறைகள் பற்றிச் சிந்தித்துச் செயற்படுவது.

இரண்டாவது, தமது பண்பாட்டுப் பாரம்பரியத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்து அவற்றைத் தமது சமகாலத் தேவைகளுக்கியைய இயைபுபடுத்திக் கொள்வது.

இந்த ''நல்லநாள்'', வரவிருக்கும் ''பெருநாள்''களுக்கு வேண்டிய வழிமுறைகளைத் தருவதாக! ★

எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
கனடாவில் ஈழத்துப் பத்திரிகைகளான உதயன், சஞ்சீவி தற்பொழுது விற்பனையாகின்றன.
அத்துடன் இப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள:
K. மகேசன்
தொலைபேசி 416—2890579
416—5893924
FAX 416—2890478
416—9201089

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு எமது இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
நீங்கள் விரும்பிய தங்க, வைர நகைகளை நவீன டிசைன்களில் தெரிவு செய்வதற்கும்
ஓடர் நகைகளை குறித்த காலத்தில் செய்வித்துக்கொள்ளவும்
யாழ். நகரில் தரம் நாடுவோர் தவறாமல் நாடவேண்டிய ஸ்தாபனம்
நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
★ தங்கப்பவுண் நகை வியாபாரம் ★
தொலைபேசி: 24846

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கைலைன்ஸ்
ஸ்தாபனத்தார்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமது இனிய

புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றார்கள்

சஞ்சீவி சஞ்சிகை

14 - 04 - 1990 சனிக்கிழமை

தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்
வேலைகளுக்கு
ஸ்கைலைன்ஸ்
281 பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

## கருத்துக் கலசம்

மயூரா

### புதுவருட மனச்சங்கற்பம்

இன்று மங்களப் புத்தாண்டு. சுக்கில வருடம் கழிந்துவிட்டது. பழையதாகிவிட்டது. பிரமோதூத பிறந்திருக்கிறது. புதியதாக வந்திருக்கிறது. புதியனவற்றை வரவேற்று உபசரித்து உளம் பூரிப்பது மனிதப்பண்பு அதனால் பிரமோதூதவை பிரியத்துடன் வரவேற்போம்.

சித்திரை மாதம் வசந்தத்தின் வாசல். பூமித்தாய் பூரித்துப் பூக்கும் காலம். இயற்கை நல்லாள் மலர்ப் போர்வை போர்த்து மகிழ்ந்து மயங்கும் காலம். எங்கும் எழில் மயம். மனித மனத்துக்கு இதமூட்டும் இனிய காட்சிகள். நாற்புறமும் நறுமணம். மெய்யை மெல்லெனத் தழுவிப் புத்துணர்ச்சி தரும் பூந்தென்றல். காதில்இசை பொழிந்து உணர்வை லயிக்க வைக்கும் புள்ளினங்களின் இனிய கானம். எத்திசையும் இன்ப மயக்கம். மக்கள் மனதில் சொல்லொணாப் புளகாங்கிதமும் பூரிப்பும்.

இயற்கையின் பூரிப்புக் கண்டு மக்கள் புத்துணர்ச்சி பெறும் சித்திரையை தமிழ் மக்கள் புதுவருடத்தின் முதல் மாதமாக தெரிந்தெடுத்ததன் பொருத்தம்தான் என்னே! இயற்கையுடன் ஒன்றிய, இயைந்த வாழ்க்கையை அவர்கள் வகுத்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

பண்பாடும் கலாசாரமும் மிளிரும் நிகழ்ச்சிகளை நடத்தி, கலைஞர்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் ஊக்கமளிக்கும் விழாக்காலமாகப் புத்தாண்டுக் காலத்தைக் தமிழர்கள் கொண்டாடினார்கள்.

தெய்வ சிந்தனை மறவாது. சுற்றம் பேணி, சுகம் கொண்டாடும் காலமாகவும் புத்தாண்டுக் காலம் விளங்கியது.

வீரம் சேர்க்கும் விளையாட்டுகள்நடத்தி உடலுறுதி பேணவும் வருடப் பிறப்புக் கொண்டாட்டத்தில் வழி செய்யப்பட்டது. இவை எல்லாம் பழந்தமிழர் பழக்கமாக இருந்தவை. இப்போது அருகிவிட்டன.

ஈழத் தமிழர் மனங்கள், மனைகள் எல்லாம் கடந்த பல ஆண்டுகளாக இருள் மண்டிக் கிடந்தன. ஒளி காணாது வெதும்பி வாடின. பலவகைகளாலும், பலதரப்பினராலும் இன்னல்கள் அவர்களைச் சூழ்ந்து சித்திரவதை செய்தன. உயிர்ப் பாதுகாப்பும், உடைமைப் பாதுகாப்பும் இல்லாது அவதிப்பட்டனர்.

இப்போது பெருமாற்றம். வழமை நிலை. இவ்வேளை வருடப்பிறப்பும் வந்து நிற்கிறது.

இந்த வழமைநிலை நீடிக்க வேண்டும். எமது மக்களின் உரிமைகள் கிடைக்க வேண்டும்- இத்தனை வருடங்களாக அனுபவித்த இன்னல்களுக்கும் கண்ட இழப்புகளுக்கும் ஈடாக,இலட்சியம் ஈடேறவேண்டும். இதுவே ஈழத்தமிழர்களின் புதுவருடப் பிரார்த்தனை.

இப்போதைய நிலையை நிரந்தரமென நினைத்து வேண்டாத தமாஷாக்கள், டாம்பீகங்களில் காலத்தைச் செலவிடவேண்டாம். உரிமைகளை கையில் பெறும்வரை மனஉறுதி தளராது. முயற்சி விடாது தொடர்ந்து உழைக்க மனச்சங்கற்பம் செய்வோமாக! வெளியாரும், உள்ளகத்தாரும் செய்த கொடுமைகளால் நிர்க்கதிக்கு ஆளாயிருக்கும் எமது சகோதரர்களுக்கு புதுவாழ்வுதர மனம் கொள்வோமாக! வருடப் பிறப்புடன் வளமான வாழ்வுக்கு இடைவெளி விடாது உழைக்க உறுதி பூண்போமாக.

# பாரதப் போரின் பின்னரும் வாழ பாண்டவருக்கு கண்ணன் அளித்த வரம்

சகாதேவனின் பதிலை கண்ணபிரான் எதிர்பார்க்கவே இல்லை.

அவரது திருமுகத்திலே ஏற்பட்ட வியப்பு, திகைப்பு இதனை வெளிப்படுத்தியது.

அந்த இரு உணர்ச்சிகளுக்கும் ஆட்பட்டவர்களாய் வாயடைத்த நிலையில் தம்பியின் முகத்தை நோக்கியவாறு தர்மன், வீமன், அர்ச்சுனன், நகுலன் ஆகியோர் மௌனத்தில் கரைந்து போனார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குக் கண்ணனைத் தூதுவேண்டித் தருமன் கூறிய நிபந்தனைகள்...

துரியோதனன் அவைக்களத்தில் அன்று கூறிய சூளுரைகள் – இந்த நிபந்தனைகள் என்ற பெருவெள்ளத்திலேயே சிக்கி அமிழ்ந்து போய்விடும் என்ற ஏமாற்றத்தால் குமுறி எழுந்து தெய்வமாய் போற்றி வந்த தமையனையே எதிர்த்து வாதாடிய வீமனும், அர்ச்சுனனும், நகுலனும் வாய்பேசாச் சித்திரங்களாய்ச் சமைந்து போகும் வண்ணம் சகாதேவன் கூறிய பதில்தான் என்ன?

அவர்களுக்கு அவன் எக்காலத்திலும் விளங்கிக் கொள்ள முடியாத புதிராகவே இருந்து வந்திருக்கிறான்.

தருமனின் உள்ளும் புறமும் ஒரு தன்மையாகக் காட்சி தருவதை அனுபவத்தில் கண்டவர்கள் அவர்கள்.

ஆனால் சகாதேவன் இயல்போ அதற்கு நேர் மாறு. அவனுடைய மௌனம் மிகவும் அழுத்தமானது. அவன் அளந்து அளந்து பேசும் சொற்களோ அவர்களைக் கதிகலங்க வைக்கும். அவை மதிநுட்பம் வாய்ந்த தங்களையும் ஏமாற்றிக் கண்ணாம்பூச்சி விளையாடுவதை அவர்கள் கண்டு திகைத்த சந்தர்ப்பங்கள் மிகப் பல.

இன்றும் அதே கலக்கம், திகைப்பு!

மௌனம்... சிந்தனைக்குள் சிறைப்படுத்தமுடியாத கருத்துக்கள்... இவற்றின் சங்கமமே சகாதேவன்!

#### அன்று துரியோதனன் அவையிலே......

அன்று துரியோதனின் அவையிலே ஐவர்க்கும் தேவியான பாஞ்சாலி, துச்சாதனால் துகிலுரியப்பட்டு மான பங்கம் உற்றபோது—

அண்ணன் அவ்வேளையிலும் அமைதிகாக்க,

வீமனும் அருச்சுனனும் வெகுளியின் உச்சத்திலே தமது கதையிலும் வில்லிலும் கண்பதிக்க,

நகுலன் குமுறி எழுந்து தன் உணர்ச்சியை அடக்க முடியாது விழி சிவந்து உடல் வியர்த்து நிற்க,

அவ்வேளையிலும் சகாதேவன் மௌனமே அணியாகக்கொண்டு ஆடாது அசையாதிருந்தான்.

பாஞ்சாலி, "கொடியோராகிய துரியோதனனதும் துச்சாதனனதும் குருதி பூசிய பின்னரே குழல் முடிப்பேன்" என்று சபதமிட்டுத் தன் கூந்தல் அவிழ்ந்து புரள மாகாளியாய் நின்றாள்.

வீமன், "துரியோதனின் துடைபிளந்து அவன் குருதியை அருந்தி மற்றுள்ள அவன் தம்பிமாரது உயிர்களையும் பலிகொண்ட பின்னரே பாத்திரத்தில் நீர் குடிப்பேன்" என்று வஞ்சினம் புகன்று மறலியாய் நிமிர்ந்தான்.

அருச்சுனன் கர்ணனின் கதையை முடித்திடத் தன் காண்டீபத்தின்மீது ஆணையிட்டுக் குமுறினான்.

நகுலன், "கபடநரியாம் சகுனிக்குச் சாவளிப்பேன்" என்று கங்கணம்கட்டி விழியும் முகமும் சிவந்திட விளங்கினான்.

ஆனால்......

சகாதேவன் எந்தச் சூளுரைக்கும் தன்னை அடிப்படுத்திக்கொள்ளவில்லை. அவ்வேளையிலேயே தருமனின் தருமம் போலவே சகாதேவனின் மௌனமும் மகத்தானதாகக் காட்சி தந்தது.

"பாதிநாடு, அது இன்றேல் ஐந்து ஊர். அதுவும் இன்றேல் ஐந்து இல்லம் வேண்டு. இவற்றுள் எதுவும் துரியோதனன் தரமறுத்தால் அடுபோர் வேண்டு" என்று தருமன், பன்னீராண்டு வனவாசம் முடித்து ஓராண்டு அஞ்ஞாதவாசமும் கழித்தபின்னரும் நிபந்தனை விதித்துத் தூது அனுப்புவானாயின், அந்த நிபந்தனைகளைத் துரியோதனன் ஏற்பானோ, இல்லையோ?

தருமனின் தம்பிமார் எவ்விதம் ஏற்பர்? அவர்கள் அடைந்த இன்னல்கள், செய்த தியாகங்கள் யாவும் ஐந்து இல்லங்கள் பெறுதற்காகவோ?

#### சஞ்சய முனிவரின் தூது

அன்று திருதராஷ்டிரனின் தூதுவராகச் சஞ்சய முனிவர் வந்திருந்தார்.

'தருமா, என் மக்கள் கொடியோர்தாம். அவர்கள் உனக்கும் உன் தம்பிமாருக்கும் நீங்கள் இழந்துவிட்ட உரிமைகளை வழங்கார்கள் என்பதும் உண்மையே. ஆனால் இவற்றிற்காக நீ போர் மேற்கொண்டு என் மக்களைக்கொன்றுவிடாதே. நீ அறம் உணர்ந்தவன். வனவாசம் உனக்கோ உன் தம்பிமாருக்கோ கடினமானதன்று. முனிவர்களைத் தரிசித்து, நோன்பு பலநோற்று, தவம் இயற்றி நீயும் உன் தம்பிமாரும் மறுமைப் பயனை அடைவதே தக்கது'

இப்படி திருதராஷ்டிரன் வாக்காக முனிவர் வெளிப்படுத்திய கருத்துக்குப் பின்னருமா தூது? அதுவும் தூதுவனாக யார் செல்வது?

சாக்ஷாத் கண்ணபிரான்!

வீமனுக்கு இந்த ஏற்பாடு பெருங்கொடுமையாகவும் சகிக்க இயலாததாகவும் தோற்றியதில் வியப்பென்ன?

அவன் குமுறினான்; முழங்கினான்.

'அண்ணா, துளாய் மாலைத் தூயோன் தூது செல்ல வேண்டாம். என்னைத் தூதுவனாய் அனுப்புங்கள். எனது மலைபோலும் கதாயுதத்தைக் கண்டும், என் தம்பி விறல் விஜயனின் காண்டீப வில் கண்டும், எம் பக்கம் எம்பெருமான் நிற்கும் நிலை கண்டும், இமைப் பொழுதில் பகைவரது அழிவு கண்டும் மகிழவேண்டிய தாங்கள் தூது தூது என்று மாய்கிறீர்களே! இது தகுமா?'

'அக்காலம் பொறுத்ததெல்லாம் அமையாமல் இன்னும் இருந்து அறமே சொன்னால் எக்காலம் பகை முடிப்பது? திரௌபதி என்றுதான்

சோக்கன்

தன் கூந்தல் முடிப்பது?' — காண்டீபனின் வீறார்ந்த வெகுளி வாக்குகள் இவை.

'நாடு இரந்தோம் நாம் என்று பகைமன்னர் எம்மை நோக்கி நகைப்பரே? அவ்வாறு நகைக்கா வண்ணம் எமது வீர மறத்தினை வெளிப்படுத்துவோம்' — என்று பொரிந்து தள்ளினான் நகுலன்.

அவ்வேளையிலும் சகாதேவன் மௌனமே தன் ஆசாரமாகக் கொண்டு வாய் பேசாப் பதுமையானான் என்றால்...

கண்ணபிரான் இம் மூவரது கூற்றுக்களையும் கருத்திற் கொள்ளாது சகாதேவனை நோக்கி,

'புகலரிய உணர்வுடையோய்! புகழுடையோய்! புகல் நீ' என்று வேண்டினான் என்றால்...

உண்மையில் இவை ஆச்சரியமான சங்கதிகள் தாம். ஆனால் இவற்றை விட ஆச்சரியம் சகாதேவன் உரைத்த பதில்...

'இங்கு என் மூத்தோர் சிந்தித்து உரைத்தபடி நீ தூது சென்றால் என்ன? செல்லாவிட்டால் என்ன? நூற்றுவர் முதல்வன் பாதிநாடு வழங்கினால் என்ன? வழங்காதுவிடில் என்ன? பாஞ்சாலி தன் கூந்தலை முடித்தால் என்ன? முடியாது விடினும் என்ன? இறுதியில் என்ன நிகழும் என்பது அடியேனுக்குத் தெரியுமோ?'

'மாயவனே, அன்று நீ பூதனையின் முலைப்பால் உண்டு அவளின் உயிர் கொண்டாய். மருதமரங்களின் இடையிலே உன்னைக் கட்டியிருந்த உரலோடு தவழ்ந்து சென்று மரங்களாய் நின்ற அரக்கரை மாய்த்தொழித்தாய். சாமானியர் மனையில் வளர்ந்த மகத்தான பெரியோன் நீ. உன் திருவுளக் கருத்து எதுவோ அதுவே என் கருத்துமாகும்.'

சகாதேவனின் மௌன மொட்டு இதழ் விரித்து வார்த்தைகளாகிய மகரந்தத்தைத் தூவிக் கருத்து மலராய் மணம் பரப்பியபோது அந்த மணத்தைக் கண்ணன் ஒருவனாலேயே அநுபவிக்க முடிந்தது.

தருமனோ சிந்தனை வசத்தவனாய்ச் சிறிது நேரஞ் சகாதேவனை உற்று நோக்கிப் பின் தலை கவிழ்ந்தான்.

வீமனும், அருச்சுனனும், நகுலனும் மலர்மணத்தில் கிறக்கம் அடைந்து மயக்க நிலையிலே கண்களை மூடித் தலைகளிலே கைகளை வைத்தார்கள்.

கண்ணன் முறுவல் மாறா முகத்தோடு சகாதேவனை நோக்கித் தன் பின்னால் வருமாறு சைகை செய்து முன் நடக்க, சகாதேவன் அவனைத் தொடர்ந்தான்.

#### கண்ணன் சகாதேவன் உரையாடல்

'உலகம் எங்கும் அமைதி நிலவவேண்டும். உயிர்களெல்லாம் இன்பத்தில் திளைக்க வேண்டும். இவையே என் உள்ளக்கருத்துக்கள். தருமனும் என்னைப் போலவே எண்ணிச் சமாதானம் வேண்டித் தூது அனுப்புகிறான். சகாதேவா, நீ உன் தமையன்மார் முன்னிலையிலே சொன்னதைப்பற்றிச் சிந்தித்தால் நீயும் சமாதானத்தையே விரும்புகிறாய் என்று நான் கொள்ளலாமா? அதாவது நீயும் எங்கள் கட்சிதான் என்று முடிவுசெய்யலாமா?'

கண்ணன் வார்த்தைகள் சகாதேவனுக்குச் சிரிப்பை மூட்டின. அவன் கலகலவென்று சிரித்தான்.

கண்ணனுக்கு அவன் சிரிப்பு எரிச்சலை உண்டாக்கியது. அவன் தனது முகத்தைக் கடுகடுப்பாகக் காட்டி 'ஏன் சிரிக்கிறாய். என் முடிவு தவறா? என்னில் உனக்கு நம்பிக்கை இல்லையா?' என்று கேட்டான்.

'பரந்தாமா, உன்னை நம்பாவிட்டால் எமக்கு வாழ்வு ஏது? ஆனால் தனது கருமத்தைச் சாதிக்க விரும்பும் தாய் சிறுசிறு பொய்கள் கூறித் தன் குழந்தையை ஏமாற்றுவதுபோல, நீயும் பொய்களை எடுத்துரைப்பதைத்தான் என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. நான் அவற்றை நம்பி ஏமாறவேண்டும் என்று நீ எதிர்பார்க்கின்றாயா?'

இவற்றைக் கூறுகையிலும் சகாதேவனின் சிரிப்பும் குறும்பும் தொடர்ந்துகொண்டு தான் இருந்தன.

கண்ணன் தனது முகபாவத்தை முன்போலவே வைத்துக்கொண்டு, 'நான் சமாதானப்பிரியன் என்றது பொய் என்பதா உன்முடிவு?' என்று வினாவினான்.

'பெருமானே, நீ பரம்பொருள். நாமோ அற்பமானிடப் புழுக்கள். உன் திருவுள்ளத்திலே சாந்தி, சமாதானம் என்ற வார்த்தைகள் பெறுகின்ற கருத்துப் பரப்பு, அதன் எல்லை இவற்றை எம்மால் எப்படி விளங்கிக் கொள்ளமுடியும்?'

'அப்படியானால் நான் சமாதானம் என்று சொல்வது மானிடம் அழிந்தபின் உண்டாவதோர் அமைதி என்றா நீ பொருள்கொள்கிறாய்?'

'அப்படியும் இருக்கலாம்'

'என்ன...?'

ஆம்! புயல்வண்ணா! நீ பாரத அமரில் யாவரையும் நீறாகிப் பூபாரம் தீர்க்கப் புரியும் திருவிளையாடலின் ஓர் அங்கமே இந்தத் தூது என்று எனக்குத் தெரியும்'.

கண்ணனால் அதற்குமேல் தன்னை மறைக்க முடியவில்லை.

அவன் தனது தோல்வியை முறுவல்கொண்டு பூசிமெழுகியவனாய், ஆனால் உறுதியாக உரைப்பவன்போலச் சொன்னான்.

'சத்தியமாகச் சொல்கிறேன். யாவரையும் நீறாக்கி நான் அடையப்போகும் பயன்தான் என்ன? உம்... பாண்டவருக்கும் கௌரவருக்கும் போர் மூண்டால்தானே நீராவதும் பூமிபாரம் தீர்வதும் எல்லாம்? இந்தப்போர் நிகழாதிருக்கத் தூது பயன் தராது என்று நீ கருதினால் வேறுவழி சொல் பார்க்கலாம்.'

'மாயோனே, நான் சொல்லப்போகும் வழியைக்கேட்டு நீ என்னைப் பரிகசிக்கலாம்; எள்ளிநகையாடலாம். அவ்வாறெல்லாம் செய்யமாட்டேன் என்று வாக்குறுதி தந்தால் நான் வழிசொல்கிறேன்.'

'உன்மேல் ஆணை சொல்' என்றபடி கண்ணன் சகாதேவனின் கையைப்பற்றி, அவன் சொல்வான்:

கர்ணன் பூமியை ஆளவேண்டும். அருச்சுனன் கொலையுண்ணவேண்டும். பாஞ்சாலியின் விரித்த கூந்தம் வலுக்கட்டாயமாக முடிக்கப்படல்வேண்டும். வீமன்காலில்விலங்கேறவேண்டும். இவை மட்டும்போதாது இன்னும்...' சகாதேவன் தொடரமுடியாது தயங்கினான்.

'இன்னும்...?' கண்ணனின் வினா.

'உன்னையும் கைப்பிடித்து நேராக நான் கட்டுவனேல் வாராதுகாக்கலாம் மாபாரதம்.'

இதைக்கேட்டதும் கண்ணபிரான், சகாதேவனுக்குத் தான் முன்பு அளித்த வாக்குறுதியை மறந்தவன்போலப் பெருங்குரலெடுத்து நகைத்தான்.

'சகாதேவா, நீ முதலிற் குறித்த யாவும் நடக்கலாம். ஆனால் நீ என்னைக் கட்டுவது... நீ உன்னை உணர்ந்துதான் பேசுகிறாயா?' —பேச்

இலக்கியம்

சோடு சிரிப்பும் தொடர்ந்தது.

சகாதேவன் தயங்கவில்லை; தளரவில்லை.

அவன் உறுதியே உருவானவனாய்த் தலை நிமிர்ந்து, 'பரந்தாமா, முன்சொன்னவை நடக்காதுபோனாலும் உன்னை நான் கட்டுவேன் என்று சொன்னேனே? அது என்னால் நிச்சயம் முடியும். ஏனென்றால் உன்னை நான் உணர்வதுபோல நீ உன்னை உணரமாட்டாய்' என்றான்.

'என்னோடு விளையாடுகிறாயா? அறைகூவுகிறாயா? சரி! உனக்கு ஆற்றல் இருந்தால் என்னைக்கட்டுபார்க்கலாம்.'

அடுத்தகணம் கண்ணன் நின்ற இடத்திலே பதினாறாயிரம் கண்ணர்கள் – திருமால்கள் – சங்கு சக்கரதாரிகளாய் விண்ணையும் மண்ணையும் மறைத்தவர்களாய் எழுந்துநின்றார்கள்.

'எம்பெருமானே, ஆற்றலால் அல்ல. என் அன்பால் உன்னைக் கட்டுகிறேன். உன் திருப்பாதங்களைச்சிக்கெனப் பிடிக்கிறேன். நீ எங்குஎழுந்தருள்வது இனி??

—இப்படிக்கூறிய வண்ணம் சகாதேவன் கண்களை மூடித் தியானித்து அத்த் திருப் பெருவடிவங்களில் ஒன்றினது திருப்பாதங்களை இறுகப் பற்றியவண்ணம் தரையிலே விழுந்துகிடந்தான்.

#### கண்ணனின் வரம்

"சகாதேவா, உனது அதிதீவிர பக்குவநிலையைச் சோதித்தேன். நீ வென்றுவிட்டாய். என் கால்களை விடு" என்று கண்ணபிரான் திருவாய் மலர்ந்தார்.

அப்பொழுது பற்றற்றானாகிய அவன் குரலிலே கூடச் சிறிய தொருதளதளப்பு!

"பகவானே, பக்தர்க்கெளியானே, பரம்பொருளே, பாரதப்போரிலே பேரழிவு உண்டாகப்போகின்றது. அந்த அழிவில் பாண்டவராகிய நாமும் இடம்பெறுவதுதான் உன்முடிவு. ஆனால் அதை நீ மாற்றி எங்களைக் காத்தருளல்வேண்டும். இதற்கு நீ உறுதி அளிக்கும் வரை உன் திருப்பாதங்களை நான் விடப்போவதில்லை"- இவ்வாறு சகாதேவன் கூறிய வேளையிலும் உள்ளொளி வாய்ந்த அவன் விழிமலர்கள் குவிந்தே கிடந்தன.

"சகாதேவா, பாண்டவராகிய நீங்கள் பிறந்த காலம் தொட்டுக் கௌரவரின் சூழ்ச்சிக்கு இரையாகி அல்லற்பட்டீர்கள். காட்டிலும் மேட்டிலும் அலைந்தும் கரந்துறைந்தும் எண்ணுக்கணக்கற்ற தியாகங்களைப் புரிந்த நீங்கள் உங்கள் உரிமைகளைப் பெற்று மக்களிடையே அறம்வளர்த்து மறம் ஒழிக்க நான் ஒரு வாய்ப்புத் தந்துதானாகவேண்டும் ஆகவே நீயும் உன் சகோதரர்களும் பாரதப்போரின் பின்னரும் வாழ்வீர்கள் இது சத்தியம். இனியாவது என் கால்களை விடுவாயா?"—

சகாதேவன் கைநெகிழ்த்து எழுந்திருந்தபொழுது அவன் முன்பு கண்ணன் ஒருவனே தனது மாயப்புன்முறுவலோடு நின்றுகொண்டிருந்தான் ★

## புத்தாண்டுக் கோலம்



இக்கோலம் மலர்க்கோலம் போன்று அமைந்திருப்பதால் இதனை வருடப்பிறப்பிற்குப் போட மிகவும் சிறப்பாக இருக்கும்.

இதனை மாதப்பிறப்பு, நவராத்திரி போன்றவற்றிற்கும் போடலாம்.

இக்கோலம் மாக்கோலமாகவும், பூக்களினாலும், தானியத்தினாலும், வர்ணம் சேர்த்தும் போட்டுக் கொள்ளலாம்.

புத்தாண்டு வெண்மை நிறத்தில் பிறப்பதனால் கடும் நிறம் சேர்க்காமல் மஞ்சள் நிறத்திலும் வெண்மை நிறத்தினை அதிகமாகவும் சேர்த்துக் கொள்வது நன்றாக இருக்கும்.

புள்ளி போடுவது: 8 புள்ளிகள் நேராக 8 நிரைக்கு வைக்கவும். பின்னர் நடுவில் 4 புள்ளியினை முதலில் வட்டமாக அமைத்துக் கொண்டு படத்தில் காட்டியுள்ளது போன்று மற்றவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும்.

- திருமதி
நா. சோமசுந்தரக்குருக்கள்

## ரமழான் சிந்தனை



பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

கியாமத் நாளன்று இறைவனின் சந்நிதானத்தில் மனிதனை எந்நிலையில் கொண்டு வரப்படுமென்றால், (பலஹீனம், அவமானம் காரணமாக) அவன். ஓர் ஆட்டுக் குட்டியைப் போன்ற நிலையில் இருப்பான்.

பிறகு, இறைவன் புறத்திலிருந்து, 'நான், உனக்குச் செல்வத்தை அளித்து, உனக்குப் பல பேருதவிகள் புரிந்தேனே, அவற்றில் நீ எவ்வாறு செயல்பட்டாய்?' என்று வினவப்படும்.

அதற்கு அவன், 'இறைவா! நான், செல்வத்தை அதிகமாகத் திரட்டி, அதில் உழைத்துப் பன்மடங்காகப் பெருக்கி, அதை உலகிலேயே விட்டு வந்து விட்டேன். என்னை மீண்டும் உலகிற்கு அனுப்பிவிட்டால், அவை அனைத்தையும் என்னுடன் எடுத்துக் கொண்டு வந்து விடுவேன்' என்பதாகக் கூறுவான்.

பின்னர் அவனிடம், 'நீ.மறுமைக்காக என்னை அனுப்பி வைத்தாய்? அதைக் காட்டு!' என்று வினவ, முன் கூறியபடியே, 'நான், உழைத்துச் சேர்த்த அனைத்தையும் விட்டு வந்து விட்டேன். என்னை மீண்டும் உலகிற்கு அனுப்புவாயாக! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுச்சேலை பளபளக்க, கோயிலுக்குப் போய்விட்டு வருகிறாள் வசந்தி.

வசந்தியின் பெற்றோர், கணவன், அவளுடைய பிள்ளைகள் இளங்கோ, ஜனகன், யசோ, எல்லோரும் புத்தாடையில் ஜொலிக்கின்றனர். சுவாமி அறையிலிருந்து வரும் ஊதுபத்தியின் நறுமணம் உள்ளத்தை நிறைக்கிறது.

சமையலறையில், வசந்தியின் தாய் ஏலம் கமகமக்கும் சர்க்கரைப் பொங்கலை அடுப்பிலிருந்து இறக்கி வைக்கிறாள்.

''எல்லோரும் சாப்பிட வாங்கோ'' தகப்பனிடமும், கணவனிடமும், பிள்ளைகளிடமும் சொல்லிவிட்டு எல்லோருக்கும் பரிமாற ஆயத்தமாகிறாள் வசந்தி.

வெளியே வாசலில் செருப்புச்சத்தமும் பேச்சுக் குரலும் கேட்கிறது.

வருவது யாராயிருக்கும் என்று அவள் ஊகிப்பதற்குள் இளங்கோவின் குரல் ஒலிக்கிறது.

''அம்மா! பெரியம்மாவும், அனுஅக்காவும், முரளியும் வருகினம்''.

நம்பமுடியாதவளாய் கையில் எடுத்த கரண்டியை வைக்கவும் தோன்றாமல் கரண்டியுடன் வாசலுக்கு விரைகிறாள் வசந்தி. அவளுடைய அக்கா விமலாவும் பிள்ளைகளும் எதிரே நிற்கின்றனர்.

''இவ்வளவு காலமாய் புதுவருஷம் பிறந்து ஒரு மாசமோ இரண்டு மாசமோ கழிச்சு சாவகாசமாய் எங்கள் வீட்டுக்கு விசிற் பண்ணுகிற அக்கா இம்முறை வருஷப்பிறப்பன்றைக்கே அதுவும் இந்தக் காலை நேரத்தில் வருகிறாவெண்டால் அதில் ஏதோ விஷயமிருக்கு''-

என்று மனதுக்குள் எண்ணியபடியே விமலாவையும், பிள்ளைகளையும் வரவேற்று உபசரிக்கிறாள். வசந்திக்கு மட்டுமல்ல அவளது பெற்றோருக்கும் தம் மூத்தமகள் விமலாவின் வருகை விசித்திரமாகத்தான் இருக்கிறது.

''இந்தமுறை வருஷப்பிறப்புக்கு தாய் தகப்பனிட்டை ஆசிபெற வந்திட்டாள் பிள்ளை...ம்... என்ன விசயம்'' என்று அவர்களும் ஆச்சரியத்தோடு நினைக்கின்றனர்.

விமலாவின் முகபாவத்திலிருந்தோ, பேச்சிலிருந்தோ எதையுமே கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது.

''அக்கா சாப்பிட வா''

சிறிது தயக்கத்தோடுதான் கேட்கிறாள் வசந்தி. கேட்டவுடன் சம்மதித்து எழுந்து நிற்கிற விமலாவைப் பார்க்க தங்கைக்கு வியப்பாயிருக்கிறது.

'முந்தி எப்போதாவது அதிபூத்த மாதிரி அக்கா எங்கடை வீட்டுக்கு வரும் போது சாப்பிடச் சொன்னால் பெரிய பிகு பண்ணிக் கொள்வாள். இண்டைக்கு கேட்கமுன்னம் சாப்பிடச் சம்மதிச்சிட்டா' என்று அதிசயிக்கிறாள்.

எல்லாரும் சாப்பிட்டபின் வசந்தி விமலாவின் மகள் அனுவை அழைத்து இரகசியமாகக் கேட்கிறாள்.

அனு! உங்கடை அப்பா உங்களோடை ஏன் வரேலை'

'சித்தி......அவர்......' பதில் சொல்லத் தயங்குகிறாள் அனு. 'சொல்லம்மா அனு அப்பா இப்ப எங்கை'.

'அப்பா வாடகைக்கு வீடு ஒண்டு இருக்குதெண்டு நாங்கள் இருக்கிறத்துக்கு அதை அரேஞ்பண்ணியிட்டு வரப் போயிருக்கிறார். அவர் வந்தவுடன் நாங்கள் அந்த வீட்டுக்குப் போயிடுவம் சித்தி. இதையெல்லாம் உங்களிட்டைச் சொல்லவேண்டாமெண்டு அம்மா சொன்னவ'

தகப்பன் வாடகைவீடு ஒழுங்குசெய்யப் போயிருப்பதாக அனு சொன்ன பதில் வசந்திக்கு நடந்த விஷயத்தை ஓரளவு புரியவைக்கிறது. அவளது உள்ளம் உணர்ச்சிமயமாகி படபடக்கிறது.

'ம்...அன்றைக்கு எங்களுக்கு ஏற்பட்ட அதேகதி இன்று அக்காவுக்கும், இந்தப் பிள்ளைகளுக்கும் ஏற்பட்டிருக்கு' என்று எண்ணிப் பொருமுகிறாள். பதினைந்து வருடங்களுக்கு முன்னால்.........

★ ★ ★

'ஏய் விமலா! இன்னும் இரண்டு நாளிலை உன்ரை அப்பாவும் அம்மாவும் பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு எங்கையாவது போயிட வேணும். இல்லையெண்டால் நான போய்த் துலையிறன்'.

மாமன் மாமியின் காதில் விழும்படியாக தன் மனைவி விமலாவுக்குக் கூறினான் பவானந்தம்.

'சீதனம் எண்டு இந்த வீட்டைத் தந்து நாலைஞ்சு வருஷங்களாச்சு. எனக்கும் இரண்டு பிள்ளையள் பிறந்

- எர். இந்திராணி -

திட்டுது. இன்னும் இங்கையே ஒட்டிக்கொண்டிருக்கினம். ஒரு வீட்டுக்கை எல்லாரும் இருந்துகொண்டு சீ... என்ன வாழ்க்கை' தன் பக்கத்துக்கு நியாயம் தேடிக்கொண்டான் பவானந்தம்.

விமலாவின் நிலை தர்ம சங்கடமாயிருந்தது. நினைத்தவுடன் தன் பெற்றோர் எங்கே போகப் போகிறார்கள் என்று கவலைப்பட அவளால் முடியவில்லை. அவர்கள் போகாவிட்டால் தன் கணவன் போயிடுவாரே என்றுதான் கலங்குகிறாள்.

கவலையோடு தாயின் முன்போய் நின்றாள் விமலா.

'நினைச்ச உடனை எங்கை போறது பிள்ளை. கொஞ்ச நாள் பொறுக்கச் சொல்லு'- தாய் கெஞ்சினாள்.

'இல்லையம்மா. நீங்கள் போகாட்டில் அவர் பேயிடுவார்'

'பயப்பிடாதை பிள்ளை. நாங்கள் எப்பிடியும் ரண்டு நாளிலை போயிடுறம்'- வாக்களித்தார் தந்தை.

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சிரமப்பட்டுக் கட்டிக் கொடுத்த வீட்டை விட்டுப் போகும்படி பெற்ற மகளும், மருமகனும் சொன்ன பிறகு வேறு உறவினர்கள் வீடுகளில் போய் ஒண்டிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

இளைய மகள் வசந்தியின் சங்கிலியை விற்றதோடு கடனும் கொஞ்சம் வாங்கி,

# ஓர் இனிய சங்கற்பம்



இருந்த காணித்துண்டில் இருப்பிடம் ஒன்று அமைத்துக் கொண்டார். கீழே சாணியால் மெழுகிய தரை, நாலுபக்கமும மறைப்பிற்குக் கிடுகுப் படலைகள், மேலே ஓலைக் கூரை. இரண்டு நாளில் வீடு தயாராகி விட்டது.

பவானந்தம் சொன்ன இரண்டு நாள் தவணையில் அந்தப் பெரிய கல் வீட்டை விட்டு வெளியேறினர். போகும் போது தங்களது உடைமைகள் என்றிருந்த சில பொருள்களை எடுத்துக் கொண்டபோது பவானந்தம் முணுமுணுத்தான் 'சட்டப்படி வீட்டிலிருக்கிற பொருள்களெல்லாம் தனக்குத்தான் சொந்தமாம்'

'உண்மைதான், ஆனால் கலியாணப்பதிவென்று இந்த வீட்டை எழுதித் தந்தபின், எங்கடை பணத்தில் நாங்கள் வாங்கிய பொருள்கள் உங்களுக்குச் சொந்தமல்ல' என்ற சட்டத்தை எடுத்துக் காட்டி அவனை மடக்கி விட்டுச் சென்றனர்.

வசந்திக்கு, பெற்றோர்க்கு, அவளது இரு தம்பிமாருக்கு சமையல், சாப்பாடு உறக்கம், ஓய்வு எல்லாம் அந்தக் கொட்டில் வீட்டில் தான் அந்தக் குடிலையில் தாங்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை நினைக்கும் போது வசந்திக்கு ஆத்திரம் வரும்.

'எவ்வளவு கஸ்ரப்பட்டு, ஓவர் ரைம் செய்து ஓய்வில்லாமல் உழைச்சு அந்த வீட்டைக் கட்டினவர் அப்பா. அக்காவும், அத்தானும் இப்பிடித் தயவு தாட்சணியமில்லாமல் எங்களைத் துரத்தி விட்டிருக்கினம்' என்று கொதிப்பாள்.

'அவர்களைக் குறை சொல்லாதை பிள்ளை. இந்தச் சமுதாயத்திலை வேரோடிப் போயிருக்கிற சில கொள்கைகள் அவர்களை அப்படி நடக்கச் சாதகமாகித் தூண்டுது. அதை நாங்கள் மாத்த முடியாது. உது ஒரு தொடர் கதையாய்ப் போய்க்கொண்டிருக்குது. இப்பிடி ஒரு பிரச்சினை வரக்கூடுமெண்டு பயந்துதான் அந்த நேரம் மூத்தவளுக்கு வீடு கொடுக்கிறதில்லை என்று சொன்னன். வீடு தந்தால் தான் கலியாணம் செய்யிறதெண்டு பிடிவாதமாய் நிண்டினம். ஏதோ மூத்தபிள்ளை வாழட்டுமெண்டு வீட்டை எழுதிக் குடுத்தன். இப்பிடி எங்களை வெளியேற்றுவினம் என்று நினைக்கேலை. போனது போகட்டும் இனி நீங்கள் உழைச்சு வீட்டைக் கட்டி வாழுற வழியைப் பாருங்கோ' வசந்தியை அமைதிப்படுத்தினார் தந்தை.

★ ★ ★

தங்கள் சிறிய கொட்டில் வீட்டின் வாசலில் வசந்தி நாட்டியிருந்த ரோஜாச்செடி துளிர்த்து வளர்ந்து அரும்பாகி மொட்டாகி பூக்கத் தொடங்கியது.

தட்டச்சு பயின்று முடித்து வேலைபார்க்கத் தொடங்கினாள் வசந்தி. அவளது தம்பிமார் வெளிநாட்டிற்குப் போய் உழைத்தனர். அவர்களது கொட்டில் வீடு மாளிகையானது. நகையும், பணமும் சேர்ந்தது. வசந்திக்கு நல்ல இல்வாழ்க்கை அமைந்தது. தம்பிமார் இருவரும் மணம் செய்து வெவ்வேறிடங்களில் வாழ்கின்றனர். தன் பெற்றோரைத் தன்னுடனே வைத்துப் பாதுகாப்பதென்று ஆரம்பத்திலேயே கணவனிடம் சொல்லிவிட்டாள் வசந்தி.

பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த அச்சம்பவத்தின் காரணமாய் வசந்திக்கும், விமலாவின் குடும்பத்திற்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டபோதும், காலப்போக்கில் அக்கசப்பு மாறிவிட்டது.

நாலைந்து மாதங்களுக்கு முன், விமலாவின் மூத்தமகள் தர்சினிக்குத் திருமணம் நடந்தபோது வசந்தியும், பெற்றோரும் போய் நடத்தி வைத்தனர். தர்சினிக்குப் பத்தொன்பது வயது தான் ஆகிறது. வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு வந்த உறவுக்காரப் பையன் ஒருவன், தான் தர்சினியைக் கல்யாணம் செய்யவிரும்புவதாகவும், வீடுமட்டும் சீதனமாய்த் தந்தால் போதுமென்றும் கேட்க,

வீட்டோடு லட்சங்கள் கேட்கிற இந்நாளில் வெறும் வீடு மட்டும் கேட்கிறானே என்று மகிழ்ந்து சம்மதித்தார் பவானந்தம்.

தர்சினியின் அழகுக்காகவே பணமாக வாங்கப்படும் லட்சங்கள் தள்ளுபடியாகின. பவானந்தம், தான் சீதனமாய் வாங்கி உரிமையாக்கி, மாமன், மாமியை, மைத்துனரை வெளியேற்றியபின், நிறையப் பணம் செலவழித்து நவீனமுறையில் அழகுபடுத்திய அவ்வீட்டை மகள் தர்சினியோடு சேர்த்துத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார்.

மிக விரைவிலேயே அவர்களுக்குள் பிரச்சினை ஒன்று உருவாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பவானந்தம், அந்த வீடு வளவை மருமகனுக்கு எழுதிக் கொடுத்ததை மறந்தவர்போல, அவ்வளவுக்குள் கிடைக்கும் தேங்காய், மாங்காய், பலாக்காய் முதலான வருமானங்களைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ள, மருமகனோ இனி அதெல்லாம் தன் உரிமை என்று சுட்டிக் காட்டினான்.

இதனால் அவர்களுக்குள் பெரிய வாக்குவாதம் ஏற்பட்டு சண்டையில் முடிந்தது. முன்கோபக்காரரான பவானந்தம் விடிந்தால் விஷேசமான நாள் என்பதையும் மறந்து இரவோடிரவாக விமலாவையும், மற்றப்பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பக்கத்து வீட்டில் தஞ்சம் புகுந்தார். விடிந்ததும் வருடப்பிறப்பும் அதுவுமாய் பவானந்தம் வாடகை வீடு தேடிப்போக, விமலாவும், அனுவும் வசந்தி வீட்டுக்கு வந்திருக்கின்றனர்.

இவ்விபரங்களை வசந்தி அனுவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறாள். 'முற்பகல் செய்யின் பிற்பகல்

சஞ்சீவி சிறுகதை

விளையும் என்றது போல அன்றைக்கு அத்தான் எங்களுக்குச் செய்தது இப்ப அவருக்கே திரும்ப வந்திட்டுது' என்று யதார்த்தமாய் ஒரு கணம் எண்ணினாள் வசந்தி. ஆனால் மறுகணமே விமலாவை நினைக்க அவளுக்கு பரிதாபமாய் இருந்தது.

'இதென்ன கொடுமை! அன்றைக்கு அம்மாவும் அப்பாவும் கட்டின வீட்டைச் சீதனமாய்க் குடுத்திட்டு நடுத் தெருவில் நிண்டினம். இண்டைக்கு அக்காவுக்கு அந்த நிலை வந்திட்டுது. இச்சமுதாயத்திலை இது ஒரு தொடர்கதையாய் முற்றுப் பெறாமல் தொடர்ந்து கொண்டிருக்கப்போகுதா!

இதுக்கொரு முற்றுப்புள்ளி வைக்க யாராவது ஒருவர் முன்வரமாட்டாரா! சீ... இதென்ன நான் மற்றவர்கள் மேல் பழிபோட்டுக்கொண்டு இச்சமுதாயத்தில் நானும் ஓர் அங்கத்தவள்தானே, என் பங்குக்கு நான் ஏதாவது செய்ய முடியாதா!' சிந்தித்துப் பார்க்கிறாள் வசந்தி.

'உனக்கென்ன வசந்தி மூத்தது ரண்டும் பெடியன்கள், அவர்களுக்கு நல்ல சீதனம் வாங்கி அதிலை மகள் யசோவின்ரை கலியாணத்தை முடிச்சிடலாம்' —என்று தன் பெற்றோர் சொல்லும் போதெல்லாம் மகிழ்ந்திருக்கிறாள் வசந்தி. ஆனால் இப்போது அதை நினைத்துப் பார்க்க வெட்கமாய் - அருவருப்பாய் இருக்கிறது. ஆரோ ஒருத்தன் வியர்வை சிந்தி உழைக்ச பணத்தைச் சீதனமெண்டு வாங்கி நாங்கள் அனுபவிக்கிறதா, ஒருத்தன் கஷ்ரப்பட்டுக் கட்டின வீட்டைச் சீதனம் என்ற பெயரில் உரிமையாக்கி, நாலு நாளில் அவனை விரட்டி நடுத்தெருவில் விட்டு...... இதென்ன அநியாயம் என் பிள்ளைகள் இப்படி ஒரு தவறைச் செய்யச் சந்தர்ப்பம் அளிக்கமாட்டன். என்னுடைய இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும், ஒரேமகள் யசோவுக்கும் கலியாணப் பேச்சென்று வரும்போது 'வரதட்சனை' என்ற வார்த்தைக்கே இடமிருக்காது, இனி என் குடும்பத்தில் சீதனம வாங்குவதும், கொடுப்பதும் நடக்காத காரியங்கள். இது சத்தியம்'.

'வசந்தி! வந்த விருந்தாளிகளை வெளியிலை விட்டிட்டு அறைக்குள்ளை இருந்து என்ன யோசிக்கிறீர்'— கேட்டபடி வருகிறான் வசந்தியின் கணவன்.

தன் குடும்பத்தில் அன்றும், இன்றும் நடந்த விஷயங்களையும், தன் மனப்போராட்டத்தையும் தான் செய்திருக்கிற சங்கற்பத்தையும் கணவனிடம் கூறுகிறாள் வசந்தி.

'உம்முடைய உயர்ந்த விருப்பங்களுக்கு நான் எப்பவும் ஆதரவு கொடுப்பவன் வசந்தி. இந்த நல்ல நாளில் நீர் செய்திருக்கிற இச்சங்கற்பம் இந்தச் சமுதாயத்தின் விடியலுக்கு ஒரு சிறிய ஒளிக்கீற்றாகவாவது அமையப் போவது நிச்சயம்'

கணவனுடைய பதிலில் மனம் மகிழ்ந்து ஓர் இலட்சியப் பெண்ணாய் வெளியில் வருகிறாள் வசந்தி.

(யாவும் கற்பனை)

எமது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இதயம் கனிந்த

★ புத்தாண்டு வாழ்த்துக்கள்! ★

"சுந்தர்ஸன்"

★ இறக்குமதி செய்யப்பட்ட நவீன மின்சார உபகரணங்கள், ★ நவீன அலங்கார தூக்குலாம்புகள்,
★ சுவர் லாம்புகள், ★ சுவர் கடிகாரங்கள், ★ மின்சார விசிறிகள் ★ மேசை விசிறிகள்
மற்றும்
மகாராஜாவின் எஸ் - லோன் பைப்புகள், உபகரணங்கள், 'சொலிட்', டயான், சிக்மா, NEI நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
CBE பல்புகள் ஆகியவற்றை மிகவும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்மால் தயாரிக்கப்படும் 4 அடி, 2 அடி ரியூப் லைற் செற்றுகள், வட்ட ரியூப் லைற் செற்றுகள்:-
TENBY: சுவிச், பிளக் ஆகியவற்றிற்கு வடமாகாண
ஏக விநியோகஸ்தர்களில் ஒருவராக விளங்குபவர்கள்:-

முக்கிய குறிப்பு:-
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

மத்திய சந்தை, சுந்தர்ஸன் மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாடுகளுக்கிடையே எலக்ரோனிக் யுத்தம்!



□ கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எலக்ரோனிக் யுத்தம் ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

ஏன்? எப்படி? என்று அறிய விரும்புகிறீர்களா?

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக கம்யூனிஸ்ட் அரசுகளைத் தூக்கி எறிந்து விட்டன.

அங்கு ஜனநாயக அலை வீசத் தொடங்கி விட்டது.

மத்திய அமெரிக்காவில் பனாமாவில் அமெரிக்க ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியாக இருந்த நொறியேகா இப்போது அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

போதாக் குறைக்கு நிக்கரகுவாவிலும் அமெரிக்க ஆதரவு பெண் ஜனாதிபதி பதவி ஏற்கவிருக்கிறார்.

அமெரிக்காவின் 'பரமசத்துரு' வான ஒற்றேகா தோற்றுப் போனார்.

இந்த நிலையில்—

கியூபா தான் கம்யூனிஸ்ட் நாடாக உள்ளது.

அங்கு 'ஜனநாயகக் கிளர்ச்சி'யை ஏற்படுத்த அமெரிக்கா எலக்ரோனிக் யுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

விசேட ட.வி ஒளிபரப்பு, ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கியூபாவிற்கு என்று அமெரிக்கா நடத்துகிறது.

இவற்றைக் கியூபா குழப்பியடிக்கிறது.

ஆனால் கியூபா தலைவர் காஸ்ரோ கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

எலக்ரோனிக்யுத்தம் ஆயுத யுத்தமாக மாறும் என்பதே அந்த எச்சரிக்கையாகும்.

டேவிட்டுடன் மோதிய கோலியாத் ஆகக் காஸ்ரோ தன்னை வர்ணித்திருக்கிறார். ★

# மனச்சாட்சிக்குப் பயந்து 'ஒருநாள்' பொதுமகனாக வாழ்ந்த மன்னர்

● மனச்சாட்சிக்கு பயந்த மன்னர் ஒருவர் பற்றிய சுவையான நிகழ்ச்சி ஒன்று பெல்ஜியத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது.

பெல்ஜியத்தில் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக கருச்சிதைவு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டுவந்தது.

இத்தடையை ரத்துச்செய்யும் சட்டம் ஒன்றை பெல்ஜியம் கடந்தமாதம் 29 ஆம் திகதி நிறைவேற்றியது.

இது சட்டமாவதற்கு பெல்ஜியம் மன்னர் பௌடின் கைச்சாத்திடவேண்டும்.

ஆனால் அவர் அதில் கைச்சாத்திட மறுத்துவிட்டார்.

'கருச்சிதைவுக்குச் சட்டபூர்வமாக அனுமதி வழங்க எனது மனசாட்சி இடம்தரவில்லை' —இதுவே மன்னர் கூறிய காரணம்.

இதனால் பெல்ஜியம் அரசியல் யாப்பு பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கவேண்டியதாயிற்று.

அமைச்சர்கள் அவசரமாக கூடி ஆராய்ந்தனர். பின்னர் மன்னருடன் பேசி ஒரு முடிவுக்குவந்தனர்.

மன்னர் தற்காலிகமாக முடிதுறப்பது; சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் மீண்டும் அரசாள்வது —இதுவே அந்த மாற்றுவழியாகும்.

இதனைத்தொடர்ந்து மன்னர் தற்காலிகமாக பதவி விலகினார்.

அமைச்சரவை அரசரின் அதிகாரத்தைப் பொறுப்பேற்று சட்டத்தை நிறைவேற்றியது.

அரசர் ஒருவர் கடமையைச் செய்யமுடியாத சூழ்நிலையில் பதவிவிலகலாம் என்ற ஒரு விதி அரசியல் யாப்பில் உள்ளது. அதனைப் பயன்படுத்தியே மன்னர் பதவி விலகி மந்திரிகளுக்கு வழிவிட்டார்!

ஆனால் அந்த விதியை மனச்சாட்சிக்குபயந்துபாவித்தமன்னர்என்ற பெருமை பௌடினுக்குக் கிடைத்துள்ளது. ★

# அரசரைத் தலைகுனிய வைத்த கலைஞரின் சாமர்த்தியம்!

● இரண்டாம் சார்ள்ஸ் மன்னர் தன்னை ஒரு பெரிய கவிஞனாக மனதுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்.

எனவே அவர் எது எதையோ எழுதி வைத்துக்கொண்டு, தனது சபையினரிடம் 'இதோ இந்த அற்புதமான கவிதைகளைப் பாருங்கள் என்று கூறுவர்.

மன்னருக்கு உட்பட்ட சபைதானே அது!

எனவே அங்கிருப்போர் அவற்றை வாங்கிப் பார்த்துவிட்டு, ஆஹா, ஒஹோ எனப்புகழ்வார்கள்.

இந்தநிலையில் ஒரு சமயம் உண்மையான மகாகவி ஒருவர் மன்னர் அவைக்குச் சென்றிருந்தார்.

அவரிடம் தனது புலமையைக் காட்டவிரும்பிய மன்னர், தம் கவிதை ஒன்றை எடுத்துக்கொடுத்து, 'நான் எழுதிய இக்கவிதையைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கூறுங்கள்' என்றார்.

கவிஞரும் அக்கவிதையைப் படித்துப்பார்த்தார். அபத்தக் களஞ்சியமாக இருந்தது அது.

ஆனாலும் அதனை மன்னர் முன் நேருக்கு நேர் எப்படிச் சொல்வது?

அப்படிச் சொல்வது நாகரீகமாகாதே!

அதே சமயம் பொய்மையில் மடங்கிக் கிடக்கும் மன்னரை புகழுரையால் நாம் ஏமாற்றக்கூடாது' —இப்படி கவிஞர் எண்ணினார்.

கவிஞர் மன்னரைப்பார்த்து நயம்பட—

'மன்னா! தங்கள் ஆற்றலுக்குத் தாங்கள் எதை விரும்பினாலும் சிறப்பாகச் செய்துவிடுவீர்கள் என்பதற்கு இக்கவிதையே சான்று.

'அபத்தமாக ஒரு கவிதை எழுத விரும்பியிருக்கிறீர்கள். அப்படியே எழுதி சாதனை படைத்துவிட்டீர்களே! ஆஹா உங்கள் திறமைதான் என்னே!'

கவிஞர் இப்படிக்கூறியதன் உட்பொருளைப் புரிந்துகொண்டமன்னர் அவையில் தலை கவிழ்ந்தார். ★

# உலகில் இயந்திர மனிதனின் செல்வாக்கு அதிகரிக்கிறது!

□ 'ரோபோ' (இயந்திர) மனிதனுக்கு உலகில் கிராக்கி அதிகரித்து வருகிறது.

இரண்டாயிரம் ஆவது ஆண்டில் இது மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துவிடும் என்று ஜப்பான் 'ரோபோ' தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் வேலை செய்வதற்கான மனிதசக்தி தட்டுப்பாடு காரணமாகவே இயந்திர மனிதனை பலர் விரும்புகின்றனர்.

தொழிற்சாலைகளுக்கான இயந்திரமனிதர்களை கார் உற்பத்தியாளர்கள் மற்றும் எலக்ரோனிக் உற்பத்தியாளர்கள் பெருமளவில் வாங்குகிறார்கள்.

தொழிற்சாலைகளுக்கான இயந்திரமனிதர்கள் ஜப்பானில் மட்டும் 1989 ஆம் ஆண்டில் மட்டும் 9 ஆயிரம் கோடி ரூபாவுக்கு உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த ஆண்டில் இந்த உற்பத்தி 10 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★

# துப்பறிய உதவும் பூச்சிகள்!

● தடய அறிவியல் (Forensic Science) என்றதுறை தற்காலத்தில் பெரிதும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

ஒரு குற்றம் நடந்துவிட்டது என்பது தெரியவந்தவுடன் பொலீஸார், குற்றம் நடைபெற்ற நேரத்தைக் கண்டுபிடிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

கொலை எத்தனை மணிக்கு நடந்தது என்பது தெரிந்துவிட்டால் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் எளிதாகிவிடுகின்றன.

ஆகவே, துப்பறிபவர்கள் கொலைநடந்த நேரத்தைக் கண்டுபிடிப்பதையே பெருத்த முன்னேற்றமாகக் கருதுகின்றனர்.

அண்மைக் காலங்களில் தடய அறிவியலில் பூச்சியியல் தத்துவங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கொலை நிகழ்ந்த இடத்தில் காணப்படும் பூச்சிகளில் இருந்து கொலை நிகழ்ந்த நேரத்தைக் கண்டுபிடிக்கமுடியும்.

கொலை செய்த இடத்தில் இருந்து பிணம் வேறு இடங்களில் கொண்டுபோய்ப் போடப்பட்டிருந்தாலும், உடலிலுள்ள பூச்சிகளை ஆராய்வதன்மூலம் கொலை நிகழ்ந்த நேரத்தைக் கண்டுபிடித்துவிடலாம்.

# அமெரிக்காவில் நடைபெறும் தவளை குதிக்கும் போட்டி

● அமெரிக்காவில் தவளைகள் குதிக்கும் போட்டி ஒன்று அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.

ஆண்டுதோறும் தவளைகள் குதிக்கும் போட்டியை அமெரிக்கர்கள் நடத்தி வருவது தெரிந்ததே.

இம்முறை போட்டியில் ஆபிரிக்க நாட்டுத் தவளைகளையும் கலந்து கொள்ள போட்டிக்கமிட்டி அனுமதி வழங்கியுள்ளது.

ஆபிரிக்கத் தவளைகள் அமெரிக்கத் தவளைகளைவிட உருவத்தில் மிகவும் பெரியது.

அத்துடன் ஆபிரிக்கத் தவளைகள் 40 அடி நீளம் குதிக்கக்கூடிய திறன்கொண்டவை.

இது அமெரிக்கத் தவளைகளைக் கொண்டுவருபவர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது. ★

# புண்ணியத்தில் பங்கு பெறுபவர் யார்?

● மனைவிசெய்யும் புண்ணியத்தில் கணவனுக்குப் பங்கு கிடையாது.

கணவன் செய்யும் புண்ணிதத்தில் மனைவிக்குப்பங்கு உண்டு.

மனைவி செய்யும் பாவத்தில் கணவனுக்குப் பங்கு உண்டு.

கணவன் செய்யும் பாவத்தில் மனைவிக்குப் பங்கு கிடையாது.

—வாரியாரின் 'வாழும் வழி' என்ற நூலிருந்து.

# பலவர்ணக்கல்

● பலவர்ணங்கள் கொண்ட பண்டைக் கால கல் ஒன்று சீனாவின் வடகிழக்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

260 தொன் எடையுள்ள இந்தக்கல் 5 மீற்றர் உயரமும் 7 மீற்றர் அகலமும் 6 மீற்றர் கனமும் கொண்டது.

இதுதான் உலகிலேயே மிகப்பெரிய பலவண்ணக் கல் என்று கூறப்படுகிறது.

இதில் நடுப்பகுதி பச்சை நிறமாகவும் ஒரு பகுதி சிவப்பு நிறமாகவும் இன்னொரு பகுதி நீலம், மஞ்சள் நிறமாகவும் காணப்படுகிறது.

இந்தக்கல் எப்போது, எப்படி கண்டுபிடிக்கப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை. ★

# வைக்கோலில் இருந்து மதுபானம்

● வைக்கோலில் இருந்து மதுபானம் தயாரிக்கும் புதிய தொழில்நுட்பம் ஒன்றை இந்திய கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இதனால் வைக்கோலுக்கு பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஆமாம். மாடுகள் தங்கள் இரையான வைக்கோலுக்கு இனி என்ன செய்யப்போகிறது? ★

# முகச் சுருக்கம் ஏற்படக் காரணம்

● முகத்தசைகளுக்கு இடையே உள்ள கொழுப்புச் சத்து கரையும்போதும் குறையும் போதும் முகத்தில் சுருக்கம் விழுகிறது.

மூப்படையும்போது முகத்தில் மட்டும் என்றில்லாமல் உடலெங்கிலும் இச்சுருக்கங்கள் தோன்றலாம். ★

# விண்வெளி செல்லும் மனித மண்டை ஓடு

● மனித மண்டை ஓடு ஒன்று, செயற்கைக்கோள் மூலமாக வானவெளிக்கு சமீபத்தில் கொண்டு செல்லப்பட்டது.

வானவெளி செல்லும் வீரர்களின் தலையை எந்த அளவுக்கு கதிர்வீச்சு தாக்குகிறது என்பதை அறியவே இந்த நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது. ★

# பூனைகள் பற்றி...



□ நாய்களிலும் பார்க்கப் பூனைகள்தான் நீண்டகாலம் வாழக்கூடியவை.

நன்றாகப் பராமரிக்கப்பட்டால் ஆண்பூனை 13 முதல் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும். பெண் பூனைகள் 15 – 17 ஆண்டுகள் உயிர் வாழும்.

லண்டனில் திருமதி ரி. ஹொல்வே. வளர்த்து வந்த பூனைகளில் ஒன்று 28. 11. 1939இல் 36 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியது. அடுத்த நாள் அது இறந்துவிட்டது.

திருமதி ஜோர் மூர் வளர்த்து வந்த 'மா' என்றொரு பூனை 5. 11. 1957 இல் தனது 34 ஆவது வயதில் மரணமடைந்தது.

கடைசியாக நீண்டகாலம் உயிர் வாழ்ந்ததாகக் கருதப்பட்ட 'கிற்றி' என்ற பூனை கடந்த ஆண்டு ஜூன் மாதம் 32 ஆவது வயதில் மரணமடைந்தது. ★

# பிரார்த்தனை!

● கறுப்புச் சந்தைக்காரன் செய்யும் பிரார்த்தனை, பிரார்த்தனை ஆகாது.

அது அவன் செய்யும் பாவங்களுக்கான தண்டனையில் இருந்து தப்பிக்கத்தேடும் குறுக்குவழியாகும்.

சிரத்தை இருக்கும் அளவுக்குத்தான் ஒருவன் செய்யும் பிரார்த்தனைக்குப் பயன் உண்டு.

பிரார்த்தனை பண்ணிவிட்டு மீண்டும் மீண்டும் தவறு இழைப்பவன் பக்திமான் ஆகமாட்டான்.

—சுவாமி சிவானந்த சரஸ்வதி.

# நீண்டகால ஜனாதிபதி

□ உலகில் மிக நீண்டகாலம் ஒரு நாட்டின் அதிபராக இருக்கும் பெருமையை திரு. கிம்–இல்–சுங் பெறுகிறார்.

15–4–1912 இல் இவர் பிறந்தார்.

கொரியா இரண்டு நாடுகளாக 1948 இல் பிரிந்தது.

தொடர்ந்து 25–8–1948 இல் திரு. கிம்–இல்–சுங் வடகொரியாவின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

அன்றில் இருந்து இன்று வரை அவர் தொடர்ந்து ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

பிரிந்து சென்ற கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் மீண்டும் ஒன்றாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதுபோல பிரிந்துள்ள தென்கொரியாவும் வடகொரியாவும் மீண்டும் ஒன்றாகும் சாத்தியம் இதுவரை தெரியவில்லை. ★

# யார் ஆத்திகன்?

● தானாகவே பிறந்து, தானாகவே உற்பத்தியானதெல்லாம் தானாகவே சாப்பிட்டு, தானாகவே மாண்டு போகிறவனுக்குப் பெயா நாத்திகன்.

அவன் பிணம் தானகவே மயானத்துக்குப் போகமுடியாததால், அப்போது மட்டும் அவன் ஆத்திகன்.

—'கண்ணதாசனின் செப்புமொழி'களிலிருந்து.

# மின்விசை மூலம் உடலுக்குள் மருந்து!

□ மின்விசையைப் பயன்படுத்தி நோயாளியின் உடலுக்குள் மருந்தைச் செலுத்தும் முறை ஒன்றை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

மருந்துப்பொருள் அடங்கிய சிறிய 'பட்டை' (Patch)

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

ஒன்று நோயாளியின் உடலின் மீது வைக்கப்படுகின்றது. குறைந்த அழுத்தம் கொண்ட மின்சாரம் அதன் வழியாகச் செலுத்தப்படுகிறது.

இந்த மின் விசையானது அந்தப் பட்டையில் உள்ள மருந்துப்பொருளை உடலுக்குள் செலுத்திவிடுகிறது. சில நிமிஷங்களிலேயே இந்த மருந்துப்பொருள் இரத்தத்தில் கலந்து விடுகிறது.

உடலில் மருந்தைச் செலுத்துவதற்கு ஊசிகளையும் 'கதீற்றர்' (Catheter) எனப்படும் நுண்குழாய்களையும் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய அசௌகரியத்தைத் தவிர்க்க இந்தப் புதிய முறை பயனுள்ளதாக உள்ளது.

இந்தப் புதிய முறைக்கு 'அயன்ரொபொரெஸிஸ்' (Iontophoresis) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. யூடா மாநில பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதனை உருவாக்கியுள்ளனர். ★

# கலைஞரின் வாதம்!

● தமிழ்நாடு சட்டசபையின் கூட்டம் அண்மையில் நடந்தசமயம்...

ஒரு கட்டத்தில் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்கள் முதலமைச்சர் கருணாநிதி பேசிக்கொண்டிருக்கையில் குறுக்கிட்டு —'பிரிவினைச் சக்திகள் ஒழிக' என்று குரல் எழுப்பினர்.

அதற்குக் கலைஞர் புன்சிரிப்புடன் பதிலளிக்காமல் அமர்ந்துகொண்டார்.

பின்னர் கலைஞர் தனது பேச்சின் இன்னொரு கட்டத்தில்...

'பிரிவினைச் சக்திகள் ஒழிக என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் கோஷமிட்டனர். அதற்கு நான் கொண்ட பொருள் காங்கிரஸ் கட்சிக்குள் இருக்கிற பிரிவினை கோஷ்டி ஒழிய வேண்டும் —என்று அவர்கள் கோஷமிட்டதாக எடுத்துக் கொண்டேன்.'

—இப்படிக் கலைஞர் பதிலளித்தார். ★

# ஊனமுற்றோருக்கு உதவும் 'பேசும் ரைப்ரைட்டர்'

□ பேசும் டைப்ரைட்டர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, மாசசூட்ஸ் மாநிலத்தில் நியூடன் நகரில்



இந்த பேசும் டைப்ரைட்டர் உள்ளது.

ஊனமடைந்தவர்களுக்கு இந்த புதிய டைப்ரைட்டர் மிகவும் உபயோகமானதாக இருக்கும்.

இதைப் பயன்படுத்துபவர்கள் எதை டைப் செய்ய வேண்டுமோ அதை வாயால் சொன்னால்போதும் டைப் செய்யவேண்டியதில்லை.

வாயால் சொன்னதும் அதில் உள்ள கொம்பியூட்டர்கள் மூலம் அது டைப் ஆகிவிடும்.

அச்சடிக்கப்பட்டதை டைப்ரைட்டருடன் இணைக்கப்பட்டிருக்கும் டெலிவிஷன் திரையில் பார்க்கலாம்.

நிமிடத்துக்கு 35 வார்த்தைகளே இது டைப் செய்யும்.

இந்த டைப்ரைட்டரின் விலை 2½ லட்சம் ரூபா ஆகும் என்று தெரிகிறது. ★

# மண்ணுக்குள் புதையுண்டுவரும் ஒரு நாட்டின் தலைநகரம்!

□ நாடு ஒன்றின் தலைநகர் மண்ணுக்குள் நாளுக்கு நாள் புதையுண்டு வருகிறது.

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்குக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 10 சென்ரி மீற்றருக்கு மேல் புதையுண்டு வருவதாகக் கணக்கிடப்பட்டு உள்ளது.

அதாவது 1960 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை 160 சென்ரி மீற்றர் அளவு புதைந்துவிட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் பாங்கொக் நகரில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டன. அவற்றில் இருந்து தினமும் 12 லட்சம் கன மீற்றர் வண்ணீர் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாங்கொக் நகர் புதையுண்டு வருவதற்கு இதுவே முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது.

நகரின் மக்கள் தொகை 3 மடங்காக (79 லட்சமாக) அதிகரித்து இருப்பதும் கட்டடங்கள் ஏராளமாகக் கட்டப்படுவதும் புதையுண்டு போவதற்கு இன்னும் ஒரு காரணம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். ★

# 'போரும் சமாதானமும்' உலகப் பொருட்காட்சி

□ அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாட்டு சபைக் கட்டடத்தில் போரும் சமாதானமும் என்ற தலைப்பிலான பொருட்காட்சியை ஆறு முக்கிய தலைவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

கடந்த 90 ஆண்டுகளில் பல போர்களினால் உலக நாடுகளுக்கு ஏற்பட்ட அழிவுகளும் இனி போர் ஏற்படாதவாறு இருக்க வேண்டிய வழிமுறைகளும் பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

அங்கு வந்திருந்த பல்வேறு நாட்டுச் சிறுவர்கள் தங்கள், தங்கள் தாய்மொழியிலேயே 'நமது பூமி நமக்குப் பெற்றோர்களால் தரப்பட்டதல்ல. அது வருங்கால சந்ததியினர் நமக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டு உள்ளது'—என்ற கென்ய நாட்டுப் பழமொழியைக் கூற பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

இப்பொருட்காட்சி அடுத்து ஜெனிவாவில் நடைபெறும்.

அதன் பிறகு வரும் பத்து ஆண்டுகளுக்கு உலகம் முழுவதும் உள்ள நாடுகளிலும் நடைபெறப்போகிறது. ★

# புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'விடியோ பாக்ஸ்' முறை

● பஸிமைல் (Fasimile) முறையில் தொலைபேசி கம்பி வழியே படங்களை அனுப்ப முடியும் என்பது ஏற்கனவே தெரிந்த விஷயம்.

ஆனால் இப்போது விடியோ, பாஸிமைல், கம்பியூட்டர் ஆகிய மூன்று தொழில் நுட்பங்களையும் ஒன்றாக இணைத்து விடியோ கமராவில் எடுக்கப்படுகிற படத்தைத் தொலைபேசி கம்பி மூலம் உலகின் எந்த ஓர் இடத்திலும் இருக்கிற பாக்ஸ் (Fax) கருவிக்கு அனுப்ப வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ஏற்பாடு விடியோ பாக்ஸ் (Videofax) என்று அழைக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று இதைச் சாதித்திருக்கிறது.

விடியோபாக்ஸ் வசதியைப் பல வகைகளிலும் பயன்படுத்த முடியும். ஓர் ஆஸ்பத்திரியில் இருந்து எக்ஸ்–ரே படங்களையும் ஏனைய ஸ்லைடுகளையும் தூர இடங்களில் உள்ள நிபுணர்களின் பார்வைக்கு அனுப்ப இந்த முறையைப்பயன்படுத்த முடியும். ★

# ஆசியாவின் உயரமான டெலிவிஷன் கோபுரம்

● சீனாவின் தலைநகர் பீகிங்கில் பதினோராவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 22 இல் ஆரம்பமாக உள்ளன.

இப்போட்டிகளில் ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் 39 நாடுகளில் 29 நாடுகள் பங்குபற்ற உள்ளன.

விளையாட்டுப்போட்டியை உலக நாடுகளுக்கு ஒளிபரப்ப சீனாவில் நிறுவப்பட்டுள்ள புதிய டெலிவிஷன் கோபுரம் 405 மீற்றர் உயரம் கொண்டது.

இதுவே ஆசியாவின் மிக உயரமான டெலிவிஷன் கோபுரம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படை ரீதியான பலவீனங்கள்

ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொருளாதாரத்தின் துறைகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்பவற்றினது சதவீதப் பங்குகள் எவ்வாறு உள்ளது என்பதே பொருளாதாரக் கட்டமைப்பாகும்.

சார்பு ரீதியில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்பன எவ்வாறு வளர்ச்சியுற்றுள்ளன என்பதை இது விளக்கும்.

இவ்வாறான துறைகளின் சதவீதப் பங்கு மாறுவது பொருளாதாரத்தின் தற்போதைய நிலையைக் காட்டுவதாகும். பொருளாதாரத்தில் ஒவ்வொரு துறைகளினதும் சதவீதப் பங்கு மாறுதல், தொழில் வாய்ப்பு பரம்பல் மாறுதல் என்பன கட்டமைப்பு மாற்றம் என வரையறுக்கப்படுகின்றன.

ஒரு நாடு குறைவிருத்தி நிலையில் இருந்து அபிவிருத்தி நிலைக்கு மாறும்போது நாட்டின் பொருளாதார அமைப்பின் தன்மையில் சாதகமான முறையிலமைந்த மாற்றம் நிகழ்வதைக் குறிக்கும்.

அதாவது மொத்த தேசிய உற்பத்தியிலும் தொழில் வாய்ப்பு பரம்பலிலும் விவசாயத்துறையினது பங்கு குறைவடைந்து கைத்தொழில் துறையினது பங்கு அதிகரிக்க வேண்டும் என்பதாகும்.

#### பொருளாதார நெருக்கடி

இன்றைய இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான பலவீனங்களே அடிப்படைக் காரணங்களாக விளங்கியுள்ளன. இவை ஆழமாக வேரூன்றிப் புரையோடிப் போய் இருக்கின்றன.

கடந்த பத்தாண்டு காலமாக எமது பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வந்த விதத்தையும் தனது பாதையைத் திருத்திக் கொள்ள நேர காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க வழியமைப்பையும் நோக்குமிடத்து இந்த நெருக்கடி தவிர்க்க முடியாத ஒன்றாகவே தென்படுகிறது.

கடந்த தசாப்தத்தில் விவசாயக் கைத்தொழில் சார்ந்த பண்ட உற்பத்தியை விட சேவைகள் உற்பத்தியே பொருளாதார வளர்ச்சியின் முக்கிய மூலமாக அமைந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (G. D. P) முழுமையான வளர்ச்சியில் 60 சதவீதத்திற்கு சேவைகள் துறையின் வளர்ச்சி பொறுப்பாக இருந்தது.

பொது வசதிகள், போக்குவரத்து, மொத்த சில்லறை வர்த்தகம், பொது நிர்வாகமும் பாதுகாப்பும் என்பவை தாராளமாக்கப்பட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட காலப்பகுதியில் மிக வேகமாக வளர்ச்சி பெற்ற துறைகளாக அமைந்தன.

#### உள்நாட்டு உற்பத்தி

இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்களிப்பை வழங்கிய நிலையில் தசாப்தம் முழுவதும் கைத்தொழிலின் பங்களிப்பு 14 - 15 சத வீதமாக அமைந்து வளர்ச்சி எதுவும் காணாது தேக்கமுற்றுக் காணப்பட்டது. ஒப்பிடக்கூடிய வளர்ச்சிக் கட்டத்தில் அமைந்துள்ளன. ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது இது முரண்பட்ட ஒரு நிலையாகவே காணப்படுகின்றது. அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்களிப்பைக் கைத்தொழிற்துறை வழங்கியிருந்தது.

தாராளக் கொள்கைகள் ஒரு தசாப்தத்துக்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள போதிலும் வளர்ச்சியையும், வலைவாய்ப்புக்களையும் உருவாக்கித் தருவதில் இலங்கையின் கைத்தொழில்கள் ஏமாற்றமளிக்கத்தக்க விதமான பங்கினையே ஆற்றி வந்துள்ளன.

ஆரம்பப் பொருட்களை (Pirimary goods) உற்பத்தி செய்வதும் வர்த்தகத்திற்கு சாதகமான பாரபட்சம் காட்டுவதுமான நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவிற்கு கைத்தொழில்மயப்பட்ட நிலைக்கு மாற முயல்வதில் இலங்கை தோல்வி கண்டுள்ளது.

பொருளாதார கட்டமைப்பை மாற்றியமைக்கத் தவறியமையால் தாக்குபிடிக்கக்கூடிய வளர்ச்சிப்படி முறைக்கும், தொழில்நிலை விரிவாக்கத்திற்கும் தேவையான உறுதியான அடித்தளம் ஒன்று உருவாகவில்லை.

#### கைத்தொழில் வளர்ச்சியின் இயல்பு

தயாரித்த ஆடைகள் என்ற பிரிவு மட்டுமே தாக்குபிடிக்கக்கூடிய கைத்தொழில் உற்பத்தி பிரிவாக அமைந்தது. ஆனால் இக் கைத்தொழில் சில குணாம்சங்களை உள்ளடக்கியதாகும்.

அவையாவன;-

(அ) இவற்றின் உள்நாட்டில் சேர்க்கப்படும் பெறுமதி சார்பளவில் மிகக்குறைவானதாகும். இவற்றின் ஏற்றுமதிப் பெறுமானத்தில் 30 சதவீதத்திற்கு சமமான தொகை மட்டுமே உள்நாட்டில் சேர்க்கப்படும் பெறுமதியாக அமைகின்றது. இவ்வகையில் இவை இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளில் அதிகளவுக்கு தங்கியுள்ளன.

(ஆ) பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுடன் இவை குறைவான இணைப்புக்களை மட்டுமே கொண்டவையாக உள்ளன. தயாரித்த ஆடைகள் கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்களை ஆக்கி வழங்கும் தகைமையை வளர்த்துக்கொள்ள உள்ளூர் ஆடைக் கைத்தொழில் தவறிவிட்டது.

(இ) மேலும் வளர்ச்சி பெற்ற நாடுகளால் விதிக்கப்படும் இறக்குமதி பங்கீடுகளால் தயாரித்த ஆடைக் கைத்தொழிலின் தொடர்ச்சியான வளர்ச்சியும் தடைப்படுத்தப்படுகின்றது.

கைத்தொழில்துறை வளர்ச்சிக்கு பொதுத்துறை தயாரிப்புக் கைத்தொழில்களின் ஏமாற்றமளிக்கும் செயற்பாடும் ஓர் முக்கிய காரணமாகும்.

எண்ணிக்கையில் நாற்பதாகவும் நாட்டின் தயாரிப்புக் கைத்தொழில் வெளியீட்டில் (Output) அரைவாசிக்கு மேற்பட்ட பங்கினை வகிப்பதாகவும் அமைந்துள்ள இத்துறை கடந்த தசாப்தத்தில் ஆண்டுக்கு ஒரு சதவீத வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்துள்ளது, வேலை வாய்ப்புக்களும் குறைந்த அளவிலேயே வளர்ச்சி கண்டுள்ளன.

தெளிவான கைத்தொழில் கொள்கைகளையும் உத்திகளையும் உருவாக்கிக் கொள்ள இலங்கை தவறிவிட்டது. பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட 10 ஆண்டுகளின் பின்னர் 1987லேயே கைத்தொழில் கொள்கை அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

ஆனால் இக்காலப் பகுதியில் அரசியல் ஸ்திரமின்மை (Political Stability) காரணமாக முதலீட்டுக்குரிய சூழ்நிலையில் மாற்றமேற்பட்டமையால் இது காலம் தாழ்த்திய ஒரு நடவடிக்கையாகவே அமைந்தது.

(மிகுதி அடுத்த வாரம்)

- வே. சண் பி. பி. ஏ (இலங்கை) -




பொருளியல் மாணவருக்கு ஏற்றது

# பெண்களுக்குத் தலைமைப் பதவி இளமையில் கிடைக்க வேண்டும்!

பெண், ஆணுக்குச் சமமானவள். ஆணுக்குரிய அத்தனை உரிமைகளும் பெண்ணுக்கும் உண்டு. அறிவு, ஆற்றல், ஆளுமைத் திறன் எல்லாம் அவளுக்கும் உண்டு. வீட்டுடன் மட்டுமல்ல; இந்த நாட்டைக் காக்கும் பணியிலும் அவளுக்குப் பாரிய பங்குண்டு.

பெண், பெண்ணாக மதிக்கப்பட்டு பூரண சுதந்திரத்துடன் செயற்பட அவள் முனையும்போதுதான் பெண் இனத்தின் விடுதலை பூரணத்துவமடையும்.

பெண்களுக்கு வயது சென்றுவிட்ட காலத்தில் தான் தலைமைப் பதவியைக் கொடுக்க இச்சமூகம் முன்வருகிறது. வயது சென்ற காலத்தில் தரப்படும் தலைமைப்பதவி பெண் இனத்துக்குத் தேவையில்லை.

ஓர் சிறுவனின் சொல்லுக்கு இருக்கும் தலைமைத்துவ மதிப்பு ஒரு குடும்பப் பெண்ணுக்குக் கிடைப்பதில்லை. இளமைக் காலத்திலேயே பெண்களும் தலைமைப் பதவியை ஏற்கும் நிலை ஏற்படவேண்டும்.

பெண் இனத்தின் விடுதலைக்கும் முன்னேற்றத்துக்கும் தடையாக விளங்குவன வறுமை கௌரவம், சுதந்திரம் ஆகிய மூன்றுமாகும்.

#### தென்கிழக்கு ஆசிய நாடுகள்

தென் கிழக்காசிய நாடுகளில் வறுமை சகஜமாக நிலவுகின்றது. வறுமையினால் பெரிதும் பாதிப்படைபவர்கள் பெண்களே. தமக்கில்லாவிடினும், கணவனுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் உணவைப் பகிர்ந்தளித்து விட்டுப் பட்டினியாய் இருப்பவர்கள் பெண்கள். இதனால் போதிய போஷாக்கின்மை அவர்களுக்கு ஏற்படுகிறது.

போஷாக்கின்மையால் அவர்களுக்கு கல்வி, அறிவு, புத்திக்கூர்மை ஆகியன ஏற்படவும் வழியில்லாமல் போகின்றது. இன்று அரசாங்கம் கூட ஜனசக்தி திட்டத்தை ஏற்படுத்தி வறுமையை ஒழிக்க முனைகின்றது. ஜனசக்தித் திட்டத்தில் பெண்கள் முக்கிய பங்கேற்று வறுமையை ஒழிக்க முயல வேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் அடுத்த விடயம் கௌரவமாகும்.

சமூகத்தில் பெண்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்படுவதில்லை. ஆண்கள் உழைத்துப் போடுபவர்கள்; பெண்கள் சமைத்துப் போடுபவர்கள் என்ற நிலையில் பெண்களுக்கான அந்தஸ்து குறைத்துக் கணிக்கப்படுகின்றது.

ஆண்களின் உழைப்பு இல்லாவிடின் குடும்பம் நடை

> சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி மானிப்பாய் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் நிகழ்த்திய உரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.
> தொகுத்தவர்:
> வி. பி. சர்மா

பெறாது என்ற நிலையை மாற்றி அமைக்கவேண்டும்.

மகளிர் மத்தியில் பல கொடுமைகளை விளைவிக்கும் சீதனமுறை ஒழிக்கப்பட வேண்டும். நம் உழைப்பெல்லாம் சீதனமாக்கப்பட்டு, எமது இன்பமான வாழ்வு பறிபோய், சீதனமாக வழங்கப்பட்ட பணம் ஆண் இனத்தால் அநியாய வழியில் அழிக்கப்படுவதை சகிக்க முடியாது.

#### சீதனப் பழக்கம்

சீதனம் சேர்க்கும் பழக்கத்தைக் கைவிடுங்கள். அவர்களை நன்கு கல்வி பயில வையுங்கள். பிறரில் தங்கியிராமல் தம் சொந்த உழைப்பில் வாழச் செய்யுங்கள்.

தன்னம்பிக்கையும் துணிவும் கொண்ட பிள்ளைகளாக்கி விடுங்கள்.

மகளிர் அபிவிருத்தியின் இலக்குகளை அடைய நாம் முயற்சிக்கவேண்டும். அரசாங்கத்தின் அனுகு முறைகள் நமக்குக் கிடைக்காத பட்சத்தில், கிராமிய மட்டத்தில் பொருத்தமான செயற்திட்டங்களை அமைத்து செயற்பட வேண்டும்.

கிராமத்துப் பெண்களில் பலர் அபிவிருத்தியடைந்ததாகச் சொல்லப்படும் சமூகத்துடன் தொடர்பு கொள்ளவோ, அவர்களிடமிருந்து விடயங்களை அறிந்து கொள்ளவோ முடியாத நிலையில் சாதி, சமய அமைப்புக்களும், மூடநம்பிக்கைகளும் இன்னமும் நம்மிடையே நிலவத்தான் செய்கின்றன.

பெண் சமுதாயத்திற்கு மூதாதையரால் விதிக்கப்பட்ட பல பழைமையான கட்டுப்பாடுகள் விலக்கப்பட வேண்டும். கணவன் இறந்தவுடன் விதவைகள் எனப் பட்டமிட்டு பெண்களை ஒதுக்கி வைக்கும் நிலை மாற வேண்டும்.

#### மூடநம்பிக்கை

தன் பிள்ளையின் திருமண வேளையில் ஒரு விதவைத் தாய் உரிமையுடன் முன் சென்று ஆசீர்வதிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நூற்றாண்டில் இதைவிடக் கொடுமையான மூட நம்பிக்கை வேறெதுவும் இருக்க முடியாது.

எமது நோக்கங்களை நிறைவு செய்ய ஆண்களையும் நமது அணியில் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிர




தான நீரோட்டத்தில் இருந்து நாம் குழுக்களாகப் பிரிந்து செல்வதை விட ஆண்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் எமது விடுதலைக்கு வழி செய்யவேண்டும்.

பெண் இனத்தின் விடுதலைக்கு வழி செய்யவேண்டும்.

பெண் இனத்தின் விடுதலைக்கு மூன்றாவது தடையாக இருப்பது சுதந்திரம் ஆகும்.

பெண்கள் எதனையும் இலகுவாக சிந்திக்க, பேச, நடந்துகொள்ள, அனுபவிக்க மாற்றுச் சக்திகள் எதனதும் தடையின்றி இருக்கவேண்டும்.

வறுமை, கௌரவம், சுதந்திரம் ஆகிய மூன்று தடைகளையும் நீக்கிக் கொள்ளாத நிலையில் பெண்களின் முன்னேற்றத்துக்கு வழி பிறக்க மாட்டாது. ★

- சரோஜா சிவச்சந்திரன் -

# சந்திரனில் மனிதன் காலடி வைத்தது
# சரித்திரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி!

கி. பி. 1893 இல் ஹெர்மன் கான்ஸ்வின்த் (Herman Ganswindt) என்ற ஜேர்மன் ஆய்வாளர், வெடி மருந்துத் தூளினால் உந்தப்படும் ஏவுகணைகளைக் கிரகங்களுக்குச் சென்று மீளும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தத் திட்டம் ஒன்று தீட்டினார்.

ஜுலி வெர்னியால் தாக்கம் பெற்றவருள் மிக முக்கிய மானவர் 'விண்வெளி இயலின் தந்தை' என்று அழைக்கப்படும் கொன்ஸ்டன்டின் சியோல்கோவ்ஸ்கி (Konstatin Tsiolkovsky 1857 — 1935) என்ற ரஷ்ய பள்ளியாசிரியர்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, கல்வி வசதிகள் ஏதும் இன்றித் தம் வாழ்வைத் தொடங்கிய அவர், தம் காது கேளாக் குறையையும் மறந்து சொந்த முயற்சியினால் உழன்று, பயின்று பௌதிகவியல் ஆசிரியரானார்.

இவரே முதன் முதலில் மண்ணெண்ணெய் அல்லது திரவ ஹைட்ரஜனுடன் திரவ ஒக்சிஜனைக் கலந்து எரிபொருள் தயாரித்து ஏவூர்திகளை இயக்கலாம் என்று நிரூபித்தார்.

ஓர் ஏவூர்தியிலேயே பல கட்டங்களை (Multi - Stages) அடுக்கி வைப்பது, கூட்டுப் பொறிகளை (Clustered Engines) இணைப்பது போன்ற நவீன ஏவுகணை இயல் பற்றியும் குறிப்பிட்டார்.

கி. பி. 1903 இல் ரைட் சகோதரர்கள் (Wright Brothers) ஆகாய விமானமாகிய காற்றூர்தியை வானில் பறக்கவிட்டு வெற்றி கண்டதும் அதே ஆண்டிலேயே சியோல்கோவ்ஸ்கியின், 'ஏவூர்தி உந்து வாகனங்களால் அண்டவெளி ஆராய்ச்சி' (Exploration of the Universe with Rocket - Propelled Vehicles) என்ற தொகுப்பு நூல் வெளி வந்தது.

'மனிதன் பூமியாகிய சிந்தனைத் தொட்டிலிலேயே என்றென்றைக்கும் முடங்கிக் கிடக்க முடியாது. அவன் கி. பி. 2017 இல் அண்டவெளிக்குள் சென்று நுழைவான்' — என்று தீர்க்கதரிசனம் கூறினார்.

ஆனால் அந்த சரித்திரச் சம்பவம், விண்வெளி வரலாற்றில், குறிப்பிட்டதற்கு 56 ஆண்டுகளுக்கு முன்னமேயே - அதாவது ஏப்ரல் 12 ஆம் திகதி 1961 ஆம் ஆண்டில் யூரி ககாரின் என்ற ரஷ்ய விண்வெளி வீரரால் நிகழ்த்தப்பட்டது.

கி. பி. 1913 இல் பிரெஞ்சு மேதை ரொபேர்ட் எஸ்னோல்ட் (Robert Esnault Peltrie) யின் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் வானவியலில் குறிப்பிடத்தக்கவை.

#### கொடார்ட்

அடுத்து, அமெரிக்காவில் பௌதிகப் பேராசிரியரான ரொபர்ட் ஹட்சிங்ஸ் கொடார்ட் (Roberrt Hutchings Goddard) 1926 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி உலகின் முதல் திரவ எரி

> விண்வெளியும் ரொக்கெட்டும் - 4

பொருள் ஏவுகணையை விண்ணில் செலுத்திய அற்புத நிகழ்ச்சி விண்வெளிக் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்ட வரலாற்று முத்திரையாகும்.

அந்த ஏவுகணை விண்ணில் 56 மீற்றர் உயரம் வரையே எட்டியது.

ஆயினும் அம்முதன் முயற்சியே பின்னர் 3 லட்சத்து 84 ஆயிரத்து 700கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சந்திரமண்டலத்தில் 16-7-1969 இல் அப்போலோ 2 என்ற அமெரிக்க விண்கலம் மூலம் நீல் ஆம்ஸ்ட்ரோங் என்பவர் முதன்முதலாக காலைவைத்தார்.

சந்திரனில் மனிதன் காலடி வைக்கும் அளவுக்கு வெற்றி கண்டது என்பது மானிட வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

கி.பி 1923 இல் ஹெர்மன் ஒபேர்த் (Hermarn Oberth) என்னும் ஜேர்மனிய [illegible]தப் பேராசிரியர் எழுதிய வானவியல் பிரசித்தமானது.

ஏவுகணைப் பணிகள் ரஷ்யாவிலும் ஜேர்மனியிலும் அமெரிக்காவிலும் தொடர்ந்தன.

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது ஜேர்மனியில், பால்டிக் கரையின் 'பூனிமுண்டே' (Peenemunde) தளத்தில் நூற்றுக்கணக்கான பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் ஆய்வு நிகழ்த்திய தன் பலனாக 'வி-2' (V-2) என்ற போர்க்கணை தயாரானது.

முதல் 'வி-2' ஏவுகணை கி.பி 1942இல் பரிசோதனை ரீதியில் செலுத்தப்பட்டது.

ஆழ்ந்த நுண்ணாய்வுகளின் தொடராக டாக்டர் வெர்னர் வொன் ப்ரோன் (Dr. Wernher Von Braun) என்ற ஜேர்மனியர் தலைமையில் ஏவுகணை நிபுணர்குழு ஒன்று அமெரிக்காவுக்கும், ஏனைய சகல வல்லுனர்கள் சோவியத் யூனியனுக்கும் சென்றனர்.

#### ஸ்புட்னிக்

சோவியத் ரஷ்ய விஞ்ஞானி கோர்லோவ் (Korlev) தலைமையில் ஆய்வுகள் தொடர்ந்தன.

அதன் விளைவாக, அக்டோபர் 4, 1957 இல் சோவியத் யூனியன் ஸ்புட்னிக் - I (Sputnik - I) என்ற உலகின் முதற் செயற்கைக்கோளினை விண்ணில் ஏவியது.

அதன்பின்னர், 31-1-1958 இல் அமெரிக்கா 'எக்ஸ்புளோரர்' (Explorer - I) என்ற தன் முதல் செயற்கைக் கோளை விண்ணில்செலுத்தி[illegible]. ★




## ராஜியின் தன்னம்பிக்கை!

'இந்து... இந்து... !'

முன்வீட்டு மாமியின் குரல் கேட்டு வெளியே வருகிறேன்.


வாங்கோ இப்படி இருங்கோ மாமி...'

மாமி என் வரவேற்புகள் எதையுமே காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. மாமியை நிமிர்ந்து பார்க்கிறேன். கண்கள் இரண்டும் குளமாக,

இந்து... ராஜியிடம் இருந்து கடிதம் வந்திருக்கு,

'அதுக்கு ஏன் மாமி அழுறீங்கள்?...'

'அழாமல் என்னம்மா செய்கிறது...? உன்னைப்போல, அவளும் இங்கு வேலைபார்த்துக்கொண்டு இருந்ததுபோல இருந்திருக்கலாம். அவள் மாட்டன் என்று மறுத்தும்




வயதுபோகுதே என்று வற்புறுத்தி லண்டனுக்கு அனுப்பி வைச்சேனே பாவிநான்...'

'மாமி கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்.'

'இந்து... லண்டன் மாப்பிள்ளை இங்குவந்தால் திரும்பிப் போக முடியாது, பெண்ணை அங்கே அனுப்புங்கள் நான் தாய் மாதிரி நின்று எல்லாம் செய்துவைப்பேன் என்று மாப்பிள்ளையின் அக்கா சொன்னபடி [illegible]னே நம்பிக்கையோடு நான் ராஜியை அனுப்பி வைத்தேன்'

என்ன மாமி பழைய கதைகளைச் சொல்லிக்கொண்டு... அதுதான் கூட்டிக்கொண்டு போய் தன் தம்பிக்கு கட்டி வைத்து ஒருமாதமாகிவிட்டதே. இப்ப கடிதத்திலே என்னமாமி இருக்கு..'

பொறுமை இழந்து மாமியை நான் தூண்டினேன்.

'உண்மை தான் இந்து... தாலிகட்டி தனியறைக்கு வந்தபின் தான் தெரிந்தது. அவன் ஒரு அரைப்பைத்தியம் என்று. அன்று இரவே என் பிள்ளையை அடித்து உதைத்து கஷ்ரப்படுத்திவிட்டான். மகேஸை நம்பி என் பிள்ளையை அனுப்பினேன்' மாமி அழுதாள்.

'எப்படியாவது என் பிள்ளையை திருப்பி இங்கு எடுக்க வேண்டும்' மாமி உறுதியாக சொன்னாள்.

'ஏன் மாமி... ராஜி இப்ப எங்கிருக்கிறாள்?'

இந்து... அவனுடைய தொடர்பை அன்று இரவே அறுத்துவிட்டு பக்கத்து 'ரூம்' இந்தியப் பெண்ணின் துணையுடன் வேறு இடத்தில் இருக்கிறாளாம்,'

'சரி மாமி... ராஜி வரப் போகிறேன் என்று கடிதத்தில் எழுதி இருக்கிறாளா...?'

'அதுதானே இந்து இவ்வளவு கஷ்ரப்பட்ட பின்பும் இங்கு வரப் போவதில்லை என்று எழுதியிருக்கிறாள். அங்கு வேலை,

'இல்லை மாமி... அவள் எடுத்தது சரியான முடிவு தான். இங்கு இருந்தமாதிரி இருந்திருந்தால் அதுவேறு கதை. இவ்வளவு நடந்தபின் அவள் இங்கு வந்து மற்றவர் வாய்க்கு அவலாவதைவிட, ஏதோ ஒரு தன்னம்பிக்கையுடன் அவள் இந்த முடிவை எடுத்திருப்பது நல்லதுதான்.'

'திருமணம் என்பது ஆண்களின் வாழ்வில் பாதியே... இப்படி ஒரு அறிஞர் சொன்னாராம். ஆண்களின் வாழ்வில் மட்டுமல்ல பெண்களின் வாழ்விலும்தான் இந்து.

'என்று அடிக்கடி ராஜி சொல்லுவாள் இப்ப அதைத் தான் அவள் செய்யப்போகிறாள். ஒருபாதியைப் இழந்துவிட்டோம் மறுபாதியைப் பிடித்து முன்னேறலாம் என்ற துணிச்சலுடன்மனம்தளராது செயல்படும் அவளைக் குழப்பாதீர்கள் மாமி...'

இப்படிச் சொல்லியபடி மாமிக்கு தேனீர் தயாரிக்கச் செல்கிறேன். ★

## அன்றாட வாழ்வில்...

புதிய தும்புத் தடியை இளஞ் சூட்டு நீரில் சிலநிமிடம்ஊற விட்டுபின்காய விட்டுபாவித்தால் நீண்ட நாட்கள் பாவிக்கும்.

ஒரு பார்சல் அனுப்பும்போது ஒருமட்டையில் விலாசத்தை எழுதி அதில் ஒட்டுவது வழக்கம், அந்த விலாசம் எழுதிய மட்டையின் மேல் மெழுகுவர்த்தியால் தேய்த்துவிட்டால் தண்ணீர் பட்டாலும் எழுத்துக்கள் அழியமாட்டாது.

— தேவி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திரைப்பட விருது பெற்ற 'கின்னஸ்' சாதனையாளர்!

இந்திய திரைப்படத்துறையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளனர்.

அவர்கள் இருவருக்கும் இம்முறை இந்திய அரசு தேசிய விருதுகளை வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

ஒருவர் இசைத்துறையிலே பிரபலமான பின்னணிப்பாடகி லதா மங்கேஷ்கார்.

மற்றவர் நகைச்சுவை நடிகையாகத் திகழும் மனோரமா.

### லதா மங்கேஷ்கார்

1928 இல் பிறந்த லதா மங்கேஷ்காருக்கு தாதா பால்சாகிப் விருது வழங்கப்பட்டுள்ளது.

1948 முதல் 1987 வரையான காலத்தில் 2 ஆயிரத்துக்கு அதிகமான படங்களில் பின்னணி பாடியுள்ளார்.

30 ஆயிரம் பாடல்களைத் தனியாக, இருகுரலிசையாக, கோஷ்டி காணங்களாக பாடியதற்காக லதாவின் பெயர் 1990 உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இசைப் பேரறிஞர் எம். எஸ். சுப்புலட்சுமி போன்று சமூக சேவைக்குத் தனது இசையை அர்ப்பணிக்கப் போவதாக லதா மங்கேஷ்கார் கூறியிருக்கிறார்.

### சிறந்த நடிகர் மம்முட்டி

இந்தியாவின் சிறந்த நடிகர் விருது மலையாள நடிகர் மம்முட்டிக்குக் கிடைத்திருக்கிறது அவரின் முழுப் பெயர் முகமது குட்டி. இன்று 'மம்முட்டி' யாகத் திரையில் அவர் நடித்து வருகிறார்.

38 வயதான அவர் 'ஒரு வடக்கன் வீரகதா' என்ற மலையாளப் படத்தில் சென்ற ஆண்டு சிறப்பாக நடித்ததற்காகச் சிறந்த நடிகராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இவர் 'மௌனம் சம்மதம்' படத்தின் மூலம் தமிழ்ப் படங்களிலும் நடித்துவருகிறார்.

நல்ல கதை, நல்ல பாத்திரம் - இவைகள் இருக்கும் படங்களில் மட்டுமே நான் நடிக்கின்றேன்'— இப்படிக் கூறும் மம்முட்டி — 'ரசிகர் மன்றங்களை நான் வளர்ப்பதில்லை.



மனோரமா

என்னைப் பொறுத்தவரையில் ரசிகர் மன்றமே தேவையில்லாத ஒன்று'— என்று அடித்துக் கூறுகிறார்.

### சிறந்த துணை நடிகை

1989 ஆம் ஆண்டிற்கான அகில இந்தியாவின் சிறந்த துணை நடிகை விருது தமிழ் சிரிப்பு நடிகை மனோரமாவுக்குக் கிடைத்துள்ளது.

'புதிய பாதை' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக மனோரமா இந்த விருதைப் பெறுகிறார்.

ஆயிரத்துக்கு அதிகமான படங்களில் நடித்து உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றவர் மனோரமா. ★

# 'ஒஸ்கார்' விருதை நோக்கி தமிழ் நடிகை அர்ச்சனா?

ஊர்வசி விருது, மற்றும் சிறந்த நடிகைக்கான தேசிய விருது ஆகியன பெற்ற தமிழ் நடிகை அர்ச்சனாவுக்கு ஆங்கிலப் படம் ஒன்றில் நடிக்க வாய்ப்புக்கிடைத்திருக்கிறது.

ஹவாய் உலகத் திரைப்படவிழாவில் அர்ச்சனா நடித்த 'பிறவி' என்ற மலையாளம் திரையிடப்பட்டது.

'ஒஸ்கார்' பரிசுபெற்ற 'கடைசி சக்கரவர்த்தி' (Last Emperor) படத்தை இயக்கிய பெர்னான்டோ பெர்டே லூஸி 'பிறவி' படத்தைப் பார்த்தார்.

அர்ச்சனாவின் நடிப்பு அவரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

லூஸி இப்போது 'புத்தா' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்.

இப்படத்தில் நடிக்க அர்ச்சனாவை ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

அப்படியானால் 'ஒஸ்கார்' விருதை நோக்கி அர்ச்சனா செல்கிறார் என்று சொல்லலாமா! ★

# உலகில் சிறந்த நடிகை 80 வயதான ஜெஸிக்கா!

எண்பது வயது ஜெஸிக்கா அதிர்ச்சி அடைந்தார்.

ஒரு கணம் அவரால் பேசவே முடியவில்லை.

மறுகணம்......... நரைத்த தலைமுடி, ஒல்லியான உடல், ஆனால் நிமிர்ந்த நடை — எண்பது வயதான ஜெஸிக்கா ரண்டியின் தோற்றம் இது.

விறு விறு என்று நடந்து சென்று ஹொலிவூட் அரங்கத்தில் ஏறுகின்றார்.

குழுமியிருந்த நடிகர், நடிகையர், தொழில் நுட்ப வல்லுநர்கள் கரகோஷம் எழுப்ப......

சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது ஜெஸிக்கா ரண்டிக்கு வழங்கப்படுகிறது.

லண்டனில் மேடை நடிகையாக நடிப்பில் இறங்கியவர் ஜெஸிக்கா ரண்டி.

''தொண்ணூறை நோக்கிச்சென்று கொண்டிருக்கும் நான் இந்த நிலைக்கு வருவேன் என்று எதிர்பார்க்கவே

வெள்ளித்திரையில்

இல்லை''— இப்படி உணர்ச்சிவசப்பட்டு ரசிகர்கள் முன் ஜெஸிக்கா தெரிவித்தார்.

ஜெஸிக்கா நடித்த ''ட்ரைவிங் மிஸ் டெய்ஸி'' - படத்துக்கு 9 ஒஸ்கார் பரிசுகள் கிடைத்தன.

சிறந்த படமாகவும் இது தெரிவு செய்யப்பட்டது. ஆனால் ஒஸ்கார் விருது பெறுபவர்களில் இப்படத்தின் டைரக்டர் புரூஸ் பெர்பேர்ட் இடம் பெறவில்லை.

ஒஸ்கார் விருது வைபவத்தில் 'மறக்கப்பட்ட மனிதர்' ஆகச் சிறந்த படத்தின் டைரக்டர் இருந்தார்.

ஆனால் ஜெஸிக்கா அவரை மறக்கவில்லை. அவருக்கு பகிரங்மாக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

'ட்ரைவிங் மிஸ் டெய்ஸி' படத்தின் கதை இதுதான். யூத மேட்ரன் பெண் ஒருத்திக்கு அவரது கார்ச் சாரதியான கறுப்பு நிற ஆணுடன் வளரும் நட்பு பற்றி விவரிப்பதுதான் இப்படத்தின் கதை.

கறுப்புநிற மனிதனாக அமெரிக்காவின் தென்பகுதியைச் சேர்ந்த மோர்கன் பிரீமன் நடித்தார்.

'சன்ஷைன் போய்ஸ்' படத்தில் துணை நடிகராக சிறப்பாக நடித்ததற்காக 80 வயதான ஜோர்ஜ்டோன்ஸ் என்பவருக்கு முன்னர் ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது. இவருக்கு இப்போது 96 வயது. இன்னும் நடித்துக்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது பிரிட்டிஷ் நடிகர் டானியல் டேலூயிஸுக்கு வழங்கப்பட்டது.

'மை லெப்ட் புட்' (எனது இடது கால் பாதம்) படத்தில் இவர் ஊனமுற்ற ஐரிஷ் எழுத்தாளர் கிறிஸ்டி பிரவுண் வேடத்தில் நடித்தார்!

இது ஒரு ஐரிஷ் மொழிப்படம் ஆகும்.

எழுத்தாளர் கிருஸ்டி பிரவுண் இடது கால் பாதத்தினால் மட்டுமே வேலைசெய்யக்கூடியவராக இருந்தார். அந்தப் பாத்திரத்தில் டானியல் டேலூயிஸ் மிகவும் கஷ்டப்பட்டு நடித்துவந்தார்.

அப்படத்தில் இவருக்குத் தாயாக நடந்த ட்ரென்டா பிரிக்கருக்கு துணை நடிகைக்கான ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது.

'ஜுலை 4 இல் பிறந்தது'— என்ற வியட்னாம் படத்தை டைரக்ட் செய்ததற்காக ஒலிவர் ஸ்ரோன் என்பவருக்கும் ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது.

வியட்னாம் யுத்தத்தின்போது அமெரிக்க இராணுவத்தில் சார்ஜண்ட் ஆக இவர் பணியாற்றினார். அப்போது இவர் காயமடைந்திருந்தார். ★

"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period – Months காலம் – மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | • | •7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ச. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாவத்தில் இருந்து மனிதனை மீட்க சிலுவை சுமந்த யேசுபிரான்!

**இது** சித்திரை மாதமெனத் தெரியாதா?

தேன் சிந்தும் மலர்களைக் கொத்துக் கொத்தாக மரங்களில் பார்த்துவிட்டால் போதும்.

ஆங்காங்கே மரங்களில் மலர்ந்துள்ள மொட்டுக்களும் பூக்களும் சித்திரை பிறந்துவிட்டது என்பதைக் காட்டி நிற்கும்.

வசந்த காலத்தில் எல்லாத் தாவரங்களும் தளைத்துப், பூத்துக், குலுங்கிக் காட்சி அளிப்பது. இயற்கை நியதி ஆகும்.

இது மட்டுமல்ல, சூரியனின் கதிர்களால் புத்துயிர் பெற்ற தாவரங்கள் புது மெருகுடன் காட்சியளிக்கும். எமது நாட்டிலுள்ள எல்லா மக்கள் மீதும் நீதி என்னும் சூரியவொளி பிரகாசித்தால், யாவரும் புது வாழ்வு பெற்று, மகிழ்ச்சியுடன் வாழலாம். இது எம் மக்களுக்கு எவ்வளவு அவசியமானது.

அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

### உபதேசம்

அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லு



கிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

இது எப்படி எமக்குக் கிடைக்கக்கூடும்? எம் எல்லோருக்கும் புது வாழ்வின் அனுபவத்தைத் தருவதற்காக சிருஷ்டிகர்த்தாவாகிய இறைவன் விண்ணுலக மேன்மையையும் மகிமையையும் விட்டு இயேசுகிறிஸ்துவின் சாயலில் இப்புவிக்கு வந்தார்.

இயேசுகிறிஸ்து இப்புவிக்கு வந்ததன் நோக்கமென்ன?

இயேசு சொன்னார்:

கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்; குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்.

பாவத்தில் மாண்டு அடிமைகளாகவிருந்த மானிடரைப் பாவ ஜீவியத்திலிருந்து மீட்க இயேசுகிறிஸ்து ஈனக்குருசேறினார்.

### உயிர்ப்புப் பண்டிகை

இன்றும் இயேசுகிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்று விசுவாசிக்கும் மக்கள், இந்த நிகழ்ச்சியை நினைவுகூர்வதற்காக உயிர்ப்புப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

நாம் புத்தாண்டு தினத்தில் புத்தாடைகளை அணிகிறோம். இது நம் வெளித் தோற்றத்தை மட்டும் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டும்.

புத்தாண்டில் பல தீர்மானங்களை எடுக்கிறோம். ஆனால் சில காலஞ்சென்ற பின் இவற்றை மறந்து எமது பழைய பழக்க வழக்கங்களாகிய நேர்மையின்மை, களவு, குற்றமிழைத்தல், மதுபானம் அருந்துதல், காமம், சூதாடல், விபசாரம், கொலை ஆகிய தவறான செயல்களில் ஈடுபடுகிறோம்.

பஸ்காப் பண்டிகைக் காலத்தில் மரித்து, உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறபடியால் பழைய பழக்கவழக்கங்களைக் கைவிட்டு, புதுவாழ்வுக்குரிய உறுதியான தீர்மானங்களை எடுப்போமாக!

புதுவாழ்வு ஆரம்பிக்க வாஞ்சையாகவிருக்கிறதா? அவ்வாறாயின் பின்வருமாறு பிரார்த்திக்கவும்.

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். ★

— இலங்கை வேதாகம சங்க வெளியீட்டில் இருந்து —

## உலகுய்ய வந்தார்!

பெத்தல கேம்நகர் மாட்டுத் தொழுவத்திற்
பிறந்தவொரு பாலன் — யேசு
சிறந்தபெருஞ் சீலன்
மெத்த மிலேச்சத் தனங்கொண்ட மக்களை
மீட்ட குருநாதன் — அவர்
வீட்டை அருள்நாதன்.

தெய்வப் பணிசெய்யும் அன்பராஞ் சூசை
செய்த தவப்பயனால் — மிக்க
தெய்வ அருளதனால்
எய்தும் புகழ்க்கன்னி மேரி மகிழ்ந்திட
இவ்வுலகுய்ய வந்தார் — யேசு
கௌவை ஒழிக்கவந்தார்.

மூன்று அரசர்கள் தெய்வ ஒளிகண்டு
முந்தியே வந்துகண்டார் — பாலனை
வந்தனை செய்துகொண்டார்
ஈன்றவள் தன்னிடம் இயேசு அவதாரம்
இனிக்க எடுத்துரைத்தார் — பாலன்
சனித்த நலமுரைத்தார்.

அயலானை உன்போல நேசித்து அவனுக்கும்
அன்பினைக் காட்டென்றார் — அச்சம்
அன்புக்கு இல்லையென்றார்
தியாகமே இன்பத்தின் மூலவே ரென்றுஞ்
செல்வமே தீமையென்றார் — உண்மை
சொல்வதே நன்மையென்றார்.

கன்னம் அறைந்தார்க்கு மற்றவுன் கன்னத்தைக்
காட்டெனக் கட்டுரைத்தார் — அன்பு
காட்டெனத் தொட்டுரைத்தார்
பென்னம் பெரிய பாஷயும் மன்னிப்பும்
பெற்றிடலாமென்றார் — மோட்சம்
உற்றிடலா மென்றார்.

மெத்தவுயர்ந்த பிரசங்கம் கல்வாரி
மெச்சிடவே பொழிந்தார் — மக்கள்
உச்சியது குளிர்ந்தார்
பத்தரை மாற்றுத் தங்கத்திற் குற்றத்தைப்
பாவியர் சுமத்திவிட்டார் — சிலுவை
காவிடச் சுமத்திவிட்டார்.

ஆண்டவன் தூதரை அனியாய மாகவே
அறைந்தார் சிலுவையிலே — கொடுமை
மறந்தார் அறைகையிலே
மீண்டும் உயிர்பெற்று மூன்றாம் நாளினில்
மேலான காட்சிதந்தார் — பின்பு
மேலான மோட்சமுய்ந்தார்.

— கவிஞர், துன்னையூர். சி. செல்லமுத்து.

### பொன்மொழி

● பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடமாட்டார்கள்.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

— மத்தேயு 6 : 19 – 21

# மனிதனைப் புனிதனாக்கும் மகத்துவமிக்க ரமழான்!

**வான்** மறை குர்ஆன் நோன்பைப்பற்றி கட்டளை இடும்போது அதற்குரிய மூன்று விளைவுகளை எடுத்துரைக்கிறது.

● நீங்கள் பயபக்தியுடையவர்களாக மாறவேண்டும்.

● நேர்வழியை அருளியவனின் புகழ்பாடி அவனுடைய பெருமைகளை மேலோங்கச் செய்ய வேண்டும்.

● இந்த நன்மைகளை அருளியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இறையச்சம், இறைவனைப் பெருமைப்படுத்துதல், இறைவனுக்கு நன்றி செலுத்துதல் இந்த மூன்று அம்சங்களும் நோன்பின் விளைவால் நமக்குக் கிடைக்கவேண்டும். நம் ஆத்மீக ஆரோக்கியத்திற்காக நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன விளைவுகளை தரவில்லையென்றால் அது நோன்பாகாது. அது வெறும் பட்டினி கிடப்பதற்கு ஒப்பாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'நோன்பாளிகள் பலருக்கு நோன்பு பட்டினியைத் தவிர வேறு எதையும் அளிப்பதில்லை.'

இத்தகைய நோன்பாளிகள் யார்? அவர்களுடைய உடல் நோன்பு நோற்று உள்ளம் நோன்பிருக்கவில்லையோ— எவர்களுடைய நாவு தாகத்தோடு இருந்து உள்ளம் தாகமின்றி இருந்ததோ அவர்களுக்கு இறையருள் தடாகத்தின் இனிய நீர் எப்படி கிடைக்கும்?

### நேரியவழி

நம்முடைய வாழ்வில் நேரிய வழி காட்டும் ரமழான் மாதம் ஒவ்வொர் ஆண்டும் வருகிறது. நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து உடல் தூய்மையும், உளத்தூய்மையும் பெறுவதற்குரிய ஒரு பயிற்சி மாதமாகவே இஸ்லாம் அதனை விதித்துள்ளது.

'எவர் ஒருவர் இந்த ரமழான் மாத நோன்பை ஈமானுடனும், கண்காணிப்புடனும் பேணுகின்றாரோ அவருடைய அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படும்' —என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நோன்பு விஷயத்தில் உறுதியான ஈமானும், சிறந்த கண்காணிப்பும் வேண்டும்



என நிபந்தனையும் விதித்துள்ளார்கள்.

ஈமானி என்றால் என்ன? கண்காணிப்பு என்றால் என்ன? உண்மையில் முன் கூறப்பட்ட இறைவேதம் எடுத்துரைத்த மூன்று அம்சங்கள்தான் அவை.

'இத்திகா' என்ற அரபிச் சொல்லுக்கு பாபங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளுதல் என்ற பொருளுமுண்டு.

அதாவது இம்மையின் அனைத்து மாசுகளிலிருந்தும் மனோ இச்சைகளிலிருந்தும் உடலையும், உள்ளத்தையும் பாதுகாத்து அவற்றுக்குஇரையாகாமல் தப்பித்துக்கொள்வதே இறையச்சமாகும்.

இறைவனின் பெருமையும், புகழும் நம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கிழம்ப வேண்டும்.

நம்முடைய நாவு அவனுடைய அருளையும், நன்றியையும் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும். இந்தக் கட்டத்தை நாம் அடையும் போது அருள் நபி(ஸல்) அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றியவர்களாவோம்.

### உள்ள நோன்பு

தவறுபுரிவதும், பாவங்கள் செய்வதும் நோன்பை முறிக்காது என்று எண்ணுகிறீர்களா? உடலின் நோன்பு முறியாதிருக்கலாம்; ஆனால் உள்ளத்தின் நோன்பு முறிந்து விடுகின்றது. ஆம் உள்ளமே சிதறிப்போனபிறகு உடலில் என்ன இருக்கிறது. ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'நோன்பாளி காலையில் இருந்து மாலைவரை இறை வணக்கத்திலேயே உள்ளார்– இன்னொருவருக்கு தீங்கு இழைக்காதவரை தீங்கிழைத்துவிட்டால் அவர் தம் நோன்பை பாழ்படுத்திவிடுகிறார்!'

மனோ இச்சைகளைப் பின்பற்றுவதும், தீயசெயல்களில் ஈடுபடுவதும் நோன்புக்கு முரணான செயல் அல்ல என்று நீங்கள் கருதுகிறீர்களா?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். 'உண்பதிலிருந்தும், குடிப்பதிலிருந்தும் விலகியிருப்பதன்பெயர் நோன்பல்ல. மாறாக தீய செயல்களிலிருந்தும் விலகி இருப்பதே நோன்பாகும்.' ★

- எம். எஸ். சித்திக் -

# சோவியத்தில் பரவிவரும் 'பஞ்சதந்திர' மோகம்!

□ ரஷ்யாவில் பஞ்சதந்திரக் கதைகள் 200 ஆண்டுகளுக்கும் மேலாகப் படிக்கப்பட்டு வருகின்றன.

1762ல் வெளிவந்த 'இந்திய அரசியல், அறநெறிக் கதைகள்' என்ற தொகுப்பில் தான் முதல் முறையாகப் பஞ்சதந்திரக் கதைகளிலிருந்து சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருந்தன.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளியான இந்த நூல் பிரெஞ்சு மொழியிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டதாகும்.

19 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட பல்வேறு இலக்கிய வெளியீடுகளில் இந்திய நாட்டுப்புறக்கதைகள் அடங்கியிருந்தன.

மாபெரும் ரஷ்யக் கவிஞர் புஷ்கினும் அவரது தோழரான கவிஞர் கெல்விக்கும் வெளியிட்ட இலக்கிய கெஜட் அத்தகைய நூல்களில் ஒன்றாகும். புஷ்கின் பஞ்சதந்திரக் கதைகளை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

பின்னர் சோவியத் ஆட்சிக் காலத்தில் 'பஞ்சதந்திரத்திலிருந்து தேர்ந்தெடுத்த சில கதைகள்' 1930 ல் வெளி வந்தது.

சமஸ்கிருதத்திலிருந்து ரஷ்ய மொழிக்கு நேரடியாக மொழி பெயர்க்கப்பட்ட முதல் பஞ்சதந்திரக் கதைப் புத்தகம் இதுவே. சோவியத் இந்தியவியலாளர் ஆர். ஷோர் இதனை மொழி பெயர்த்திருந்தார்.

ஏ. ஷிர்க்கின்னுடைய இரண்டாவது மொழி பெயர்ப்பு 1960 களில் வெளியாயிற்று.

இந்த மொழிபெயர்ப்பு சிறப்புக்குரியதாக இருப்பினும் முழுமையானதாக இல்லை. ஏனெனில், இந்த மொழிபெயர்ப்பு அமெரிக்க அறிஞர் எட்மெர்ட்டனுடைய ஆங்கில நூலை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்ததேயாகும்.

'இதுவரை வெளிவந்துள்ள அனைத்து ரஷ்ய மொழி பெயர்ப்புக்களிலும் முழுமையானது எனது மொழிபெயர்ப்புதான். சமஸ்கிருதத்திலிருந்து நான் மொழிபெயர்த்திருக்கிறேன்' — இப்படிடாக்டர் இகோர் செரிபிரியகோவ் தெரிவித்தார்.

கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான கலாசாரப் பரிவர்த்தனைக்கு 'பஞ்சதந்திரம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஐரோப்பிய இலக்கியத்தின் மீது பஞ்சதந்திரத்தினுடைய செல்வாக்கை பொக்காசியோ, சாஸர், லாஃபான்டைன், கதே முதலிய எழுத்தாளர்களின் படைப்புக்களில் காண முடியும்' — இப்படி 'பண்டைய இந்திய உரைநடை' என்ற நூலில் உலக இலக்கிய அக்கடமியைச் சேர்ந்த அறிஞர் பி. கிரின்ட்சர் குறிப்பிட்டுள்ளார்.

'பஞ்சதந்திரம்', மங்கோலிய மொழி, திபெத்திய மொழி, மலாய், தாய், லாவோ முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## புன்னகை பூத்து மலர்வாய்...

எத்தனை இருள்கள் துயர
ஏக்கங்கள் பெருமூச் சோடு
ரத்தத்தின் பெருக்கைச் சாவின்
ராகத்தை வாழ்வாய்க் கொண்டு

ஆண்டுகள் பலவாய் இங்கே
அழுதவர் சிரிக்கத் துன்பப்
பூண்டுகள் தீய்ந்து இன்பப்
பூக்களின் தேன் சுரக்க

இளசுகள் எதிர் காலத்தில்
ஈடிலாப் புகழினோடு
வளமிக்க சொந்த மண்ணில்
வாழ்ந்திட ஆசி சொல்லிச்

சித்திரைப் புத்தாண்டே நாம்
சிறப்புடன் வாழ அன்புப்
புத்தொளி பரப்பி நீயும்
புன்னகை பூத்து மலர்வாய்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 112
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ......................................
விலாசம் ......................................
......................................

## போட்டி இல: 112

**இடமிருந்து வலம்:**

1. இவரைப் பலர் கடவுளாக வணங்குகிறார்கள் 6. முருகனுக்கு மாமன் இவர் 7. பொறுமை குழம்பி விட்டது 9. குன்று 10. அழகிய இடம் குழம்பி விட்டது. 13. பகிர்ந்து கொடு 14. பெரியவர்களால் கூறப்படுவது 15. தேவலோக மரம் 16. மன அமைதி 18. திருமணம் நடைபெறும் இடம் 19. வேகம் மாறி விட்டது 21. உலக நதிகளில் ஒன்று 22. சந்தேகம் மாறிவிட்டது.

**மேலிருந்து கீழ்:**

1. நல்லூரை ஆண்ட கடைசி மன்னன் 2. இப்படியும் சுவர்க்கம் உண்டு 3. முனிவர் 4. பாடல்களால் போடப்படும் மாலை 5. வெண்மை நிறத்துக்கு இதனை ஒப்பிடுவர் 8. காயம் 9. பிள்ளை 11. பிடிவாதம் 12. இது வந்தால் பத்தும் பறந்திடும் என்றார் ஔவையார் 13. கதிரவன் 14. மணிமேகலையில் வரும் ஒரு பாத்திரம் 15. கமலம் 16. முழுமை 17. குழந்தை குழம்பி விட்டது 20. ஊழ்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 25 - 04 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நோய் தீர்க்கும் பிராணாயாமப் பயிற்சி!

இந்து சமயத்தில் பிராணாயாமம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

பிராணன் மனதுடன் தொடர்புடையது. மனதின் மூலம் இச்சா சக்தி மற்றும் அதன் மூலம் ஜீவாத்மாவுடனும், பின்னர் பரமாத்மனுடனும் அது தொடர்பு கொண்டு விளங்குகிறது. மனதின்மூலம் செயல்படும் சிறிய பிராண அலைவுகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதை நீங்கள் தெரிந்து கொண்டால் உலகளாவிய பிராணனைக் கட்டுப்படுத்தும் ரகசியம் உங்களுக்குத் தெரியவரும்.

பிராணனைக் கட்டுப்படுத்தமுடிந்தால் மானசிக மற்றும் சாரீரக சக்திகள் யாவற்றையும் உங்களால் கட்டுப்படுத்த இயலும்.

மின்சாரமோ, காந்தமோ எந்தச் சக்தியாகட்டும், அனைத்தையும்கட்டுப்படுத்த யோசிக்கமுடியும்.

ஒரு சிலர் பிறரைக் காட்டிலும் அதிக ஆற்றல், கவர்ச்சி உள்ளவர்களாக இருக்கின்றனர். எல்லாம் பிராணனின் சக்தியினால் தான். யோகி தெரிந்து செய்வதை இத்தகையோர் தாங்கள் அறியாமலேயே பிறர்மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

**பிராணாயாமப் பயிற்சியின் நன்மைகள்:**

சுவாசத்துடன் தொடர்புடையது பிராணாயாமம் எனினும் அது உடலின் பல்வேறு உறுப்புகளுக்கும் உரிய ஒரு நல்ல பயிற்சியாய் அமைகிறது.

எல்லா வியாதிகளையும் போக்கி ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்கிறது. ஜீரண சக்தியை அதிகமாக்குகிறது. நரம்பு மண்டலத்திற்கு புத்துயிர் ஊட்டுகிறது. காமத்தை அகற்றுகிறது. குண்டலினி சக்தியை எழுப்புகிறது:

பிரணாயாமம் பயிலுபவர் நோயினின்று விடுபட்ட லேசான உடற்கட்டைப் பெற்று விளங்குவர். அவரது தோற்றமும் அழகானதாக இருக்கும். குரல் இனிமையாக இருக்கும். சரீரத்திலிருந்து ஒரு இனிய மணம் பரவும்.

நல்லபசி, இனிமை, கவர்ச்சியான தோற்றம், நல்லாற்றல், வலிமை, ஊக்கம் ஆரோக்கியம். மன ஒருமைப்பாடு முதலிய அனைத்தையும் பிரணாயாமப் பயிற்சி ஒருவருக்கு நல்கிறது.

**நோய் தீர்த்தல்:**

பிராணாயாமம் பயிலுபவர்கள் வியாதிகளைக் குணப்படுத்த பிராணனைச் செலுத்தமுடியும். கும்பகப் பயிற்சிமூலம் திரும்பவும் அவர்கள் வெகுவிரைவில் பிராணனைப் பெறமுடியும்.

வாதநோயாளி ஒருவர் இருந்தால், உங்கள் கைகளால் அவரது கால்களை மெதுவாகப்பிடித்துவிடுங்கள். அப்படிச் செய்கையில் உங்கள் கைகள்மூலம் பிராணன் நோயாளியிடம் செல்வதாக எண்ணுங்கள். உடனேயே நோயாளி வெதுவெதுப்பை உணர்ந்து நோயினின்றும் விடுபட்டு சக்தியைப் பெறுவார்.

முதலில் ஓரிருமுறை உங்களை நீங்களே குணமாக்கிக் கொள்வதில் பயிற்சி பெறுங்கள். உங்களது உள்ளாற்றல் பெருகும். மென்மையாகப் பிடித்து விடுவது மற்றும் உங்களது. காந்தசக்தியுடன் கூடிய தொடுதலினால் தலை

**- தொகுப்பு: க. கனகராசா -**

வலி, குடல்நோய் போன்ற எந்த வியாதியையும், உங்களால் குணப்படுத்த இயலும்.

கல்லீரல், மண்ணீரல், வயிறு போன்ற எந்த உறுப்பை நீங்கள் குணப்படுத்த விரும்புகிறீர்களோ அந்தப் பகுதியில் உள்ள செல்களுக்கு கீழ்க்கண்டவாறு உத்தரவிடுங்கள். 'ஏ செல்லுகளே, உங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யுங்கள். நீங்கள் இவ்விதம் செய்யவேண்டுமென்று நான் உங்களை உத்தரவிடுகிறேன். அவை உங்கள் ஆணைக்குக்கட்டுப்படும்.

அந்தச் செல்லுகளுக்கும் உள்ளடக்கிய அறிவு இருக்கிறது. உங்கள் பிராணனை மற்றவர்களுக்குச் செலுத்துகையில் உங்களது இஷ்ட மந்திரத்தை ஜெபியுங்கள். முயன்று பாருங்கள். உங்களால் முடியும்.

நோயுற்ற பகுதிகளுக்கு பிராணனைச் செலுத்தும் விஷயத்தில் நம்பிக்கை, கற்பனை, கவனம், ஆர்வம் முதலானவை பெரும் பங்குவகிக்கின்றன. மன ஒருமைப்பாட்டிலும் முன்னேற நீங்கள் தொட்டாலேபோதும் வியாதிகள் பூரணமாகக் குணமடைவதைக் காண்பீர்கள்.

அதற்கும் மேலே உயர்ந்த நிலையில் வெறும் எண்ணத்தாலேயே பல வியாதிகள் குணப்படுத்தப்படுகின்றன.

**வைத்திய சஞ்சீவி**

தூரத்தில் வசிக்கும் உங்கள் நண்பர் ஒருவருக்கு வெட்ட வெளியின் மூலம் நீங்கள் பிராணனை அனுப்ப முடியும். இது நேரில் தோன்றாச் சிகிச்சை முறையாகும்.

கம்பியில்லாத தந்தி முறை போல பிராணன் கட்புலனாகாது பயணம் செய்து மின்னல் வேகத்தில் இலக்கை அடைகிறது. குணப்படுத்துபவரின் எண்ணத்துடன் கூடிய பிராணன் வெளி நோக்கிப் பாய்கிறது.

கும்பகப் பயிற்சியின் மூலம் நீங்கள் பிராணனைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு நெடு நாளைய முறையான பயிற்சி தேவை.

பிறருக்குக் கொடுப்பதால் உங்களிடம் பிராணசத்தி குறைந்து போய்விடும் என்று எண்ணாதீர்கள். நீங்கள் அதிகம் கொடுக்கக் கொடுக்கப் பிரபஞ்ச சக்தியிலிருந்து அது மென்மேலும் உங்களிடம் வந்து சேரும். அதுவே இயற்கையின் நியதி.

சாதாரண பிராணாயாமப் பயிற்சிகளைக் குரு ஒருவரின் உதவியின்றியே நீங்கள் பயிலலாம். வெகுநேரம் கும்பகத்தை நீங்கள் பயில விரும்பினால்தான் குரு ஒருவரின் உதவி உங்களுக்குத் தேவை.

கவனமாக இருந்து நீங்கள் பகுத்தறிவையும் பயன்படுத்துவீர்களேயாகில், பிராணாயாமம், ஆசனங்கள் போன்றவற்றால் எவ்வித தீங்கும் நேரிடாது. வீணே மக்கள் இது பற்றிக் கலவரமடைகின்றனர். கவனமில்லாவிடில் அனைத்திலும்தான் ஆபத்து உள்ளது.

பிராணாயாமப் பயிற்சியின் போதும் உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும். லேசான எளிதில் ஜீரணமாகக்கூடிய சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். புலன் ஈடுபாடுகளிடம் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும்.

சுவாசத்தை நிறுத்தும் பயிற்சியில் முடிந்த அளவே அதைச் செய்ய வேண்டுமே ஒழிய அளவு மீறிப் போகக் கூடாது. முதலில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு வெறும் உட்சுவாச வெளிச்சுவாசப் பயிற்சிகளை மட்டுமே செய்ய வேண்டும். மூச்சை உள்ளிழுக்கும்போது மிக மிக மெதுவாக அதைச் செய்ய வேண்டும். இது போன்ற நியமங்களைக் கடைப்பிடித்தால் பிராணாயாமப் பயிற்சியில் எந்தவித பயமும் இருக்கத் தேவையில்லை.

**சில முக்கிய அறிவுரைகள்:**

பிராணாயாமப் பயிற்சியில் வெற்றி பெறச் சரியான ஆசனம் இன்றியமையாதது. ஆசனத்தில் முழு அளவு வெற்றி கிட்டும் வரை பிராணாயாமப் பயிற்சியை ஒத்திப் போட வேண்டாம். ஆசனத்தைப் பயின்றுகொண்டே பிராணாயாமத்தையும் பயிலலாம். காலக் கிரமத்தில் வெற்றி கிட்டும்.

பிராணாயாமம் பயிலும் அறை காற்றோட்டமில்லாததாகவோ, ஈரமாகவோ இருத்தல் கூடாது. அது காய்ந்தும், காற்றோட்டம் உள்ளதாயும் இருக்கவேண்டும். அதிக குளிர், உஷ்ணம் இல்லாத திறந்த வெளியிலோ செய்யலாம். கோடைகாலத்தில் அதிகாலை நேரத்தில் மட்டுமே செய்தால் போதும்.

கோடையில் உடலைக் குளிர்விக்க சீதலிப்பயிற்சியை செய்யலாம். எப்பொழுதும் உட்சுவாசம், வெளிச்சுவாசத்தை மெதுவாகவே செய்ய வேண்டும். எந்த வித சப்தத்தையும் அந்தச் சமயங்களில் எழுப்பாதீர்கள். பயிற்சியின் எந்த நிலையிலும் எந்த விதமான கஷ்டமும் தோன்றக் கூடாது. அதைச் செய்கையில் மகிழ்ச்சியும், உற்சாகமும் தோன்றவேண்டும். வீணான களைப்பு எதையும் உணரக் கூடாது.

களைப்படையும் வரை பிராணாயாமத்தை செய்ய வேண்டாம். அரைமணி நேர ஓய்வு தேவை.

பிராணாயாம பயிற்சியின் போது உங்கள் இணைப்பு மந்திரத்தை ஜபியுங்கள். இது தாய யோகமாகும். ஒழுங்கான பிராணாயாமப்பயிற்சியின் மூலம் முறையான சுவாசத்தைப் பெற்று விளங்க வேண்டும்.

வெறும் காற்றை விடப் பிராணனையே சுவாசிக்கின்றீர்கள் என்பதை நினைவில் வையுங்கள். சுவாசத்தின் பின்னணியில் உள்ள இந்த மேலான உயிர்ச்சக்திகளை உணருங்கள். ★

## பொது அறிவுப்போட்டி இல. 37

1. உலகின் இரும்புச் சீமாட்டி என்று வர்ணிக்கப்படுவர் இவர் ... ?
   ... ... ... ... கொரஸோன் அக்யூனோ / மார்கரட் தாட்சர்
2. அண்மையில் தம்மை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய நாடு எது?
   ... ... ... ... லித்துவேனியா / நமீபியா
3. மனிதனுக்குத் தோழனான கடல் பிராணி இது? ... ... சுறா / டொல்பின்
4. தெற்கில் இருந்து வீசும் காற்று எது? ... ... ... தென்றல் / கொண்டல்
5. உலகிலே மிகப்பெரிய ஜனநாயக நாடு எது? ... ... இந்தியா / அமெரிக்கா
6. உலகில் அதிகம் மழைபொழியும் இடம்? ... ... சிரபுஞ்சி / காஷ்மீர்
7. 'புரட்சிக்குயில்' எனப்போற்றப்படும் கவிஞர்?... பாரதிதாசன் / சரோஜினிதேவி
8. அற நூல்களில் இதுவும் ஒன்று? ... ... ... ... ... மகாபாரதம் / கீதை
9. 'முடியாது' என்ற வார்த்தையை அகராதியில் இருந்தே நீக்க வேண்டும் என்று சொன்னவர் யார்? ... ... ... நெப்போலியன் / அலெக்சாந்தர்
10. உலகில் அதிகளவு கோப்பி உபயோகிக்கும் நாடு? ... ..அமெரிக்கா / ஜப்பான்
11. சமீபகாலமாக மக்களைப் பயமுறுத்தும் நோய் எது?
    ... ... ... ... எய்ட்ஸ் / மூளைக்காய்ச்சல்
12. உலக விந்தைகளில் இதுவும் ஒன்று? ... ... தாஜ்மகால் / அஜந்தாகுகை

பெயர்:- ............... ............... .. .....
விலாசம்:- ............... ...............................
............... .........................

பொது அறிவுப்போட்டி இல: 37
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

———————— இங்கே வெட்டுக ————————

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 18 - 04 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| **முதலாம் பரிசு:** | **100 ரூபா** |
| **இரண்டாம் பரிசு:** | **50 ரூபா** |
| **மூன்றாம் பரிசு:** | **25 ரூபா** |


# இப்பொழுது, குஷ்டரோகிகளுக்கும் வளமான எதிர்காலம் உண்டு.





இவர் கற்பிட்டியைச் சேர்ந்த விமல் தயாரத்ன

இவர் ஒரு காலத்தில் குஷ்டரோகத்தினுல் பீடிக்கப்பட்டிருந்தார். ஒருவேளை, வேதனையும் விரக்தியும் நிறைந்த வாழ்வையே இவர் கழிக்க நேரிட்டிருக்கும். ஆனுல் நவீன மருந்துகளினுல் இவருக்கு நம்பிக்கையும் புது வாழ்வும் கிடைத்துள்ளன. இன்று இவருக்கு வளமான எதிர்காலம் பிறந்துள்ளது. நிரந்தர தொழில். அன்பான மனைவி. அத்துடன் அவர்களுக்கு முதலாவது குழந்தையும் பிறக்கப் போகிறது.

ஆம். விமல் செய்ததைப் போலவே நோயின் அறிகுறிகளை வேளைக்கே இனங்கண்டு முறைப்படி சிகிச்சை அளித்தால் நவீன மருந்துகள் மூலம் எவ்வித அங்க விகாரங்களுமின்றிக் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தலாம்.

குஷ்டரோகத்தின் ஆரம்ப அறிகுறிகள்
* சருமத்தில் நமைச்சல் அளிக்காத, வெளிறிய அல்லது செந்நிறத் தடங்கள் தோன்றும்.
* இந்தத் தடங்களில் உணர்வோ வலியோ இருக்காது.
* கை கால்களில் விறைப்பு ஏற்படக்கூடும்.
* தடங்களுக்குப் பதிலாகக் கட்டிகள் அல்லது கழலைகள் தோன்றக்கூடும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
சீபா கெய்கி குஷ்டரோக நிதியம்

மேலதிக விபரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல மருத்துவ மாது, பொதுச் சுகாதாரத் தாதிமார் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறலாம்.

CGL 3438


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை.
ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன.

விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
சமூகக்கல்வி — திரு. திருக்குமார்
வர்த்தகம் — திரு. வரதன்
ஆங்கிலம் — திரு. ஹரிதாஸ்

சஞ்சீவி
# சஞ்சிகை
14 - 04 - 1990 சனிக்கிழமை

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை
A/L DAY CLASS
நடைபெறுகின்றன.

பொருளியல் — திரு. சண்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகன்
— திரு. வாசன்
அளவையியல் — திரு. சயந்தன்
தமிழ் — திரு. கணேஷ்
இந்து நாகரீகம் — திரு. MR.

# அமெரிக்க சமாதானத் திட்டத்தை பின் தள்ளிய இஸ்ரவேலின் பிடிவாதப் போக்கு

## 42 வருடங்களின் பின் கிடைத்த சந்தர்ப்பம் நழுவுகிறது

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சுமார் 10 மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கா ஒரு சமாதானத் திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தது. சமாதானத்திட்டத்தை ஏற்பதா அல்லது இல்லையா என்பதில் இஸ்ரவேல் கூட்டரசாங்கத்தில் கருத்து முரண்பாடு உருவானது. இதன் காரணமாக இஸ்ரவேல் அரசாங்கமே தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த 42 வருடகால இஸ்ரவேல் வரலாற்றில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலம் இஸ்ரவேலில் அரசாங்கம் ஒன்று வீழ்ச்சி அடைந்தது இதுவே முதல் தடவை. அத்துடன் மத்திய கிழக்குத் தீர்வுக்கான சமாதான வாய்ப்புகளும் பின் நோக்கித் தள்ளப்பட்டுவிட்டன.

### 15 மாதம் நீடித்த கூட்டரசு

தற்போது வீழ்ச்சி அடைந்துள்ள இஸ்ரவேல் கூட்டரசாங்கம் 15 மாதங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்தது. வலதுசாரி லிகுட் கட்சியும் (Right wing Likud) தொழிற்கட்சியும் (Labour) இந்தக் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்திருந்தன. 120 அங்கத்தவர்களாகக் கொண்ட இஸ்ரவேல் நாடாளுமன்றமான கெனெஸ் செட்டில் (Knesset) லிகுட் கட்சிக்கு 40 எம்பிக்களும் தொழிற்கட்சிக்கு 39 எம்பிக்களும் இருந்தனர். மற்றும் நான்கு சிறிய கட்சிகள் சார்பாகப் 18 எம்பிக்கள் இருந்தனர். லிகுட் கட்சித் தலைவர் யிட்ஷாக் ஷாமிர் (Yitzhak Shamir) பிரதமராகவும் தொழிற்கட்சித்தலைவர் சைமன் பெரெஸ் (Shimon Peres) உதவிப் பிரதமராக இருந்தார்கள். அமைச்சரவையில் இரு கட்சிகளுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமெரிக்க சமாதானத்


சைமன் பெரெஸ்

திட்டத்துக்கு சைமன் பெரெஸ் தலைமையிலான தொழிற்கட்சி ஆதரவு தெரிவிக்கிறது. ஆனால் பிரதமர் யிட்ஷாக் ஷாமிரின் லிகுட் கட்சி எதிர்க்கிறது.

அமெரிக்க சமாதானத் திட்ட நகல் இஸ்ரவேல் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என்று உதவிப் பிரதமர் சைமன் பெரேஸ் கோரினார். இதனை அடுத்து பிரதமர் யிட்ஷாக் ஷாமிர், சைமன் பெரெஸைப் பதவி நீக்கம் செய்தார். இதனைத் தொடர்ந்து தொழிற்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் பதவி விலகினர்.

இரு தினங்களின் பின் தொழிற்கட்சியால் லிகுட் அரசு மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் 60 — 55 வாக்குகளால் நிறைவேறியது. யிட்ஷாக் ஷாமிரின் அரசாங்கம் வீழ்ச்சி அடைந்தது. தற்போது இஸ்ரவேல் ஜனாதிபதி ஷெய்ம் ஹெர்சொக் (Chaim Herzog) புதிய அரசாங்கம் அமைப்பதற்காகத் தொழிற்கட்சிக்கு 6 வாரகால அவகாசம் கொடுத்துள்ளார்.

### அமெரிக்க சமாதானத் திட்டம்

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் (James Baker) பத்து மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க சமாதானத் திட்டத்தை அறிவித்திருந்தார்.

அதன் விவரம் வருமாறு:-


★ வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தலைமையில் எகிப்திய — இஸ்ரவேலிய வெளி விவகார அமைச்சர்கள் மாநாடு கூட்டப்பட வேண்டும். பலஸ்தீன மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யப் பலஸ்தீனக் குழு ஒன்று அம் மாநாட்டில் தெரிவு செய்யப்பட வேண்டும்.

★ இரண்டாவது கட்டமாக எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கினால் (Hosni Mubarak) தலைநகர் கெய்ரோவில் ஒரு மாநாடு கூட்டப்பட வேண்டும். வாஷிங்டன் மாநாட்டில்

உலக உலா

தெரிவு செய்யப்பட்ட பலஸ்தீனக் குழு இந்த மாநாட்டில் பங்குபற்ற வேண்டும். கெய்ரோ மாநாட்டில் இஸ்ரவேல் குழு ஒன்றும் பங்குபற்றும் ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் தேர்தல்களை நடத்துவது பற்றி கெய்ரோ மாநாட்டில் முடிவு செய்யப்படும்.

★ ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவில் நடைபெறும் தேர்தலில் தெரிவு செய்யப்படும் பலஸ்தீனப் பிரதிநிதிகள் ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸா


யிட் ஷாக் ஷாமீர்

விலும் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை இஸ்ரவேல் அரசாங்கத்துடன் நடத்துவர்.

★ ஜோர்தானின் மேற்குக் கரைக் காஸா ஆகியவற்றுக்கு வழங்கப்படவேண்டிய அந்தஸ்து குறித்து 5 வருடகாலத்துக்குள் தீர்மானிக்கப்படும்.

இதுவே அமெரிக்காவின் சமாதானத் திட்டமாகும்.

### பி. எல். ஓ

இந்த சமாதானத் திட்டத்தை இஸ்ரவேல் ஏற்பதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்காகப் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் (P. L. O) மீது அமெரிக்கா சில நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்திருந்தது.

அதற்கு இணங்கவே இஸ்ரவேலை பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யஸீர் அரபாத் (Yasir Arafat) அங்கீகரித்தும் பயங்கரவாதத்தைக் கண்டித்தும் அறிக்கை விடுத்திருந்தார்.

இந்த அறிக்கை வெளிவந்து ஒரு வருடமாகியும் இஸ்ரவேல் பிரதமர் யிட்ஷாக் ஷாமிரின் இழுத்தடிப்பு தற்போது இஸ்ரவேலில் அரசியல் நெருக்கடியை உருவாக்கி ஆட்சிக் கவிழ்ப்பில் முடிவடைந்திருக்கிறது.

### 3 யுத்தங்கள்

1949 ஆம் ஆண்டு இஸ்ரவேல் என்ற நாடு பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் யூதர்களான இஸ்ரவேலர்களுக்கும் அரபுக்களுக்கும் இடையில் 3 யுத்தங்கள் நடந்துமுடிந்து விட்டன. 1949 க்கு முன்னர் இது பலஸ்தீனம் என்ற பெயரில் பிரிட்டிஷ் காலனித்துவ நாடாக இருந்தது.

அரபு நாடுகளுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான முதலாவது யுத்தம் இஸ்ரவேல் பிரகடனம் செய்யப்பட்ட ஆண்டான 1949 இல் ஏற்பட்டது.

இரண்டாவது யுத்தம் 1967 ஜூன் மாதமும் மூன்றாவது யுத்தம் 1973 அக்டோபர் மாதமும் நடைபெற்றன.

அரபு நாடுகளுக்கு பெரும் தோல்வியை ஏற்படுத்திய யுத்தமே 1967 ஜூன் யுத்தம் ஆகும்.

6 தினங்கள் மட்டும் நீடித்த இந்த யுத்தத்தில் எகிப்துக்குச் சொந்தமான சினாய் பாலைவனத்தின் முழுப்பகுதியையும், சிரியாவின் கோலன் குன்றுகளையும், ஜோர்தானின் மேற்குக்கரையையும், காஸாவையும் இஸ்ரவேல் கைப்பற்றி இருந்தது.

இவற்றுள் எகிப்துக்குச் சொந்தமான சினாய் பாலைவனம் 1979 ஆம் ஆண்டு காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்துக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

காம்ப்டேவிட் ஒப்பந்தத்தில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் அப்போதைய இஸ்ரவேல் பிரதமர் பெகின், அப்போதைய எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத் ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். ஜிம்மி கார்ட்டரின் பதவிக் காலத்தில் அமெரிக்க அந்தஸ்தை சர்வதேச அரங்கில் உயர்த்திய அரிய சாதனையாக இது கருதப்பட்டது.

இஸ்ரவேலை ஆயுத பலத்தால் வெல்லமுடியாது என்றதை 1973 அக்டோபர் யுத்தத்தின் பின்பு எகிப்து உணர்ந்தது. காம்ப் டேவிட் ஒப்பந்தத்துக்கு எகிப்தை இட்டுச்சென்றது இதுதான் என்றும் கூறலாம்.

காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் பின் எகிப்தும் இஸ்ரவேலும் நட்புநாடுகளாகிவிட்டன. அத்துடன் எகிப்தின் உதவி கிடைக்காமல் போனதால் ஜோர்தான், சிரியா ஆகிய இஸ்ரவேலுடனான எல்லை நாடுகளும் இஸ்ரவேலுடனான முறுகல் நிலையைத் தணித்துக்கொண்டன. தற்போது அரபு நாடுகளுக்கான சோவியத் யூனியனின் ஆயுத உதவிகளும் குறைக்கப்பட்டிருப்பதால் இஸ்ரவேல் மீதான அரபு நாடுகளின் நெருக்குதல்கள் மேலும் குறைந்துவிட்டன.

### பலஸ்தீனரின் எழுச்சி

ஆனால் இந்த நெருக்கடி கடந்த இரு ஆண்டுகளாக மற்றும் ஒரு கோணத்தில் இருந்து உருவானது.

ஜோர்தாவின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள பலஸ்தீன மக்கள் சுயநிர்ணய உரிமைகோரிக் கிளர்ச்சி (Intifadeh) செய்ய ஆரம்பித்தனர். இந்தக் கிளர்ச்சி தற்போது 28 ஆவது மாதத்தை அடைந்துள்ளது. இக்கிளர்ச்சி காரணமாக இதுவரை நூற்றுக்கணக்கான பலஸ்தீன மக்கள் இஸ்ரவேல் துருப்புக்களினால் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன மக்களின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண்பதுமே அமெரிக்க சமாதானத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும்.

### சோவியத் யூதர்கள் இஸ்ரவேல் வருகை

சோவியத் யூனியனிலிருந்து தற்போது பெருமளவு யூதர்கள் இஸ்ரவேலுக்கு வந்து கொண்டிருப்பதால் அமெரிக்கா தனது சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று பெரும்பாலான அரபுநாடுகள் கருதுகின்றன.

பலஸ்தீனர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஜோர்தானின் மேற்குக்கரையிலும் காஸாவிலும் சோவியத் யூதர்களைக் குடியேற்ற இஸ்ரவேல் திட்டம் வகுப்பதாக அரபு நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றன.

சோவியத் யூதர்களை ஜோர்தானின் மேற்குக்கரையிலும் காஸாவிலும் குடியேற்றுவது மூலம் அந்த இரு பிரதேசங்கள் மீதான பிடியை இறுக்கமுடியும் என்று இஸ்ரவேலில் உள்ள யூதகுடியேற்றவாதிகள் இயக்கம் (Jewish Settlers Movement) கருதுகிறது.

இஸ்ரவேல் அரசு வீழ்ச்சியால் தற்போது பின் தள்ளப்பட்டுள்ள அமெரிக்க சமாதானத்திட்டத்தின் தலைவிதி இன்னும் இஸ்ரவேலிடமே இருந்து வருகிறது.

தற்போது இஸ்ரவேலில் தொழிற்கட்சி அரசு அல்லது லிகுட் கட்சி அரசு அல்லது மீண்டும் கூட்டரசு உருவாகும் சாத்தியம் இருந்து வருகிறது.

சைமன் பெரெஸ் தலைமையிலான தொழிற்கட்சி பதவிக்கு வருமானால் அமெரிக்க சமாதானத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடும். ஆனால் அத்திட்டம் நடைமுறையில் வரும்போது தொழிற்கட்சியும் உள்நாட்டில் பெரும் எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டிவரும். ★

## நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனுதவி வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.
சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org